DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
i HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
RE/MAX
Direct: 416-897-9155
Office: 416-221-0999

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1425 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 28, 2023

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
SIVARAJAH
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

TEAM SMART REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

# Scarborough-Rouge Park MP Gary Anandasangaree becomes a Member of Federal Cabinet as Minister of Crown and Indigenous Relations



# கனேடிய நாடாளுமன்றத்தில் முதல் தமிழ் பேசும் இலங்கைத் தமிழர் ஹரி ஆனந்தசங்கரி அமைச்சராகப் பதவியேற்றார்

ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்மவர் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் கனடா-பூர்வீகக் குடிகள் மற்றும் அவர்கள் உரிமைகள் மற்றும் உறவுகளுக்கு பொறுப்பான. அமைச்சராக பதவியேற்றுள்ளார் என்ற மகிழ்ச்சி தரும் செய்தியை நாம் பெருமையுடன் அறியத்தருகின்றோம்.


இங்கே காணப்படும் படத்தில் அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் கனடியப் பிரதமர் மற்றும் கனடாவின் ஆளுனர் நாயகம் ஆகியோரோடு மகிழ்ச்சியுடன் நிற்பதைக் காணலாம்.

(உள்ளே விபரமான செய்தி 17ம் பக்கத்தில்)

## Residents in Scarborough—Guildwood and Kanata–Carleton elected Ontario Liberal candidates Andrea Hazell and Karen McCrimmon as their newest Members of Ontario Parliament

## ஸ்காபரோ – கில்ட்வுட் மற்றும் கனாட்டா – கார்லேடன் தொகுதிகளின் வாக்காளர்கள் நேற்று நடைபெற்ற இடைத்தேர்தல்களில் ஒன்ராறியோ லிபரல் வேட்பாளர்களான அண்ட்ரியா ஹேசல் மற்றும் கரேன் மக்கிரிம்மன் ஆகியோர் வெற்றிபெற்றனர்

ஸ்காபரோவில் -கில்ட்வுட் மற்றும் கனாட்டா-கார்லேடன் தொகுதிகளின் வாக்காளர்கள் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற இடைத்தேர்தல்களில் முறையே ஒன்ராறியோ லிபரல் வேட்பாளர்களான அண்ட்ரியா ஹேசல் மற்றும் கரேன் மக்கிரிம்மன் ஆகியோரை மாகாண நாடாளுமன்றத்தின் புதிய உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுத்துள்ளனர். இதன் மூலம் ஒன்றாரியோ மாகாணத்தின் தற்போதைய ஆளும் கட்சியான கொன்சர்வேர்ட்டிவ் கட்சிக்கு ஒரு அதிர்ச்சியையும் இந்த தேர்தல் முடிவுகள் ஏற்படுத்தியுள்ளன



என்றும் அறியப்படுகின்ற.

(உள்ளே விபரமான செய்தி 7ம் பக்கத்தில்)

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

BIG BILLYARD INSURANCE GROUP
Great Coverage.
BIG Savings.
Iggy Thuray
Insurance Broker
thebig.ca/iggy
iggy@thebig.ca
416.814.7470
5.0 Google

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
CHAI
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004





# சிவபாலா ஆன்மீக சுற்றுலா

## வட தென்னிந்திய திருத்தல யாத்திரை, கேரளா உட்பட

**புறப்படும் திகதி: 12-09-2023** **திரும்பும் திகதி: 06-10-2023**

**மும்பை:** சீரடி சாய்பாபா, சனீஸ்வரன் கோவில்
**காசி:** விஸ்வநாதர் கோவில், விசாலாட்சி கோவில் அன்னபூரணி கோவில்
**மதுரை:** மீனாட்சி அம்மன் கோவில், ஆறுபடை வீடுகள், ஆதிபராசக்தி கோவில்
**கும்பகோணம்:** கும்பேஸ்வரர் கோவில், மாமாங்கம்,
நவக்கிரக கோவில்கள் ஒன்பது,
கோவிந்தபுரம் பாண்டுரங்கன் கோவில்
**இராமேஸ்வரம்:** சிவன் கோவில்
**காரைக்குடி:** பிள்ளையார் பட்டி கோவில்
**காஞ்சிபுரம்:** ஏகாம்பரேஸ்வரர் கோவில், காமாட்சி கோவில்,
வரதராஜனுப்பெருமாள் கோவில்
**வேலூர்:** ஸ்ரீ நாராயணி பீடம், பொற்கோவில்

**திருவண்ணாமலை:** அருணாசலேஸ்வரர் கோவில்
**திருநெல்வேலி:** குற்றாலம், தென்காசி, நெல்லையப்பர் கோவில்,
அகத்தியர் அருவி, நவ திருப்பதிகள்
**கன்னியாகுமரி:** பகவதி அம்மன் கோவில், சுசீந்திரம்,
ஆஞ்சநேயர் கோயில்
**திருவனந்தபுரம்:** பத்மநாபர் கோவில்
**குருவாயூர்:** கிருஷ்னர் கோவில்
**கேரளா:** சோட்டானிக்கரை பகவதி அம்மன் கோவில்
**ஆலப்புழா:** படகு சவாரி
**தஞ்சாவூர்:** பெரிய கோவில்
**சிதம்பரம்:** நடராஜர் கோவில்

யாத்திரையில் பங்குகொள்ள விரும்புவோர்
09-08-2023ற்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**சிவா 416.854.5015** **பாலா 647.450.8757**

We acknowledge the financial support of the Government of Canada

# கதிரோட்டம்

## வலிகள் நிறைந்துள்ள வடக்கிலும் கிழக்கிலும் தேர்தல்கள் தேவைதானா?

இலங்கையின் அனைத்து மாகாண சபைகளும் கலைக்கப்பெற்று மாகாண அரசின் நிர்வாகங்கள் 'தேவையற்ற' வகையில் ஆளுனர்களின் கைகளில் ஒப்படைக்கப் பெற்று அந்த மாங்கனித் தீவின் நிர்வாகம் கேலிக் கூத்தாக மாறிவிட்டது. வடக்கு மாகாணத்தின் ஆளுனர் அவர்கள் இலங்கையில் நிர்வாக சேவையில் பல உயர் பதவிகளை வகித்தவர். நிறைந்த அனுபவம் கொண்டவர். ஏதோ! தன்னாள் இயலுமான வகையில் தனது நிர்வாகப் பணியைச் செய்து கொண்டுள்ளார். ஆனால் கிழக்கு மாகாண ஆளுனர் தனது தாயகமான தமிழகத்திற்கு அடிக்கடி பயணம் செய்து அங்கு முதல்வர் ஸ்டாலினை சந்திக்கத் துடிக்கின்றார். 'கலைஞர்' கருணாநிதியின் நூற்றாண்டு விழாவையும் கொண்டாடத் துணிந்தவர். பின்னர் 'வால் துண்டிக்கப்பட்டவராக தற்போது அமைதியாகிவிட்டார்.

இவ்வாறாக தமிழர் பகுதிகளில் மாகாண நிர்வாகங்கள் நிதி நெருக்கடிகளுக்கு மத்தியில் நகர்ந்து செல்லுகின்றன. ஆனால் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் வாழ்ந்து வரும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் 'மாகாண சபைகளின்' தேர்தல்கள் நடத்தப்பெற வேண்டும் என்ற கோரிக்கைகளை இலங்கை ஜனாதிபதியிடம் விடுத்தவண்ணம் உள்ளார்கள். அத்துடன் இந்தியப் பிரதமர் மோடி அவர்களிடத்திலும் இதே வேண்டுகோளையே அனுப்பிய வண்ணம் உள்ளார்கள்.

வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் மக்களுக்கு தற்போதைக்கு மாகாண சபைத் தேர்தல்கள் தேவைதானா என்ற கேள்விகளை பலர் எழுப்பிய வண்ணம் உள்ளனர்.கிழக்கிலும் பார்க்க வட பகுதி மக்களுக்கு வலிகளும் சவால்களும் அதிகமாக உள்ளன. அவர்களில் மீனவர்கள் அனுபவிக்கும் பிரச்சனைகளும் அச்சுறுத்தல்களும் அளவிற்கும் அதிகமாக வளர்ந்து கொண்டே செல்கின்றன.

அவர்கள் செய்து வரும் மீன் பிடித் தொழிலுக்கு பல தடைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அவர்கள் சுதந்திரமான செய்து வந்த மீன் பிடித் தொழில்கள் அவர்களை செல்வந்தவர்களாக ஆக்கி விடாது என்பது அரசாங்கத்திற்கும் கடற்தொழில் அமைச்சருக்கும் நன்கு தெரிந்த விடயமே.

இன்னொரு பக்கத்தில் தனியாருக்குச் சொந்தமான காணிகளை மீண்டும் அரசுடைமையாக்கி அங்கு ஆயுதப் படைகளின் முகாம்களை அமைப்பதற்கான முயற்சிகள் திரை மறைவில் நடைபெற்று இறுதியில் களத்திற்கு கொண்டு வரப்படுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் மக்களும் பல்கலைக் கழக மாணவர்களும் மற்றும் சமூக ஆர்வலர்களும் மட்டுமே களத்தில் நின்று போராடவும் குரல் கொடுக்கவும் முன்வருகின்றார்கள். ஆனால் மக்களிடம் சென்று வாக்குகளைப் பெற்று தற்போது வங்குரோத்து நிலையை நாடும் ஏழை மக்களும் அடைந்திருந்தாலும் அனைத்து வசதிகளையும் பெற்று 'வசதிகளோடு' வாழும் பிரமுகர்களாக அந்த தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் காட்சி தருகின்றார்கள்.

இவ்வாறான ஒரு வலிகள் நிறைந்த காலப்பகுதியில் மாகாண சபையை நடத்துங்கள் என்று மக்கள் கேட்பதாகவும் தெரியவில்லை. மாறாக, தங்களுக்காக தொகுதிகளில் உதவியாளர்களாக உள்ள பதவி ஆசைகள் கொண்டவர்களுக்கு அரசியல் பதவிகளை வழங்கிவிடவே இவர்கள் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துங்கள் என்பதை மட்டும் அரசாங்கத்திடமும் அவர்கள நண்பராகத் தெரியும் ரணில் என்னும் ஜனாதிபதியிடம் கேட்ட வண்ணம் உள்ளார்கள்.

இவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பதே பயன் தராத ஒன்றாக உள்ள நிலையில் மாகாண சபையின் ஆசனங்களை கைப்பற்ற நினைப்பது தங்களுக்கு சுகபோக வாழ்க்கையைத் தந்து கொண்டிருக்கும் அரசியல் பதவிகளோடு அவற்றில் தங்கள் 'சகாக்களையும்' இணைக்கும் நோக்கம் ஒன்றிக்காகவே என்பது வெளிச்சமாகத் தெரிகின்றது!

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்
Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## இலங்கையில் மலையக நாடகக் கலைக்கு இராணுவம் மற்றும் பொலிஸார் தடை!



இலங்கையில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் தமிழ் நாடகம் நடத்தப்படுவதை தடுக்க தோட்ட நிர்வாகத்துடன் இணைந்து அரசாங்கத்தின் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட முயற்சி தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜூலை 09 ஆம் திகதி மாலை, பொகவந்தலாவ, கொட்டியாகல தோட்டத்தில் அரங்கேற்றப்படவிருந்த லயத்து கோழிகள் நாடகத்தை தடுக்க இராணுவம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படை இணைந்து செயற்பட்டதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஜூலை 26 ஆம் திகதி முறைப்பாடு செய்த, நாடகத்தின் நெறியாளர், எதிர்காலத்தில் இவ்வாறான கலைச் செயற்பாட்டு முயற்சிகளின் போது பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்த அச்சத்தை வெளிப்படுத்துகிறார்.

"இன்று நாங்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளோம். நாடகக் கலைஞன் என்ற வகையில் நீண்டகாலமாக இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றோம். அப்படி இருக்கையில் இராணுவம் எந்த அடிப்படையில் இதில் தலையீடு செய்கிறது? எதிர்காலத்தில் இவ்வாறான முயற்சிகளின் போது எமது பாதுகாப்பை எவ்வாறு உறுதி செய்வது?" என தோட்டத்தைச் சேர்ந்தவரும், நாடகத்துறையில் நீண்ட அனுபவத்தைக் கொண்டவருமான கலைஞர் இராசையா லோகநந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

மலையகத்தின் அனுபவம் வாய்ந்த நாடக கலைஞர் இராசையா லோகநந்தனின் நெறியாள்கையில் "லயத்து கோழிகள்" நாடகம் தொடர்பில் இராணுவம் விசாரணைகளை மேற்கொண்டதை ஒப்புக்கொண்ட கொட்டியாகலை தோட்ட நிர்வாகம், இராணுவத்திற்கு தகவல்களை வழங்கியதாகவும் முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

For All your Renovation Needs!

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva
416-706-8160

Basement for Rent

Scarborough நகரில் Neilson & Mclevin சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றில் ஒரு அறைகொண்ட Basement உடனடியாக வாடகைக்கு உண்டு. செப்டம்பர் மாதம் தொடக்கம் வழங்கலாம்.
விபரங்களுக்கு 416-299-4904

மருத்துவக் குணம் கொண்ட பத்தியக் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு


ரொறன்ரோவிற்கு மிக அருகில் மருத்துவக் குணம் கொண்ட பத்தியக் கோழிக் குஞ்சுகள் மற்றும் பிஞ்சு கோழிகள் விற்பனைக்குண்டு. இவையனைத்தும் திறந்த வெளியில் வளர்க்கப் பட்டவை. இயற்கையான வளர்ப்பு கொண்டவை.
தொடர்புகளுக்கு (647)920-5180

தெல்லிப்பளையில் காணிகள் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில் இரண்டு வெவ்வேறு காணிகள் உடனடியாக விற்பனைக்கு உள்ளன. ஒன்று 4 பரப்புவீடு கட்டக்கூடிய சதுரக் காணி. மற்றையது மூன்றரைப் பரப்புக் காணி. பழைய வீடு இடிந்த நிலையில் உள்ளது. இரண்டு காணிகளும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கு அருகாமையில் உள்ளன. மின்னினைப்பு போன்றவை இலகுவில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு : இ.பி. முத்துத்தம்பி - கனடா- 905 554 3435

வீடு விற்பனைக்கு





யாழ்ப்பாணம் உரும்பிராய் கிழக்கு சிவன் வீதியில் 4 பரப்பு காணி 7 படுக்கை அறைகளுக்கு 5 குளியலறைகளை கொண்ட அடுக்கு மாடி வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு பெறுமதி பேசி தீர்மானிக்கப்படும்
தொடர்புகளுக்கு :- 416-454-8936

# 13வது சீர்திருத்தம் குறித்து சிறீகாந்தா தெரிவித்த கருத்து

ஏமாற்றமே தொடரப்போகின்றது என்றால், 13வது திருத்தத்தை முற்றுமுழுதாக மறந்துவிட்டு, சாத்தியமான வேறு வழிமுறைகளை அரசியல் ரீதியாக எமது மக்கள் நாட வேண்டி இருக்கும் என தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் ந.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசியக் கட்சி இன்று (25.07.2023) வெளியிட்ட ஊடக அறிக்கையிலே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த அறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 13வது திருத்தச் சட்டத்தின் கீழான பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவது பற்றி அரசியல் கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நடாத்தியே தீர்மானிக்கப்படும் என ஜனாதிபதி அறிவித்திருக்கின்றார்.

பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவதை எதிர்க்கும் சகல தென்னிலங்கை அரசியல் சக்திகளுக்கும், அவர்களுடைய நோக்கம் நிறைவேறுவதற்கான நல்லதோர் சந்தர்ப்பத்தை இந்த பேச்சுவார்த்தைகள் வழங்கப்போகின்றன.

பேச்சுவார்த்தைகளில் எழப்போகும் எதிர்ப்புக்களை காரணம் காட்டி, இந்த விடயம் கைவிடப்படலாம் அல்லது கணிசமான காலத்திற்கு



ஒத்திவைக்கப்படலாம். இல்லையேல், பொலிஸ் அதிகாரங்களை வெட்டிக் குறைத்து, வலுவற்றதாக்கி, வெறும் கண்துடைப்பாக ஒரு சில அதிகாரங்களோடு மாத்திரம், மாகாண பொலிஸ் படையினை நிறுவுவதற்கு சிங்கள கட்சிகளுக்கிடையில் கருத்தொற்றுமை எட்டப்படுவதற்கும் வாய்ப்புக்கள் உள்ளன.


தமிழ் மக்களை பொறுத்தமட்டில், 13வது திருத்தத்தின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களில் எத்தவொரு மீளாய்வுக்கோ அல்லது சமரசத்துக்கோ இடமில்லை. மட்டுப்படுத்தப்பட்ட முறையில் அமைந்திருக்கும் இந்த அதிகாரங்களில் விட்டுக்கொடுப்புகளுக்கு இடமளிக்க முடியாது.

இலங்கை செய்திகள்

சிங்கள அரசியல் கட்சிகளும், அவற்றின் தலைவர்களும், எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாத ஆட்சேபனைகளின் அடிப்படையில், இந்த விவகாரத்தில் பிடிவாதம் காட்டினால் மாகாணங்களுக்கான பொலிஸ் அதிகாரங்கள் அர்த்தம் அற்றுப் போய்விடும். குறுகிய காலத்திற்குள் 13வது திருத்தத்தின் பிரகாரம் காணி, பொலீஸ் அதிகாரங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

தமிழ் மக்களின் இருப்போடும், பாதுகாப்போடும் சம்பந்தப்பட்ட இந்த விடயங்களில் இனிமேலும் ஏமாற்றப்பட தமிழ் மக்கள் தயாரில்லை. ஏமாற்றமே தொடரப்போகின்றது என்றால், 13வது திருத்தத்தை முற்றுமுழுதாக மறந்துவிட்டு, சாத்தியமான வேறு வழிமுறைகளை அரசியல் ரீதியாக எமது மக்கள் நாட வேண்டி இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைத் தமிழரான BBC ஊடகவியலாளர் ஜோர்ஜ் அழகையா காலமானார்



இலங்கைத் தமிழரான பி.பி.சீ சர்வதேச செய்தி சேவையின் சிரேஸ்ட ஊடகவியலாளர் ஜோர்ஜ் அழகையா தனது 67வது வயதில் காலமானார்.

இவர் பி.பி.சீ செய்தி சேவையின் ஆறு மணிச் செய்திகளை கடந்த 2007ம் ஆண்டு முதல் வாசித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் கடந்த காலங்களில் நிலவிய பதற்றமான சூழ்நிலையின் காரணமாக போதியளவு பாதுகாப்பு இல்லை எனக் கருதிய ஜோர்ஜ் அழகையாவின் பெற்றோர் ஆபிரிக்காவிற்கு குடிபெயர்ந்தனர்.

கடந்த 20 ஆண்டுகளாக பி.பி.சி செய்திகளை வழங்கிவந்த இவர் ருவாண்டா முதல் ஈராக் வரையிலான நாடுகளில் வன்முறைகள் கோலோச்சிய காலத்தில் அந்தந்த நாடுகளில் இருந்து துணிகரமான ஊடக பணியை செய்திருந்தார். இதற்காக அவருக்கு விருதுகளும் வழங்கப்பட்டிருந்தது.

நெல்சன் மண்டேலா, டெஸ்மன் டுடு, ரொபர்ட் முகாபே போன்ற பிரபலங்களை ஜோர்ஜ் அழகையா நேர்காணல் செய்துள்ளார்.

1994 இல் ஈராக்கின் குர்துகளுக்கு எதிரான சதாம் குசைனின் இனப்படுகொலையை வெளிப்படுத்தியதில் இவரது ஊடகப்பணி முக்கியானது.

புருண்டியில் நடந்த உள்நாட்டுப் போரைப் பற்றி அறிக்கை செய்ததற்காக 1994 ஆம் ஆண்டில் மன்னிப்புச் சபையால் ஆண்டின் சிறந்த பத்திரிகையாளராகவும் அவர் பெயரிடப்பட்டார். மேலும் ருவாண்டாவில் நடந்த இனப்படுகொலை குறித்து அறிக்கை செய்த முதலாவது பிபிசி ஊடகரும் இவர் தான்.

தென்னாப்பிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா, பேராயர் டெஸ்மண்ட் டுட்டு, ஐ.நா பொதுச் செயலாளர் கோபி அன்னான் உள்ளிட்ட பிரமுகர்களையும் இவர் செவ்வி கண்டிருந்தார். கடந்த சில ஆண்டுகளாக குடல் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட அவர் இந்த நோயுடன் போராடி இன்று அமைதியான மரணமடைந்தாக அவரது குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.

ஜோர்ஜ் அழகையாவின் மரண செய்தியைக் கேட்டு அனைவரும் நம்பமுடியாத அளவிற்கு வருத்தமாக உள்ளதாக பிபிசி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

மேலும், “ஜோர்ஜ் அழகையா ஒரு சிறந்த பத்திரிகையாளர் என்பதை விட, அவரது இரக்கம், பச்சாதாபம் மற்றும் அற்புதமான மனிதாபிமானத்தால் அனைவராலும் நேசிக்கப்பட்டவர்.” என பிபிசி குறிப்பிட்டுள்ளது.

# கடையடைப்புக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆதரவு




முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிக்கு நீதி கோரி வெள்ளிக்கிழமை (28.07.2023) நடைபெறவுள்ள போராட்டத்திற்கும் வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ள பூரண கடையடைப்புக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முழு ஆதரவு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 25.07.2023 செவ்வாய்க்கிழமை அன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

குறித்த ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் அழகராசா விஜயகுமார், சங்கத்தின் அழைப்பின் பேரில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (28.07.2023) வடக்கு கிழக்கு மாகாணங்களில் பூரண கடையடைப்பு மேற்கொள்வதுடன் அன்றையதினம் வட்டுவாகல் பாலத்தில் ஆரம்பித்து முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தை நோக்கி பேரணியொன்றும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பூரண ஆதரவினை வழங்குகின்றது. அதனுடன் அன்றைய தினம் அனுஷ்டிக்கப்படவுள்ள பூரண கடையடைப்பிற்கு எமது ஆதரவை தெரிவிக்கின்றோம். அந்த வகையிலே இன்று கறுப்பு ஜுலை வாரத்தை அனுஷ்டித்து கொண்டிருக்கின்ற வேளையிலும் எங்களுடைய தமிழ் மக்களுடைய பாரதூரமான பல்வேறுபட்ட பிரச்சினைகள் காணப்படுகின்றன. இந்த அகழ்வு பணியில் கூட காவல்துறையினர் மட்டுமே காணப்படுகின்றனர். மேலும் சர்வதேச அமைப்புகள் ஒன்றுமே காணப்படவில்லை.

இந்த அரசு எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை மேலும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. எங்களுடைய பிரச்சனையை வெளியுலகத்திற்கு தெரியப்படுத்தாது தங்களுக்குள்ளே மறைத்து கொண்டிருக்கின்றது. அந்த வகையிலே தமிழ் மக்களாகிய எங்கள் பிரச்சினைகள் வெளிப்படையாக தீர்வினை பெற வேண்டும்.

இன்றும் நாம் சுதந்திரமாக எமது நினைவேந்தல்களை கூட மேற்கொள்ள முடியாது இருக்கின்றோம். ஆகவே சரணடைந்த எங்களது காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டும். அந்த வகையிலே அனைத்து மக்களும் கட்சி பேதமின்றி தமிழ் தேசிய பாதையில் பயணிக்கும் அனைத்து கட்சிகளும் இதற்கு ஆதரவினை வழங்க வேண்டும் என்றார்.

# வவுனியாவில் வீடு புகுந்து கொடூர தாக்குதலில் உயிரிழந்த பெண்ணின் கணவரும் மரணம்

வவுனியா தோணிக்கல் பகுதியில் வீடொன்றுக்குள் நுழைந்த இனந்தெரியாத சிலர், வீட்டை எரித்ததோடு, அங்கிருந்தவர்கள் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்டதில் இளம் குடும்பப்பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன்,இவரது கணவரான சுகந்தன் உற்பட 10 பேர் பலத்த காயங்களுடன் வவுகியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இந்நிலையில் உயிரிழந்த இளம் குடும்பப் பெண்ணின் கணவரான சுகந்தன் இன்று (26) அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

தோணிக்கல் பகுதியில் வீடொன்றுக்குள் நுழைந்த இனந்தெரியாத சிலர், வீட்டை எரித்ததோடு, அங்கிருந்தவர்கள் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்டனர். இந்தத் தாக்குதலில் ஏற்கனவே இளம் பெண் ஒருவர் உயிரிழந்த நிலையில்,10 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் எரிகாயங்களுடன் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சுகந்தன் என்பவர் இன்று காலை உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இலங்கை மலையகத்தில் லிந்துலையில் தீ பரவல் 10 வீடுகள் தீக்கிரை 40 பேர் பாதிப்பு



லிந்துலை பெரிய ராணி வத்தை பகுதியில் தோட்டத் தொழிலாளர்கள் தொடர் குடியிருப்பில் ஏற்பட்ட தீ பரவலில் 10 வீடுகள் தீக்கிரையாகி 40 பேர் நிர்க்கதியாகி உள்ளதாக போலீசார் தெரிவித்தனர்.

மேற்படி சம்பவம் லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 475 யு கிராம சேவகர் பெரிய ராணிவத்தை இலக்கம் 01 தொடர் குடியிருப்பில் நேற்று இரவு (25) ஏற்பட்டுள்ளது. பிரதேசவாசிகள் இணைந்து தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த போதிலும் தீ பரவல் காரணமாக 10 வீடுகள் வீடுகள் முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளன.

தெய்வாதீனமாக எவருக்கும் உயிர் சேதங்களோ காயங்களோ ஏற்படாத போதிலும் அத்தியாவசிய ஆவணங்கள், உடுதுனிகள், தளபாடங்கள் உட்பட உடைமைகளுக்கு சேதங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த தீ விபத்தில் பாதிக்கப்பட்ட 10 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 40 பேர் தோட்டத்தில் உள்ள அம்மன் ஆலயத்திலும் கிறிஸ்தவ தேவாலயத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளன.

குறித்த தீ விபத்து மின்சார ஒழுக்கு காரணமாக ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் தெரிவிப்பதுடன் தீ விபத்துக்கான காரணத்தையும் ஏற்பட்ட தீ சேத விவரங்கள் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிளிநொச்சியில் சிறுவர் உரிமை பாதுகாப்பு வேலைத்திட்டம் ஒன்று கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டது










வேர்ள்ட் விசன் (உலக தரிசனம்) நிறுவனத்தின் ஏற்பாட்டில் குறித்த நகழ்வுநேற்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது.
கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் விழிப்புணர்வு பேரணியாக ஆரம்பமான குறித்த நிகழ்வு, யு9 வீதி ஊடாக கிளிநொச்சி சேவைச் சந்தையை சென்றடைந்தது.
குறித்த விழிப்புணர்வு பேரணியில் கரைச்சி பிரதேச செயலர், கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள், மக்கள், என பெருமளவானோர் கலந்து கொண்டனர்,

தொடர்ந்து கிளிநொச்சி சேவைச் சந்தையில் அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றது. நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச செயலாளர் ஜெயகரன், கல்வி, பொலிஸ், சுகாதார சேவை திணைக்களங்கள் மற்றும் வேர்ள்ட் விசன் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.
இதன் போது விழிப்புணர்வு நாடகம் அரங்கேற்றப்பட்டதுடன், சிறுவர் பாதுகாப்பு தொடர்பான மகஜரும் கையளிக்கப்பட்டது. மேலும் இன்றைய நாளின் நினைவாக சிறுவர் பாதுகாப்பு பாடலும் வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது அரசாங்க அதிபர் குறிப்பிடுகையில்,பெற்றோர் சிறுவர்களை கண்டிப்புடனான சுதந்திரத்தை முன்னெடுக்க வேண்டும். கண்டிப்பின் ஊடாக துன்புறுத்தல்களை மேற்கொள்ளக் கூடாது.
சிறார்களிற்கான சுதந்திரம் உள்ளது. அது கண்டிப்புடனான சுதந்திரம். அந்த சுதந்திரத்தை முறையாக மாணவர்கள் பின்பற்ற வேண்டும். மாணவர்களான உங்களுக்கு முதல் நண்பர்கள் பெற்றோர்.
என்ன விடயங்கள் நடந்தாலும் அதனை பெற்றோருடன் கலந்துரையாடுங்கள். அதன் மூலம் நல்ல நம்பிக்கையும், பாதுகாப்பும் உங்களுக்கு கிடைக்கும். அடுத்து ஆசிரியர்கள், அவர்களுடனும் உரையாடுங்கள்.
உங்களுக்கு தீங்கானதான விடயங்களை கையாள முனையாதீர்கள். நல்லதொரு சமூகத்துக்காக முனைப்புடன் செயற்படுங்கள் என அவர் தெரிவித்தார்.


Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்
Dr. Pushpa.V & Associates
Dentist
New Patients Welcome
Open 7 Days a week
சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்
Sunday by Appointment only

Scarborough
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187
Markham
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900

# யாழ்ப்பாண மாவட்டத்தில் வெங்காய பயிர் செய்கையில் இலை சுரங்க மறுப்பி தாக்கம் உரிய நடைமுறைகளை பின்பற்றுமாறு பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் கோரிக்கை



யாழ்ப்பாண மாவட்டத்தில், ஆக்கிரமிப்பு பீடையான வெங்காய இலை சுரங்க மறுப்பி தாக்கம் அதிகம் அவதானிக்கப்படுவதாக வட மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி அ.சிறிரங்கன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாண மாவட்டத்தின் சுன்னாகம், தெல்லிப்பளை, மாதகல் சங்கானை அச்சுவேலி, கோப்பாய் மற்றும்வடமராட்சி பிரதேசங்களில் வெங்காயச் செய்கையில் இலை சுரங்க மறுப்பி தாக்கமானதுஅதிகளவில் அவதானிக்க முடிகிறது.

ஆக்கிரமிப்பு பீடையான இலை சுரங்க மறுப்பி கடந்த காலங்களில் வெங்காயத்தில் சிறியளவிலானதாக்கத்தை ஏற்படுத்திய போதிலும் தற்பொழுது கூடியளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

வெப்பநிலை அதிகரிக்கும் போது பெண்நிறையுடலி பல தடவைகள் முட்டை இடுவதன் மூலம் பூச்சிகளின் எண்ணிக்கை அதிகரித்து தாக்கமும் அதிகரிக்கும்.

வாழ்க்கைக் காலத்தில் ஒரு பெண் இலை சுரங்க மறுப்பி இலை நுனியில் சூலிடப்படுத்தி மூலம்துளையினை ஏற்படுத்தி இலையின் உட்பரப்பில் முட்டைகளை இடும்.

இம்முட்டைகள் சிறிய0.5 மில்லிமீற்றர் அளவுடைய வெளிர் வெள்ளை நிறமுடையது. 46 நாட்களில் முட்டை பொரித்துகுடம்பியாகும். இக்குடம்பியின் நிறமானது ஆரம்பத்தில் வெள்ளை நிறத்திலிருந்து முதிர்வடையும் போது மஞ் சள்நிறமாக மாறும்.

இது மூன்று வளர்ச்சிப் பருவங்களை கொண்டது. இதனை வெற்றுக்கண்ணினால்அவதானிப்பது கடினம். குடம்பியானது இலை நுனியிலிருந்து கீழ்நோக்கி சுரங்க அமைப்பைஉருவாக்கி உட்புறத்திலிருந்து இழையங்களை உணவாக உட்கொள்கின்றது.

இதனால் வெள்ளைநிறகோடுகளை அவதானிக்க முடியும். தாக்கம் அதிகரிக்கும் போது இலைகள் எரிந்து வைக்கோல்நிறமாக மாறும்.கூட்டுப்புழு கடும் கபிலநிறத்தில் காணப்படும். 7 நாட்களில் குடம்பியானது கூட்டுப்புழுவாகமாற்றமடையும். கூட்டுப்புழு மண்ணில் அல்லது இலையின் அடிப்பகுதி சுரங்கத்தில் அல்லதுகுமிழில் காணப்படும்.

குடம்பியானது நிறையுடலியாக மாறும் செயற்பாடானது காலநிலையில்தங்கியிருக்கும். நிறையுடலி 3 மில்லிமீற்றர் நீளமுடையது. மஞ்சள் நிறதலையுடன் இளம் கறுப்பு நிறமாகும்.

மறுப்பி தாக்கத்தை முகாமைத்துவம் செய்தல் இலைச்சுரங்க மறுப்பியினை கட்டுப்படுத்தல் மிகவும் சவாலான ஒரு விடயமாகக் காணப்படும் நிலையில் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம் ஊடாகவே இதனை கட்டுப்படுத்தமுடியும்.

இலங்கை செய்திகள்

வயற் சுகாதாரத்தைப் பேணல்,அறுவடை முடிந்த பயிர் மீதிகளை உடனடியாக வயலிருந்து அகற்றி மண்ணில் காணப்படும் கூட்டுபுழுக்களை அழிப்பதற்காக உடனடியாக உழுதல் வரம்புகளில் காணப்படும் விருந்து வழங்கி தாவரங்களை அழித்தல், பயிர்சுழற்சியை மேற்கொள்ளல்,தூவல் நீர்பாசனத்தை மேற்கொள்வதோடுபின்வரும் விவசாய இரசாயனங்களில் ஒன்றை காலை 7.00 மணிக்கு முன்னர் அல்லதுமாலை 5.00 மணிக்கு பின்னர் சிபார்சு செய்யப்பட்ட அளவில் விசிறல் ஆகியவற்றை செய்ய வேண்டும்.

அபமற்ரின் புரோப்பினோபொஸ், ஸ்பெனோசைட், தயோசைக்கிளம் ஆகிய மருந்துகளை உரிய நடைமுறைகளை பின்பற்றி விசுறுவதோடு மேலதிக சந்தேகங்கள் இருப்பின் மாகாண பிரதி விவசாய பணிப்பாளர் அல்லது தமது பகுதிகளில் உள்ள விவசாய போதனா ஆசிரியர்களை நாடுமாறு அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நிர்வாகத்தின் மனிதாபிமானமற்ற செயலுக்கு அங்கஜன் எம்.பி கண்டனம்!



குழந்தையின் உடலத்தோடு நெடுந்தீவிலிருந்து யாழ்ப்பாணம் வரை பயணித்த அந்த தாய் பட்ட வேதனையை என்னால் உணரமுடிகிறது.இந்த அலைச்சல்களுக்கு காரணமானவர்களை வன்மையாக கண்டிக்கின்றேன் என யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த குழந்தையின் சடலத்தையும், தாயையும் நோயாளர் காவு வண்டியில் காக்க வைத்தமைக்கு கண்டனம் வெளியிட்டு அவரது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் உள்ளதாவது,

நோயாளர் காவு வண்டிகளுக்கான (அம்புலன்ஸ்) நடைமுறைகளை இத்தனை இறுக்கமாக கடைப்பிடிப்பது சரியா தவறா என்பதை தாண்டி அந்த நடைமுறைகளை கடந்து மனிதாபிமானத்தோடு செயற்பட்ட வேலணை வைத்தியசாலையினர் பாராட்டுக்குரியவர்கள்.

இத்தகைய சந்தர்ப்பங்கள் தீவகத்துக்கான தேவைகள் தீரவில்லை என்பதை உரத்துச் சொல்கின்றன.

இறந்தவரது சடலத்தை ஏற்றுவதற்கு வாகனகாரர்கள் அதிகளவு பணம் கோருவார்கள். அமரர் ஊர்தி சேவைகள் செய்பவர்கள் மற்றைய வாகனங்களை விட ஒப்பிட்டு ரீதியில் குறைவாக பணம் அறவிட்டாலும், அவர்களின் தொகையும் விளிம்புநிலை மக்களுக்கு அதிகமே.

எனவே இலவச அமரர் ஊர்தி சேவை ஒன்று இயங்குமாயின், அதன் ஊடாக பலர் பயன்பெறுவார்கள்.

அத்தோடு தீவுகளுக்கிடையிலான மருத்துவ சேவையை வினைத்திறனாக வழங்கும் வகையில் வைத்தியசாலை வளங்கள், ஆளணிகள், படகுசேவைகள் உள்ளிட்டவையும் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளன.

அரச இயந்திரத்தை தாண்டி தன்னார்வ அறக்கட்டளைகள் , நன்கொடையாளர்கள் இணைந்து இவ்விடயத்தில் செயலாற்ற வேண்டுமென எதிர்பார்க்கிறேன் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# 68 வயதில் துவிச்சக்கர வண்டியில் இலங்கையை சுற்றி வந்தவருக்கு கௌரவிப்பு!



தனது 68வது வயதில் துவிச்சக்கர வண்டியில் இலங்கையை சுற்றி வந்த திரு. வைத்திலிங்கம் கைலைநாதன் அவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்றையதினம் (24) நடைபெற்றது. இலங்கை தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி சுழிபுரம் மூலக் கிளையின் அலுவலகத்தில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வானது ஆரம்பமானது. அதனைத்தொடர்ந்து இறைவணக்கம், வரவேற்பு நடனம், விருந்தினர்களின் உரைகள் என்பன இடம்பெற்றன.

இதன்போது நிகழ்வின் கதாநாயகனுக்கு மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி, நினைவுப் பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

வலி. மேற்கு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் விசாகப்பெருமாள் உமாபதி அவர்களது



தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன், காரைநகர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் திரு. பாலச்சந்திரன், கிராம மட்ட அமைப்பின் பிரதிநி திகள், இலங்கை தமிழரசு கட்சியின் சுழிபுரம் மூலக் கிளையின் உறுப்பினர்கள், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும்



கலந்துகொண்டனர்.

# மன்னார் இரணை இலுப்பக்குளம் வைத்தியசாலையில் இருந்து உயிருடன் வேறு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டவருக்கு நேர்ந்த கதி

மன்னார் இரணை இலுப்பக் குளம் வைத்தியசாலையில் உள்ளவர்களின் பொறுப்பற்ற செயல் காரணமாக, மின்சாரம் தாக்கி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

மின்சாரம் தாக்கி விபத்தில் காயமடைந்த நபர் ஒருவரை, அவரது நண்பர்கள் இரணை இலுப்பக்குளம் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ள நிலையில் அங்கு படுகாயமடைந்த நபருக்கு எவ்வித முதலுதவியும் வழங்கப்படவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அதன் பிறகு படுகாயமடைந்த நபரை வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றி அனுப்பியுள்ளனர். இவ்வாறு வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பப்படும் போது படுகாயமடைந்த நபர் உயிருடன் இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. இலுப்பக்குளம் வைத்தியசாலையில் இருந்து வவுனியா வைத்தியசாலைக்கு சென்று கொண்டிருக்கும் போது ஈச்சங்குளம் பகுதியில் வைத்து விபத்திற்குள்ளான நபரின் உயிர் பிரிந்துள்ளது.

சரியான நேரத்திற்கு இலுப்பக்குளம் வைத்தியசாலைக்குச் சென்றும் வைத்தியசாலையில் உள்ளவர்களின் அசமந்தப் போக்கினால் இந்த உயிர் பறிபோயுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இரணை இழுப்பக்குளம் வைத்தியசாலையில் உள்ள அம்பியூலன்ஸ் வண்டியும் பாவனைக்கு உகந்த வகையில் தயார் நிலையில் இல்லாததன் காரணமாக படுகாயமடைந்த நபரை வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டுச் செல்வதில் மேலும் தாமதம் ஏற்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# Residents in Scarborough—Guildwood and Kanata–Carleton elected Ontario Liberal candidates Andrea Hazell and Karen McCrimmon as their newest Members of Ontario Parliament

## ஸ்காபரோ – கில்ட்வுட் மற்றும் கனாட்டா – கார்லேடன் தொகுதிகளின் வாக்காளர்கள் நேற்று நடைபெற்ற இடைத்தேர்தல்களில் ஒன்ராறியோ லிபரல் வேட்பாளர்களான அண்ட்ரியா ஹேசல் மற்றும் கரேன் மக்கிரிம்மன் ஆகியோர் வெற்றிபெற்றனர்

ஸ்காபரோவில் -கில்ட்வுட் மற்றும் கனாட்டா-கார்லேடன் தொகுதிகளின் வாக்காளர்கள் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற இடைத்தேர்தல்களில் முறையே ஒன்ராறியோ லிபரல் வேட்பாளர்களான அண்ட்ரியா ஹேசல் மற்றும் கரேன் மக்கிரிம்மன் ஆகியோரை மாகாண நாடாளுமன்றத்தின் புதிய உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுத்துள்ளனர். இதன் மூலம் ஒன்றாரியோ மாகாணத்தின் தற்போதைய ஆளும் கட்சியான கொன்சர்வேர்ட்டிவ் கட்சிக்கு ஒரு அதிர்ச்சியையும் இந்த தேர்தல் முடிவுகள் ஏற்படுத்தியுள்ளன என்றும் அறியப்படுகின்றது.

**Scarborough-Guildwood** மற்றும் **Kanata-Carleton** ஆகிய தொகுதிகளின் வாக்காளர்கள், ஒன்ராறியோ லிபரல் வேட்பாளர்களான **Andrea Hazell** மற்றும் **Karen McCrimmon** ஆகியோரை அவர்களது புதிய மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களாக **(MPP)** தேர்ந்தெடுத்துள்ளமை தொடர்பாக ஒன்றாரியோ லிபரல் கட்சி ஆதரவாளர்கள் மற்றும் கட்சியின் தலைவர்கள் ஆகியோர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

லிபரல் கட்சியின் வேட்பாளர்கள் இரண்டு தொகுதிகளிலும் பெற்ற வெற்றிகளால் ஒன்றாரியோ லிபரல் கட்சி மேலும் தனது செல்வாக்கை அதிகரிக்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் கட்சியின் ஆதரவாளர்கள் கனடா உதயனுக்குத் தெரிவித்தார்கள்,

நடந்து முடிந்த தேர்தல்களில் ஹேசல் ஸ்கார்பரோ-கில்ட்வுட் தொகுதியில் வெற்றியை தட்டிக் கொண்டார். அத்துடன் மெக்கிரிம்மன் நீண்ட காலமாக கொன்சர்வேர்ட்டிவ் கட்சி தனது கைகளில் வைத்திருந்த தொகுதியை ஒன்றாரியோ லிபரல் கட்சி கைப்பற்றியுள்ளது.

தேர்தல் முடிவுகள் வெளியானதும் "குயின்ஸ் பார்க்கில் பாராளுமன்றத்தில் எங்கள் லிபரல் கட்சிக்கு கிடைத்த வெற்றியானது வலுவான குரலாக என்னை நம்பியதாகவே நான் கருதுகின்றேன். ஸ்கார்பரோ-கில்ட்வுட்டில் வசிப்பவர்களுக்கு நான் நம்பமுடியாத அளவிற்கு நன்றியுள்ளவனாக இருக்கிறேன்" என்றும் வெற்றி பெற்ற லிபரல் வேட்பாளர் ஹேசல் கூறினார். அத்துடன் அவர் மேலும் தெரிவிக்கையில் "ஒன்டாரியோ லிபரல் கட்சிக்கு ஸ்கார்பரோவை ஆதரித்தவர்களுக்காகசுவும் , உழைக்கும் மக்களுக்காகவும், அவர்களின் குடும்பங்களுக்காகவும், சுகாதாரத்திற்காகவும் மற்றும் கல்விக்காகவும் ஒவ்வொரு நாளும் போராடுவதற்கு நான் உறுதிபூண்டுள்ளேன் என்று தெரிவித்துள்ளார்.

"குயின்ஸ் பார்க் பாராளுமன்றத்தில் உங்கள் குரலாக இருக்கவும், உங்களுக்காகவும், உங்கள் குடும்பத்தினருக்காகவும், எங்கள் முதியவர்களுக்காகவும், எங்கள் சமூகத்திற்காகவும் போராடுவதற்காகவே நான் இந்தப் போட்டியிட்டேன்" என்று வாக்காளர்கள் மத்தியில் உரையாற்றிய மெக்கிரிம்மன் "கனாடா-கார்லேட்டன் தொகுதியில் எங்கள் லிபரல் கட்சி MP ஆக மீண்டும் சேவை செய்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன், என்றார்





நேற்றிரவு முடிவுகள் ஒரு தெளிவான செய்தியை அனுப்பிவைத்துள்ளன: ஒன்ராறியோ லிபரல் கட்சியினர் மட்டுமே இந்த மாகாணத்தை தவறாக நிர்வகிக்கும் கொன்சர்வேர்ட்டிவ் கட்சியினரை தோற்கடிக்க முடியும். இன்றைய வெற்றிகள் தெளிவான வேகத்தையும் 2026 இல் டக் போர்ட் அவர்களது கொன்சர்வேடிவ் அரசாங்கத்தை தோற்கடிப்பதற்கான பாதையையும் எமக்கு காட்டுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த வெற்றிகள் தொடர்பாக ஒன்றாரியோ லிபரல் கட்சியின் இடைக்காலத் தலைவர் ஜான் ஃப்ரேசர் கூறுகையில் ."அண்ட்ரியா மற்றும் கரேன் நிரூபிக்கப்பட்ட வெற்றியாளர்கள், அவர்கள் எப்போதும் தங்கள் சமூகங்களுக்கு ஒரு தலைமத்துவத்தைக் கொண்டவர்களாக உள்ளனர். ஒன்டாரியோ அரசாங்கத்தில் குழப்பம் மற்றும் இல்லாத தலைமைக்கு மத்தியில், குயின்ஸ் பார்க் பாராளுமன்றத்தில் அண்ட்ரியா மற்றும் கரேன் ஆகியோர் எங்களுக்குத் தேவைப்படுகிறார்கள், மேலும் அவர்களை எங்கள் புதிய உறுப்பினர்களாக வரவேற்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்." என்றும் தெரிவித்துள்ளார்...


THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

# கனேடிய பிரதமரின் கறுப்பு யூலை அறிக்கையை

## ஈழத் தமிழர்கள் நாம் வரவேற்கின்றோம் என்கிறார் சபா குகதாஸ்

கனடா செய்திகள்

கனேடியப் பிரதமர் ஐஸ்டின் ட்ரூடோ அவர்கள் கறுப்பு யூலை 40 ஆண்டு நினைவேந்தலில் வெளியிட்ட அறிக்கையை ஈழத் தமிழர்கள் வரவேற்கின்றனர் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்தார்.

அவர் இன்றையதினம் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது ; ,
இலங்கை அரசாங்கம் மனிதவுரிமை மீறல்கள் அட்டூழியங்கள் போன்றவற்றுக்கு பொறுப்புக் கூற வேண்டும் என்பதை வலியுறுத்தி உள்ளதுடன் கறுப்பு யூலை படுகொலைகள் அரசியல் பேராசை காரணமாக மிகப் பெரும் மனிதப் பேரவலத்தை உருவாக்கியது எனவும் இவ்வாறான மனித உரிமை மீறல்களுக்கு இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டுΠம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அன்று கறுப்பு யூலைப் படுகொலையை அன்றைய பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் இந்தியப் பாராளுமன்றத்தில் 1983 இல் இனப்படுகொலை என அறிவித்தது போன்று கடந்த மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் அந்த நாளை தமிழினப் படுகொலை நாள் என கனேடியப் பாராளுமன்றத்தில் ஏக மனதாக பிரகடனப் படுத்தினார். பிரதமர் ட்ரூடோ இதனை தமிழ் மக்களின் நீதிக்கான கதவு திறப்பிற்கான ஆரம்பமாக தமிழர்கள் பார்க்கின்றனர்.

தொடர்ந்து பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்களின் நியாயமான நீதிக்கு குரல் கொடுக்கும் கனேடிய பிரதமரின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மன ஆறுதலை வழங்கியுள்ளது.

இலங்கையில் சிங்கள இன வாதிகளின் கனேடிய அரசாங்கம் தொடர்பான அநாகரிகமான விமர்சனங்கள் வருவதை பொருட்டாக கொள்ளாது மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக் கூறலை வலியுறுத்தி உள்ளமையை வரவேற்கின்றோம் என மேலும் குறிப்பிட்டுள்ளார்.



கனடியப் பிரதமர் வெளியிட்டுள்ள கறுப்பு ஜூலை தொடர்பான அறிக்கையின் தமிழாக்கம் கீழே காணப்படுகின்றது:

கறுப்பு ஜூலையின் 40 ஆம் ஆண்டை நினைவுகூர்ந்து பிரதம மந்திரி வெளியிட்ட அறிக்கை“நாற்பது வருடங்களுக்கு முன்பு, 1983 ஆம் ஆண்டு ஜூலையில் என்று குறிப்பிடப்படுகின்ற அந்த நாட்களில் இலங்கையெங்கும் தமிழர்களுக்கு எதிராகக் கொடூரமான படுகொலைகள் புரியப்பட்டன. இவற்றில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்து, பெரும் எண்ணிக்கையானோர் காயமடைந்தார்கள், இடம்பெயர்க்கப்பட்டார்கள், பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டார்கள். கறுப்பு ஜூலையின் கொடுமை, பதட்டத்தை அதிகரித்து, சில தசாப்தங்கள் நீடித்த, ஆயிரக்கணக்கானோர் மரணமாகிய ஆயுத மோதலாக மாறியதுடன், இதன் மனப்பாதிப்பைச் சமூகங்கள் தற்போதும் அனுபவிக்கின்றன.

“சோகமான இந்த நாளில், நாம் தமிழ்க் கனேடியர்களுடனும், உலகெங்கும் உள்ள தமிழ்ச் சமூகங்களுடனும் இணைந்து பாதிக்கப்பட்டவர்களை நினைவேந்தி, தப்பிப் பிழைத்தோரை கௌரவிப்பதுடன், வெறுப்புக்கும், வன்முறைக்கும் எதிராக எப்போதும் குரல் கொடுப்பதற்கு உறுதியுடனிருப்பதை மீள உறுதிப்படுத்துகிறோம். மே 18 ஐ, தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளாகப் பிரகடனம் செய்யும் பிரேரணையைக் கனேடிய நாடாளுமன்றம் கடந்த ஆண்டு ஒருமனதாக அங்கீகரித்து, இவ்வாண்டில் இந்த நாள் முதன் முறையாகக் கடைப்பிடிக்கப்பட்டது. இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கும், அத்துமீறல்களுக்கும் பொறுப்புக்கூறப்படவேண்டுமென நாம் இன்றும் தொடர்ந்து கோருகிறோம்.

கனடா, மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பதை ஒருபோதும் நிறுத்தமாட்டாது. இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியில், மிகவும் நலிவடைந்த சமூகங்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு நாம் தொடர்ந்து உதவுவோம்.“கனடாவின் மிகப் பெரும் பலங்களில் ஒன்றாகப் பன்முகத்தன்மை எப்போதுமே விளங்கும். கறுப்பு ஜூலை படுகொலைகளின் பின், பலர் அவர்களது நாட்டில் இருந்து தமிழர்கள் வெளியேறப் பலவந்தப்படுத்தப்பட்டபோது, 1983 ஆம் ஆண்டில் கனேடிய அரசு சிறப்பு ஏற்பாடுகள் செயற்திட்டம் ஒன்றை உருவாக்கி, 1,800 தமிழர்கள் கனடாவில் தங்கள் வாழ்க்கையைப் புதிதாகக் கட்டியெழுப்புவதற்கெனக் கனடாவில் குடியேறி, உலகில் உள்ள மிகப் பெரும் புலம்பெயர் தமிழ்ச் சமூகங்களில் ஒன்றை உருவாக்கினார்கள். பிரதம மந்திரியாக நான் கடந்த ஆண்டுகளிலும், நேற்றும், பல தமிழ்க் கனேடியர்களைச் சந்தித்து கறுப்பு ஜூலையின் துயர அனுபவங்களைக் கேட்டறிந்து, மரணமானோரை அவர்களுடன் இணைந்து நினைவுகூர்ந்து, எமது நாட்டுக்கு அவர்கள் ஆற்றிய முக்கிய பங்களிப்புகளுக்கும், தொடர்ந்து ஆற்றிவரும் பங்களிப்புகளுக்கும் நன்றி தெரிவிக்கவும் எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

“கறுப்பு ஜூலையிலும், அதன் பின்னர் இடம்பெற்ற வன்முறையிலும், துன்பத்தை எதிர்கொண்டவர்களுக்கும், அன்புக்குரியவர்களை இழந்தவர்களுக்கும் கனேடிய அரசின் சார்பாக நான் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், வெறுப்பு அற்ற எதிர்காலம் ஒன்றைக் கட்டியெழுப்புவதில் உறுதியுடனிருப்பதை மீளவும் நான் உறுதிப்படுத்துகிறேன்.”

# ரொறன்ரோவில் சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடு

சென்ற சனிக்கிழமை 2272023 கனடா, மிஸஸாகாவில் உள்ள ஜோன்போல் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற பீல்பிரதேச சொப்கா குடும்பமன்றத்தின் கலை நிகழ்வின்போது பிரபல எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களின் ‘சாக்லாட் பெண்ணும் பண்ணை வீடும்’ என்ற எழுத்தாளர் குரு அரவிந்தனால் தமிழில் எழுதப்பட்ட வெளிநாட்டுச் சிறுகதைகள் அடங்கிய சிறுகதைத் தொகுப்பும், மாலினி அரவிந்தனின் ‘பறவைகள்’ என்ற சிறுகதைத் தொகுப்பும் வெளியிட்டு வைக்கப்பட்டன. கலை, இலக்கிய ஆர்வலர்கள் பலர் மண்டபம் நிறைந்த இந்த நிகழ்வில் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் முன்னாள் ஐ. எம். எச். ஓ தலைவரும், வைத்திய கலாநிதியுமான வரகுணன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். முதலில் மங்கள விளக்கேற்றி, தமிழ்தாய் வாழ்த்து, கனடிய தேசியகீதம், அகவணக்கம் போன்ற நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. அதைத் தொடர்ந்து மன்றத்தின் மூத்த உறுப்பினர்கள் சிலரும், மாணவ தன்னார்வத் தொண்டர் சிலரும் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து நடந்த நூல் வெளியீட்டு நிகழ்வின் போது செல்வி திவாணி நாராயணமூர்த்தி அவர்களால் நூல்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. வெளிநாட்டுச் சிறுகதைகள் முதற்பிரதியைப் பட்டயக்கணக்காளர் திரு. ஆனந்தராசா அவர்களும் ‘பறவைகள்’ சிறுகதைத் தொகுப்பின் முதற்பிரதியைப் பிரதம விருந்தினர் வைத்திய கலாநிதி வரகுணனும் பெற்றுக் கொன்டனர். சிறப்புப் பிரதிகளை வைத்திய கலாநிதி மோகன், வைத்திய கலாநிதி பிரசாந்தன், திருமதி சத்தியவான், தனுசா இராஜதுரை ஆகியோர் பெற்றுக் கொண்டனர். அதைத் தொடர்ந்து எழுத்தாளர் குரு அரவிந்தன் ஏற்புரை வழங்கினார்.



24 சிறுகதைகளைக் கொண்ட வெளிநாட்டுக் கதைகள் தொகுப்பிற்குக் கலாபூஷணம் கோகிலா மகேந்திரன் அணிந்துரை எழுதியிருந்தார், எழுத்தாளர் அ. முத்துலிங்கம் அவர்கள் வாழ்த்துரை வழங்கியிருந்தார். மாலினி அரவிந்தனின் ‘பறவைகள்’ சிறுகதைத் தொகுப்பிற்கு கலாநிதி மைதிலி தயாநிதி அணிந்துரை எழுதியிருந்தார், கலாபூஷணம் திருமதி ஞானம் ஞானசேகரன் வாழ்த்துரை வழங்கியிருந்தார்.

கனடாவில் பிறந்து வளர்ந்த சுமார் நாற்பது இளைய தலைமுறையினர் இந்த நிகழ்வின் போது, தமிழில் உரையாடிச் சிறுவர் நாட்டிய நாடகம் ஒன்றை நடித்துக் காட்டி, நடனமாடி அனைவரின் பாராட்டையும் பெற்றுக் கொண்டனர். இதைவிட வீணை இசை, நடனம், பாடல்கள், பயனுள்ள உரைகள் போன்ற கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. மன்றத்தலைவர் யாழினி விஜயகுமாரின் உரையைத் தொடர்ந்து பிரதமவிருந்தினர் உரை






இடம் பெற்றது.

இந்த நிகழ்வின் போது குரு அரவிந்தன் அவர்களின் நூல்கள் ‘குரு அரவிந்தன் வாசகர் வட்டத்தினால்’ விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. இந்த விற்பனையில் சேகரித்த பணம் முழுவதும் இலங்கையில் உள்ள தமிழ் உறவுகளின் சுகாதார, வைத்திய தேவைகளுக்காக ஐ.எம்.எச்.ஓ (International Medical Health Organization) நிறுவனத்தினரிடம் சொப்கா குடும்பமன்றத்தால் அன்பளிப்பாகக் கையளிக்கப்பட்டது. செயலாளரின் நன்றி உரையைத் தொடர்ந்து இரவு உணவு வழங்கப்பட்டு, நிகழ்வு சிறப்பாக முடிவுற்றது.

❖ **சுலோச்சனா அருண்**

உ
சிவமயம்





# துர்க்கேஸ்வரம்
# ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் திருக்கோவில்

**30 Carnforth Road, Toronto, Ontario, CANADA M4A 2K7 www.durka.com Tel: 416-759 9648**

## அஷ்டோத்திர (1008) சகஸ்ர சங்காபிஷேக
# மண்டலாபிஷேக பூர்த்தி விழா

## 5-8-2023 (ஆடி மாதம் 20ம் திகதி) சனிக்கிழமை

பக்தப்பெருமக்களே!

தெய்வானுக்கிரகத்தினால் துர்க்கேஸ்வரம் திருக்கோவில் புனருத்ததாரணம் செய்யப் பெற்று, வெகுவிமரிசையாகவும் பக்திபூர்வமாகவும் மஹாகும்பாபிஷேகம் நடைபெற்று 48 தினங்கள் மண்டலாபிஷேகம் நிகழ்ந்துகொண்டிருக்கும் இவ்வேளையில், மண்டலாபிஷேக பூர்த்தி விழாவின் விபரங்களைத் தருவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

நிகழும் சுவஸ்திஸ்ரீ மங்களகரமான சுபகிருது வருடம் ஆடி மாதம் 20ம் திகதி

## 5-8-2023 சனிக்கிழமை காலை 10 மணிக்கு

ஸ்ரீமஹாகணபதிப் பெருமான், ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள், வள்ளி தெய்வானை சமேத கல்யாணசுப்ரமண்யப் பெருமான் மற்றும் ஏனைய பரிவார தெய்வங்களுக்கும் மண்டலாபிஷேகம் பூர்த்தியுறும் அருள்நிகழ்வு கீழே தரப்பட்ட நேரப்பிரகாரம் இடம்பெற உள்ளது. இத்தருணத்தில் பக்தர்கள் அனைவரும் தவறாது ஆசாரசீலர்களாக ஆலயம் வருகைதந்து அம்பாளின் திருவருட்கடாட்சம் பெற்றுய்வீர்களாகுக.

### 4-8-2023 வெள்ளி

காலை 10:00 மணி முதல்

விக்னேஸ்வர பூஜை,
புண்யாகவாசனம்
அனுக்ஞை
அன்னதானம்
முதலியன

.........................................

மாலை 6:00 மணி முதல்

கடஸ்தாபனம்
யாகசாலாபிரவேஷம்,
1ம் கால யாகபூஜை
அக்னிகார்யம், ஹோமம்
பூர்ணாகுதி, தீபாராதனை
சதுர்வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம்
அன்னதானம் முதலியன

# 5-8-2023 சனி

**பகல் வழிபாடு**

காலை 9:00 மணி முதல்

- ✯ 2ம் கால யாக பூஜை
- ✯ ஹோமம் - திரவ்யஹோமம்
- ✯ பூர்ணாகுதி
- ✯ தீபாராதனை
- ✯ 1008 சங்காபிஷேகம்

**மண்டலபூர்த்தி**

- ✯ விஷேட பூஜை
- ✯ அஷ்டோத்ர சதநாமாவளி
- ✯ சதுர்வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம்
- ✯ அன்னதானம் முதலியன

**இரவு வழிபாடு**

மாலை 5:30 மணி - சாயரட்சை பூஜை
மாலை 6:00 மணி - மங்கள இசை
மாலை 6:45 மணி - இசை நிகழ்ச்சி
மாலை 7:30 மணி - விஷேட பூஜை
இரவு 8:00 மணி - வசந்த மண்டப பூஜை
இரவு 8:30 மணி - விநாயகர், ஸ்ரீதுர்க்காதேவி, மஹாலட்சுமி, சரஸ்வதிதேவி, முருகப்பெருமான் ஆகிய பஞ்சமூர்த்திகள் முறையே மூஷிகம், சிங்கம், யானை, அன்னம், மயில் ஆகிய வாகனங்களில் ஆரோகணித்து திருவீதிவலம் வந்து அருள்புரிவர்
இரவு 9:00 மணி - அன்னதானம்

**மண்டலாபிஷேக தலைமை சிவாச்சாரியார்**

மஹாகுரு சிவஸ்ரீ. தியாகராஜாக்குருக்கள் கணஸ்சுவாமிகள்

**சிவாச்சாரியார்கள்**

சிவஸ்ரீ. வி. ராமநாதன் குருக்கள்
சிவஸ்ரீ. வி. மணிக் குருக்கள்
சிவஸ்ரீ. கா. புவனேந்திரக் குருக்கள்
சிவஸ்ரீ. க. கோபிசர்மா குருக்கள்
சிவஸ்ரீ. சு. கேதீஸ்வரநாதன் குருக்கள்
சிவஸ்ரீ. நா. ஹரீந்திரன் குருக்கள்
சிவஸ்ரீ. கெ. வெங்கடரமணசர்மா குருக்கள்

**ஆலய மங்கள இசை கலைஞர்**

சுவாமிமலை A.ராஜேஷ் (நாதஸ்வரம்)
திருமருகல் B.பார்த்திபன் (நாதஸ்வரம்)

மேட்டுப்பாளையம் M.வினோத் (தவில்)
திருநெல்லிக்காவல் A.மணிகண்டன் (தவில்)

**என்றும் அம்பாள் பணியில்**

மஹாகுரு சிவஸ்ரீ. தியாகராஜாக்குருக்கள் கணஸ்சுவாமிகள்
பிரதம குருக்கள், அறங்காவலர் சபைத்தலைவர்

# இலவச கண்புரை சத்திர சிகிச்சை குறித்து யாழ்ப்பாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அவர்களது அறிவிப்பு



யாழ்ப்பாண மாவட்டத்தில் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களை இனங்கண்டு அவர்களுக்கான கண்புரை சத்திரசிகிச்சையினை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் முற்றிலும் இலவசமாக மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், இவர்களுக்கான சத்திரசிகிச்சைகள் கண்சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி மலரவன் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இக் கண்புரை சத்திரசிகிச்சை திட்டமானது ஐக்கிய இராச்சியத்தின் யுளளளைவ சுசு நிறுவனத்தினால் ஒருங்கிணைக்கப்படுவதுடன் சத்திர சிகிச்சைகளுக்கான கண்வில்லைகளும், சத்திரசிகிச்சை நுகர்வு பொருட்களும்; மற்றும் மருந்துப் பொருட்களும் மலேசியாவைச் சேர்ந்த அலாக்கா மற்றும் ஆனந்தா நிறுவனத்தினரால் வழங்கப்பட்டு வருகிறது.

இதனடிப்படையில் தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரதேசத்தில் வசிக்கும் கண்புரை சத்திரசிகிச்சை செய்யவேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச கண்பரிசோதனை முகாம் எதிர்வரும் 29.07.2023 சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில்; இடம்பெறவுள்ளது.

அதேபோன்று பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவினைச் சேர்ந்த கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களைத் தெரிவுசெய்யும் இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் 29.07.2023 சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் நடைபெறவுள்ளது. குறித்த முகாமில் கண்புரை சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் திகதி பின்னர் அவர்களுக்கு அறியத்தரப்படும்.

இலங்கை செய்திகள்

கண்புரை சத்திரசிகிச்சைக்கு தெரிவு செய்யப்படும் நோயாளர்களை அந்தந்தப் பிரதேசத்திற்குரிய வைத்தியசாலைகளில் இருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வருவதற்கும், சத்திரசிகிச்சை முடிவடைந்த பின்னர் மீண்டும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இருந்து அவர்களது பிரதேசத்திலுள்ள வைத்தியசாலைக்கு கூட்டிச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் சுகாதார திணைக் களத்தினரால் இலவசமாக மேற்கொள்ளப்படும்.

எனவே கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளர்கள் மேற்படி பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்களது பெயர்களைப் பதிவுசெய்யுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

# குடத்தனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் நூற்றாண்டு விழா!

குடத்தனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் நூற்றாண்டு விழா பாடசாலை அதிபர் எஸ். ஜெயச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம் சார்ள்ஸ், சிறப்பு விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், முல்லைதீவு மேலதிக மாவட்ட செயலாளர் கே. கனகேஸ்வரன், வடக்கு மாகாண கல்வி பணிப்பாளர் யோன் குயின்ரஸ், வடமராட்சி கல்வி பணிப்பாளர் கே. சத்தியபாலன், மருதங்கேணி பிரதேச செயலர் கே. பிரபாகரமூர்த்தி ஆகியோரும், கௌரவ



விருந்தினர்களாக மருதங்கேணி கோட்டக்கல்வி பணிப்பாளர் எஸ். ஸ்ரீராமச்சந்திரன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், பாடசாலையின் முன்னாள் அதிபர் கே. குகநாதன், பாடசாலை ஸ்தாபகரின் உறவினர் திருமதி வாசுகி இராஜலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மதத் தலைவர்கள் உள்ளிட்ட விருந்தினர்கள் மாலைகள் அணிவிக்கப்பட்டு மேற்கத்தேய இசை வாத்திய அணிவகுப்புடன் பாடசாலைக்கு அழைத்துவரப்பட்டனர். அதனை தொடர்ந்து மங்கள விளக்கு ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகியது.இறைவணக்கம், ஆசியுரை வரவேற்புரை, வரவேற்பு நடனம், கலைநிகழ்வுகள் இடம்பெற்று விருந்தினர்கள் அரை என்பன இடம்பெற்றன.

# தமிழர் தாயகத்தில் தொடரும் நில அபகரிப்பு: மேலும் 2500 ஏக்கரை கபளீகரம் செய்யும் முயற்சி



யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் புதிதாக மேலும் 2500 ஏக்கர் நிலத்தை வனவளத் திணைக்களம் அபகரிக்கும் நோக்கில் வரைபடம் தயார் செய்யப்பட்டுள்ளது. நல்லூர், சாவகச்சேரி, வேலணை, மருதங்கேணி, சண்டிலிப்பாய், சங்காணை, காரைநகர், பருத்தித்துறை ஆகிய எட்டு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் வழுக்கையாறு, மணல்காடு, மண்டைதீவு,முள்ளி,பொன்னாலை, காரைநகர்.பருத்தித்துறை ஆகிய எட்டு இடங்களிலுமே இந்த நிலங்கள் வனவளத் திணைக்களத்தினால் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதில் கடல் அரிப்பு மற்றும் இயற்கை வளம் பேணல் என்பவற்றிற்காக நாட்டப்பட்ட கண்டல் தாவரங்கள் (மைங்கோஸ்) நிற்கும் பிரதேசங்கள் அனைத்தும் வனவளத் திணைக்களத்திற்கு உரியது என அவர்கள் உரிமை கோருகின்றனர்.

இதற்கமைய இவ்வாறு புதிதாக கோரப்படும் பிரதேசங்களில் 800 கெக்டேயர் அல்லது 2 ஆயிரத்து 400 ஏக்கர் வரையிலான நிலங்களை தமது ஆளுகையின் கீழ் கொண்டுவர வர்த்தமானி வெளியிடுவதற்கான புதிய முயற்சியினை வனவளத் திணைக்களம் மேற்கொண்டு இதற்கான வரைபடமும் மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மே மாதம் 25 ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலில் வனவளத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் வடக்கின் அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் யாழ்ப்பாணத்தில் கையகப்படுத்த முனையும் இடங்களை வரைபடத்துடன் வனவளத் திணைக்கள அதிகாரிகளினால் காண்பிக்கப்பட்டபோது, ஏற்கனவே வனவளத் திணைக்களம் அபகரித்துள்ள நிலத்தை விடுவிக்குமாறு கோரும்சமயம் தற்போது புதிதாக நிலத்தை பிடிக்க முயலும் செயல் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தும் என அதிகாரிகள் சுட்டிக்காட்டிய செய்தி வெளியானது.

இதனை 20230530 அன்று யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பிரஸ்தாபித்தபோது அது பொய்யான செய்தி 1985ஆம் ஆண்டிற்கு பினபு திணைக்களங்கள் வர்த்ததானி மூலம் சுவீகரித்த நிலங்கள் அனைத்தும் விடுவிக்கப்படுவதே ஜனாதிபதியின் கொள்கை என அமைச்சர் டகளஸ் தேவானாந்தா தெரிவித்தார்.

இந்த நிலையிலேயே 2 ஆயிரத்து 500 ஏக்கரையும் சுவீகரித்து அரச இதழ் வெளியிடுவதற்காக தேசிய குழுவிற்கு சமர்ப்பித்துள்ளதாக மாவட்டச் செயலகத்திற்கு வரைபடத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறி வரைபடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பிரதேசங்களின் நிலங்கள் வனவளத் திணைக்கள அதிகாரிகளினால் ஏற்கனவே இரகசியமான முறையில் அளவீட்டுப் பணிகளும் இடம்பெற்று விட்டதாக தற்போது தெரிவிக்கப்படுகின்றது.


● நடராசா லோகதயாளன்



# ரணில் முன் மொழிந்த ராமர்பாலம் ?

## யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்...

சிறப்பு கட்டுரை



ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தைத் தொடர்ந்து இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பிணைப்பு திட்டங்கள் மேலும் விரிவுபடுத்தப் பட்டிருக்கின்றன. ஏற்கனவே பலாலியிலிருந்து மீனம்பாக்கத்திற்கும், காங்கேசன்துறையில் இருந்து தமிழ்நாட்டுக்கும், மன்னாரியிலிருந்து தமிழ்நாட்டுக்கும் என மூன்று திட்டங்கள் யோசிக்கப்பட்டன. இந்தக் கடல்வழிப் பிணைப்பு, வான்வழிப் பிணைப்பு, என்பவற்றோடு, தரைவழியாக ஒருபாலத்தை கட்டுவது குறித்தும் பரிசீலிக்கப்படுகிறது. இவை தவிர ரணிலின் விஜயத்தின் பின்னணியில் இந்திய வெளியுறவுச் செயலர் தெரிவித்த கருத்துக்களின்படி கடல்வழி, வான்வழி, தரைவழிப் பிணைப்புகளோடு வர்த்தகப்பிணைப்பு, எரிசக்திப் பிணைப்பு, பொருளாதாரப் பிணைப்பு, டிஜிட்டல் பிணைப்பு, மின்சக்திப் பிணைப்பு, எரிபொருள் வினியோக குழாய் வழிப் பிணைப்பு என்றிவ்வாறாக பல்வேறு வகைப்பட்ட பிணைப்புகளைக் குறித்தும் பேசப்பட்டிருக்கிறது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான புவியியல் அருகாமை காரணமாக ஏற்கனவே இருநாட்டு மக்கள் கூட்டங்களுக்கும் இடையே கலாச்சாரபிணைப்புகளும் மதம் சார்ந்த பிணைப்புகளும் உண்டு. ஒரு இந்திய ராஜதந்திரி தனிப்பட்ட உரையாடலின் போது சொன்னார், இப்புவியியல் அருகாமையும் அதுசார்ந்த பிணைப்பும் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் பொருந்தும் என்று. உண்மை. இப்பொழுது மிலிந்த மொரகொட அதைத்தான் புதுப்பிக்க முயற்சிக்கின்றார். அதாவது வடஇந்தியாவுக்கும் பௌத்தத்துக்கும் இடையிலான பிணைப்பைக் கையாண்டு அவர் சிங்கள மக்களை பாரதிய ஜனதாவோடு சென்றிமென்ரலாகப் பிணைக்க முயற்சிக்கின்றார்.

ஆனால் ஈழத்தமிழர்களுக்கும் தமிழகத்திற்கும் இடையிலான பிணைப்பு ஆழமானது; பரந்த பரிமாணங்களைக் கொண்டது. ஈழத் தமிழர்களையும் தமிழகத்தையும் பிரிப்பது ஒடுங்கிய பாக்குநீரிணையாகும். பாக்கு நீரினையை அதன் பிரயோக வடிவத்தில் சொன்னால் அது ஒரு தமிழ்நீரிணை தான். அல்லது தமிழ் வாவி தான். அந்த நீரிணையின் இருபுறமும் தமிழர்கள் உண்டு. நவீன அரசியலின் சர்வதேச எல்லைகளால் பிரிக்கப்படுவதற்கு முன்பு, அது ஒரு தமிழ்க் கடலாகத்தான் காணப்பட்டது. ஈழப் போரின் போதும் அது அவ்வாறு தான் காணப்பட்டது. ஈழப்போரின் பலம் அது தான் என்று மு. திருநாவுக்கரசு கூறுவார். இவ்வாறு ஒடுங்கலான தமிழ் நீரிணையால் பிரிக்கப்பட்டஇருவேறு தமிழ்ச்சமூகங்களுக்கும் இடையிலான பிணைப்பு எனப்படுவது சிங்கள மக்களுக்கும் வடஇந்தியாவுக்கும் இடையிலான பௌத்த பண்பாட்டுப் பிணைப்பை விடவும் ஆழமானது; உடனடியானது; வரலாற்றில் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு விளைவுகளை ஏற்படுத்தியது.

இப்பிணைப்புக் காரணமாகத் தான் ஈழப்போர் அதன் அடுத்த கட்ட வளர்ச்சியை அடைந்தது. அதுமட்டுமல்ல தமிழகத்தில் மொத்தம் 19 பேர் ஈழத்தமிழர்களுக்காக தீக்குளித்திருக்கிறார்கள். இவர்களில் யாருமே திருகோணமலையில் இருக்கும் எண்ணெய்கு தங்களுக்காகவோ அல்லது பலாலி விமானநிலையத்தை திற என்று கூறியோ அல்லது காங்கேசன்துறைக்கும் நாகப்பட்டினத்திற்கும் இடையில் கப்பலை விடு என்று கேட்டோ அல்லது கலாச்சார மண்டபம் ஒன்றை கட்டிக்கொடு என்று கேட்டோ அவர்கள் தீக்குளிக்கவில்லை. தமிழர்களுக்கு ஒன்று என்றதும் அவர்கள் தீக்குளித்தார்கள். ஈழத்தமிழர்கள் அந்த 19 பேரின் சாம்பலையும் கடந்து சென்று அதாவது தமிழகத்தைக் கடந்து சென்று அரசியல் செய்வது கடினம்.

இவ்வாறாக, ஈழத்தமிழர்களுக்கு தமிழகத்தோடு உள்ள ராஜதந்திர நலன்கள் கலக்காத பிணைப்பை, இந்தியா தனது புவிசார் அரசியல் நலன்களுக்காக பயன்படுத்தியது. அதன் விளைவாக ஈழப்போர் வளர்ந்தது. பின்னர் இந்தியா அதே புவிசார் நலன்களின் அடிப்படையில் இந்திய இலங்கை உடன்படிக்கையைச் செய்த பொழுது விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் கசந்தன. விளைவாக துரோணர்களுக்கும் அர்ச்சுனர்களுக்கும் இடையே மோதல்கள் வெடித்தன. ஈழப்போர் தமிழகத்திற்கும் விரிவடைந்தது.

அது பழையகதை. புதியகதை என்ன வென்றால், ஈழப்போரின் இறுதிக்கட்டத்தின் பின் தமிழகத்துக்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையிலான இடைவெளிகள் முன்னப்பொழுதையும் விட அதிகரித்துள்ளன என்பது தான். குறிப்பாக திராவிட கட்சிகளுக்கும் ஈழச்செயற்பாட்டாளர்களுக்கும் இடையே இடைவெளிகள் அதிகமாகி வருகின்றன. சமூகவலைத்தளங்களில் நடக்கும் வாதப் பிரதிவாதங்கள் அதைக் காட்டுகின்றன. மிகக் குறிப்பாக “நாம்தமிழர்” கட்சியின் எழுச்சியோடு தமிழகத்தில் உள்ள பெரிய கட்சிகள் ஈழத்தமிழர் விவகாரத்தில் இருந்து சற்று ஒதுங்கிநிற்கும் ஒருநிலைமை தோன்றியிருக்கிறது. மேலும் பாரதிய ஜனதாவின் தமிழக அமைப்பாளர் தனது உள்நாட்டு அரசியல் தேவைகளுக்காக ஈழப் போராட்டத்தை திராவிட கட்சிகளிடமிருந்து ஹைஜாக் பண்ண முற்படும் ஒருநிலைமையும் வளர்ந்து வருகிறது. இதில் கடந்த வாரம் ரணில் மோடி சந்திப்பை யொட்டி தமிழக முதல்வர் டெல்லிக்கு ஒருகடிதம் எழுதியது உற்சாக மூட்டும் ஒருமாற்றம். அதாவது 2009க்கு முன்னைய நிலைமைகளோடு ஒப்பிடுகையில் இப்பொழுது தமிழகத்துக்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையிலான உறவுகள் ஒப்பீட்டளவில் சோதனைக்கு உள்ளாகி வருகின்றன. புவியியல் அருகாமை, இன அருகாமை, மொழி அருகாமை, பண்பாட்டு அருகாமை, மத அருகாமை போன்ற அருகாமைகள் காரணமாக பிணைக்கப்பட்டிருந்த மக்கள், அரசியல் காரணங்களால் படிப்படியாகத் தூரமாகிச் செல்லும் ஒரு பின்னணியில், பாக்கு நீரிணையின் இருபுறங்களிலும் காணப்படும் தமிழ்ச் சமூகங்களுக்கிடையிலான பிணைப்பைப் பலப்படுத்தக் கூடிய சில திட்டங்களை இந்தியா முன்வைத்தது. அத்திட்டங்களை புலம்பெயர்ந்த தமிழர் அமைப்பு ஒன்றும் ஊக்குவித்தது. பலாலியில் இருந்து ஒருவான்வழியையும் காங்கேசன்துறையில் இருந்தும் மன்னாரில் இருந்தும் இரண்டு கடல் வழிகளை யுந்திறப்பது மேற்படி பிணைப்புத் திட்டங்களின் நோக்கம். யாழ்ப்பாணத்தில் இந்திய நிதி உதவியோடு கட்டப்பட்டுள்ள கலாச்சார மண்டபமும் அதற்குள் அடங்கும்.

ஆனால் இலங்கை அரசாங்கம் இத்திட்டங்கள் அவற்றின் முழுவளர்ச்சி அடைவதை ஏதோ ஒருவிதத்தில் தடுத்து வருகின்றது. பலாலி விமான நிலையத்தை ஒருசர்வதேச விமான நிலையமாகத் தர முயர்த்துவதற்கு அதன் ஓடுபாதையை பெரிதாக்க வேண்டும். அதற்கு இலங்கை அரசாங்கம் இன்று வரை அனுமதிக்கவில்லை. சில டியூற்றி பிறீ மதுக்கடைகளைத் திறப்பதன் மூலம்




பலாலியை சர்வதேச விமான நிலையமாகத் தர முயர்த்தி விட முடியுமா? காங்கேசன் துறைக்கும் தமிழகத்துக்கும் இடையிலான கடல்வழி இன்று வரை திறக்கப்படவில்லை. அது இதோ திறக்கப் படுகிறது என்று எத்தனை தடவைகள் கூறப்பட்டுவிட்டது? மன்னாரிலும் அப்படித்தான். ஏன் அதிகம் போவான்? தமிழ்மக்களுக்கு என்று இந்தியா யாழ்ப்பாணத்தில் கட்டிக்கொடுத்த கலாச்சார மண்டபத்தை இன்று வரை முழுமையாக இயங்கவைக்க முடியவில்லை. அதற்கு வேண்டிய நிர்வாகக் கட்டமைப்பையும் உருவ கமுடியவில்லை. அகட்டடத்தை தமிழ் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட மாநகரசபையிடம் கொடுப்பதா ? அல்லது மத்திய அரசாங்கத்தின் கீழ் வைத்திருப்பதா என்று முடிவெடுக்கப்பட்டுவிட்டதா?

இப்படிப்பட்டதோர் பின்னணியில், இப்பொழுது மேலும் புதிய பிணைப்புத் திட்டங்கள் பற்றிச் சிந்திக்கப்படுகிறது. குறிப்பாக இலங்கைக்கு இந்தியாவுக்கும் இடையே தரைவழியைத் திறக்கும் நோக்கத்தோடு ஒருபாலத்தை கட்டுவது பற்றிய முன்மொழிவை ரணில் விக்ரமசிங்க டெல்லியில் முன்வைத்திருக்கிறார். அவர் ஏற்கனவே இதுபோன்ற ஒருமுன்மொழிவை 2002 2004 வரை பிரதமராக இருந்தபோது இந்தியாவிடம் முன்வைத்திருக்கிறார். இவ்வாறு இலங்கையை இந்தியாவோடு ஒரு பாலத்தின் மூலம் இணைக்கும் திட்டத்திற்கு அவர் தாமாக முன்வந்து வாய்ப்பை வழங்கியதன் மூலம் இந்தியாவின் பாதுகாப்பு சார் கவலைகளை நீக்க முயற்சிக்கிறார் என்றும் எடுத்துக்கொள்ளலாம். “உங்களோடு எங்களைப் பிணைத்துக் கொள்ளும் ஒரு பாலத்தைக்கட்ட நான் தயார் “என்ற செய்தியை அவர் இந்தியாவுக்கு வழங்கியிருக்கிறார். அதன் மூலம் இனப்பிரச்சினை தொடர்பில் இந்தியாவிலிருந்து வரக்கூடிய அழுத்தங்களை அவர் தவிர்த்திருக்கிறார் என்று எடுத்துக் கொள்ளலாமா?

ஈழத் தமிழர்கள் பாக்கு நீரிணையின் இரு புறங்களிலும் உள்ள இரண்டு தமிழ் சமூகங்களுக்கும் இடையிலான பிணைப்பைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்க, ரணில் விக்கிரமசிங்க சிங் களத்தீவுக்கு ஒரு பாலம் அமைக்கலாம் என்று தாமாக முன்வைத்து ஒரு முன்மொழிவை கொடுத்திருக்கிறாரா? அல்லது அண்ணாமலையை லண்டனுக்கு அழைத்து உறவுப் பாலம் அமைப்பதற்கு புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்கள் முயற்சிக்க, ரணில், சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைக்க முன் வந்திருக்கிறாரா?

அல்லது இந்துத்துவாவை ஒரு கொழுக்கியாக பயன்படுத்தி பாரதிய ஜனதா அரசாங்கத்தைநெருங்கிச் செல்லலாம் என்று நம்பும் ஒரு பகுதி ஈழத்தமிழர்கள் அதற்காகக் கடுமையாக உழைத்துக் கொண்டிருக்க, ரணில் விக்கிரமசிங்க புதிய பிணைப்பு திட்டங்களின் மூலம் இந்தியாவை நெருங்கிச் சென்று இனப்பிரச்சினை தொடர்பில் இந்தியா தன்மீது அழுத்தங்களை பிரயோகிக்க முடியாத படி நிலைமைகளை வெற்றிகரமாகக் கையாள முயற்சிக்கிறாரா?

‘பலாலி விமான நிலையத்தை ஒருசர்வதேச விமான நிலையமாகத் தர முயர்த்துவதற்கு அதன் ஓடுபாதையை பெரிதாக்க வேண்டும். அதற்கு இலங்கை அரசாங்கம் இன்று வரை அனுமதிக்கவில்லை. சில டியூற்றி பிறீ மதுக்கடைகளைத் திறப்பதன் மூலம் பலாலியை சர்வதேச விமான நிலையமாகத் தர முயர்த்தி விட முடியுமா?’

# “இலங்கை மலையக மக்களுக்கு காணி உரிமை பெற்றுக் கொடுப்பதற்கு அனுமதி பெறப்படும்” என்கிறார் இலங்கை அமைச்சர் ஜீவன் தொண்டமான்

கெஞ்சி கேட்டால் அது பிச்சை, துணிந்து கேட்டால் தான் அது உரிமை. எனவே, காணி உரிமையை துணிந்து கேட்டுள்ளோம். அது நிச்சயம் கிடைக்கும். “மலையக பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமை பெற்றுக் கொடுப்பதற்கான கூட்டு அமைச்சரவைப் பத்திரம் எதிர்வரும் காலங்களில் முன்வைக்கப்பட்டு, அதற்கான அனுமதி பெறப்படும்.” என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண, காணி அமைச்சர் ஹரின் பெர்னான்டோ, தொழில் அமைச்சர் மனுச நாணயக்கார ஆகியோருடன் இணைந்தே இந்த கூட்டு அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார். அத்துடன், இலங்கை வாழ் மக்களுக்காக முன்வைக்கப்பட்ட அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் தவறான கோணத்தில் கருத்துகள் பகிரப்பட்டு வருகின்றன, அவை நிறுத்தப்பட வேண்டும், 13 ஆவது திருத்தச்சட்டமென்பது சிறந்த ஜனநாயகக் கருவியாகும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.



அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், ” மலையக பெருந்தோட்ட பகுதிகளில் வாழும் சுமார் 2 லட்சத்து 35 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடுகள் தேவைப்படுகின்றன. இந்திய அரசால் 14 ஆயிரம் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கை அரசாலும் வீடமைப்பு திட்டம் முன்னெடுக்கப்பட்டாலும் இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு காலம் எடுக்கலாம். எனவே தான் பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமையை பெற்றுக்கொடுப்பதற்கு குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதற்கு அரசாங்கம் இணங்கியுள்ளது.

பெருந்தோட்டத்துறை அமைச்சர் இது பற்றி வெளிப்படையாக அண்மையில் அறிவித்தார். எனவே, எனது அமைச்சு உட்பட நான்கு அமைச்சுக்களின் செயலாளர்களும் கலந்துரையாடி, இவ்விவகாரம் தொடர்பாக அமைச்சரவைப் பத்திரமொன்றை முன்வைப்பார்கள். அது கூட்டு அமைச்சரவைப் பத்திரமாக அமைச்சரவையில் முன்வைக்கப்படும்.

**இலங்கை செய்திகள்**

ரணசிங்க பிரேமதாச ஆட்சி காலத்தில் பெருந்தோட்ட நிறுவனங்கள் தனியாருக்கு வழங்கப்பட்டன. இது தொடர்பான குத்தகை ஒப்பந்தம் பலவீனமானது. லயன் வீடுகள் கூட தோட்டக் கம்பனிகளுக்குரிய சொத்துகளாக வழங்கப்பட்டுள்ளன.

கெஞ்சி கேட்டால் அது பிச்சை, துணிந்து கேட்டால் தான் அது உரிமை. எனவே, காணி உரிமையை துணிந்து கேட்டுள்ளோம். அது நிச்சயம் கிடைக்கும். அதேவேளை, அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் என்பது இலங்கையில் 9 மாகாணங்களுக்குரியது. மாறாக அது வடக்கு, கிழக்குக்கு மட்டும் அல்ல. எனவே, 13 கிடைத்து விட்டால் தமிழர்கள் வென்று விடுவார்கள் என்ற கோணத்தில் கருத்துகள் பரப்படுவது நிறுத்தப்பட வேண்டும். இது விடயத்தில் ஊடகங்களும் சமூகப் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.” என்றார்.

## கிளிநொச்சி காஞ்சிபுரம் கிராமத்தில் பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்து நான்கு வயது சிறுவன் பலி

பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்து நான்கு வயது சிறுவன் பலியான சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. கிளிநொச்சி காவல்துறை பிரிவிற்குட்பட்ட பரந்தன் காஞ்சிபுரம் கிராமத்தில், பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்து நான்கு வயது சிறுவன் பலியாகியுள்ளார்.

குறித்த சம்பவம் (26.07.2023) மதியம் 1:30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. தாயார் நாளாந்த கூலி வேலைக்காக சென்ற பொழுது வீட்டில் தந்தையுடன் இருந்த சிறுவன் விளையாடிக் கொண்டிருந்துள்ளார். தந்தையார் நித்திரையில் இருந்த பொழுது காணிக்குள் அமைந்திருந்த பாதுகாப்பற்ற (மண்) கிணற்றில் விழுந்துள்ளார்.

திடீரென கண் விழித்த தந்தை சிறுவனைக் காணாது தேடியுள்ளார். இந்த நிலையில் குறித்த பாதுகாப்பற்ற கிணற்றில் சேற்றில் புதைந்த நிலையில் காணப்பட்டதையடுத்து சிறுவனை மீட்டு உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற பொழுது உயிரிழந்துள்ளார்.

சந்திரகுமார் பாதுசன் என்ற சிறுவனே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். உயிரிழந்த சிறுவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பிரேதபரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கிளிநொச்சி காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

## சர்வதேச விசாரணை மூலமாகத் தான் இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்பதை நிரூபிக்க முடியும் என்கிறார் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்



சர்வதேச விசாரணை மூலமாகத் தான் இலங்கை யில் நடந்தது இனப் படுகொலை என்பதை நிரூபிக்க முடியும். எனவே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கேட்கின்ற சர்வதேச விசாரணை நியாயமானது. அவர்களுடைய கோரிக்கைக்கு பூரணமான ஆதரவு வழங்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் 27ம் திகதி புதன் மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,,,

2015 ஆம் ஆண்டு ஐந்தாம் ஆண்டு ஐ.நா.மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக சர்வதேச கண் காணிப்பாளர்களின் விசாரணை வேண்டும் என்பதே எங்களுடைய தொடர்ச்சியான வலியுறுத்தல். அதன் அடிப்படையில் தான் எங்களுடைய தொடர்ச்சியான கோரிக்கை அமைகிறது. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கோரிக்கை என்பது நியாயமான ஒரு கோரிக்கையாக உள்ளது. இங்கு கொலை செய்தவர்களே விசாரணை செய்வதும் இ,தீர்ப்பளிப்பதுமான ஒரு நாடாக இலங்கை இருக்கிறது. யார் கொன்றார் களோ, யார் எங்களுக்கு மிகப்பெரிய அழிவை ஏற்படுத்தினார்களோ அவர்களே அதனை விசாரிப்பதும், அதற்குரிய தீர்ப்பு வழங்குவதற்கான ஒரு நாடாக இலங்கை இருக்கின்றது.

இங்கு நடந்த மனித படுகொலைக்கும் . காணாமல் ஆக்கப் பட்டவர்களுக்கு அதாவது ஒப்படைக்கப் பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை கூட விசாரிக்கின்றவர்கள் அவர்களை காணாமல் ஆக்கியவர்கள். எனவே சர்வதேச விசாரணை என்பது தொடர்ச்சியான கோரிக்கை. அது கட்சிக்கு அப்பால் வடக்கு கிழக்கிற்கு அப்பால் அனைத்து தமிழ் கட்சிகளின் கோரிக்கை யாகவும் உள்ளது.

சர்வதேச விசாரணை மூலமாகத்தான் இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்பதை நிரூபிக்க முடியும். எனவே காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவுகள் கேகின்ற சர்வதேச விசாரணை நியாயமானது. அவர்களுடைய கோரிக்கைக்கு பூரணமான ஆதரவு வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.




## மாணவர்களின் எதிர்ப்பு போராட்டங்களுக்கு மத்தியில் பதவியேற்ற யாழ்ப்பாணம் வேலணை மத்திய கல்லூரியின் அதிபர்!

யாழ்ப்பாணம் வேலணை மத்திய கல்லூரியின் புதிய அதிபராக கஸ்ரன் றோய் தனது கடமைகளை நேற்று வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் பொறுப்பேற்றுக் கொண்டார். கடந்த இரண்டு மாதங்களாக குறித்த கல்லூரியில் அதிபர் இல்லாத போதிலும், கிறிஸ்தவ மதமற்ற அதிபர் வேண்டும் என கோரி பல்வேறு சமூகமட்ட அமைப்பினர், பாடசாலை பழைய மாணவர்கள்,கல்லூரி மாணவர்கள் கவனயீர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்தனர். இந்நிலையில் இவ்வாறு நியமனம் வழங்கப்பட்டது. தீவகவலய கல்விப் பணிமனையின் அதிகாரிகள், வேலணை மத்திய கல்லூரி உப அதிபர் மற்றும் ஆசிரியர்கள் பலரும் இந்த பதவியேற்பில் கலந்துகொண்டனர்.



ஓம் சக்தி துணை

# ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம்

## சோமசுந்தரேஸ்வரர் தேவஸ்தானம்

585 MIDDLEFIELD RD, UNIT 1 & 2, TORONTO (MIDDLEFIELD & FINCH)

TEL: 416 535-6560

அம்மன்

## பிரம்மோற்சவ பெருவிழா 2023

அம்மன் திருவிழா

(14.07.2023 வெள்ளி முதல் 02.08.2023 புதன் வரை)

திருவிழா நிகழ்ச்சி நிரல்



| | |
|---|---|
| 14.07.2023 | வெள்ளி நண்பகல் 11மணிக்கு கொடியேற்றம் |
| 21.07.2023 | ஆடிப்பூரத் திருவிழா ருதுசாந்தி - மாலை 7:00 மணிக்கு |
| 23.07.2023 | மாம்பழத் திருவிழா - ஞாயிறு காலை 10 மணிக்கு<br>சதுர் சஷ்டி உபசாரபூஜை - மாலை 7:00 மணிக்கு (64 உபசாரம்) |
| 25.07.2023 | மஞ்சத் திருவிழா - செவ்வாய் மாலை 8 மணிக்கு |
| 27.07.2023 | வேட்டை திருவிழா - வியாழன் மாலை 6 மணிக்கு |
| 28.07.2023 | சப்பரத் திருவிழா - வெள்ளி மாலை 8 மணிக்கு |
| 29.07.2023 | தேர்த்திருவிழா - சனி காலை 11:00 மணிக்கு |
| 30.07.2023 | தீர்த்தத் திருவிழா - ஞாயிறு காலை 11 மணிக்கு<br>கொடியிறக்கம் - மாலை 8 மணிக்கு |
| 31.07.2023 | பிராயச்சித்தம் அபிஷேகம் - திங்கள் காலை 9 மணிக்கு<br>திருக்கல்யாண உற்சவம் - திங்கள் மாலை 8 மணிக்கு |
| 01.08.2023 | பூங்காவனம் - செவ்வாய் மாலை 8 மணிக்கு |
| 02.08.2023 | வயிரவர் மடை புதன் மாலை 7 மணிக்கு |

இங்ஙனம் இறைபணியில் ஆலய தர்ம கர்த்தா




## அனைவரும் வருக - அன்னையின் அருள் பெருக



Join us for our Annual Picnic

DRIEBERG COLLEGE CHAVAKACHCHERI
ALUMNI ASSOCIATION – CANADA

*22nd Annual Picnic & Annual General Meeting*

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழைய மாணவர்
ஆசிரியர் சங்கம் - கனடா
22வது ஆண்டு கோடைக்கால ஒன்றுகூடல்

திகதி: ஞாயிறு ஆவணி 13, 2023- **Sunday August 13, 2023**
நேரம்: 10.00 முதல், 7.00 வரை - **10.00 a.m. to 7.00 p.m.**
இடம்: **L`Amoreaux Kidstown Water PARK**
**Picnic Area A** (Birchmount & Finch)
**3159 Birchmount Road,**
**Scarborough ON M1V 1S4**

பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், சிநேகிதர்கள், யாவரும் குடும்பத்துடன் சமூகம் தந்து, 22வது ஆண்டு கோடைக்கால ஒன்றுகூடலில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம். காலை, மதிய, உணவும், மாலை சிற்றுண்டியும் வழங்கப்படும். விளையாட்டு போட்டிகளும் இடம் பெறும்.

**RSVP before August 05, 2023 Please Contact:**

| | |
|---|---|
| Mohan Devabalan | 416-274-2169 |
| Rajagopal Mathialagan | 905-294-5419 |
| Vasuki Devadason | 416-266-1234 |
| Reginald Thevaranjan | 416-446-2965 |
| Gunam Hunt | 905-472-0379 |



# Sapphire Banquet & Catering

Specializing in Videography & Photography

- Anniversary Party
- Birthday Party
- Bridal Shower
- Engagement Party
- Family Get-together
- Graduation Party
- Religious Ceremonies
- Wedding Showers
- and more...

SHIVA SUBRAMANIAM (647) 406-4868



## கனடா கதிரிப்பாய் மக்கள் ஒன்று கூடல் 2023

அன்பான கனடா வாழ் கதிரிப்பாய் உறவுகளே!
மேற்படி நிகழ்வுக்கு உங்கள் அனைவரையும்
குடும்பத்துடன் கலந்து சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்!

**DATE: Sunday, August 06th**
**TIME: 10am**
**LOCATION: Morningside Park**

தொடர்புகளுக்கு:
கண்ணன் & ரமேஷ்



உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?

Coverall Group Inc

- Painting
- Kitchens
- Flooring
- Pot lights
- Bathrooms
- Decks
- Basements
- Accent Walls

Contact us 416.706.8160

# கனடா அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்



## CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 Canada
Tel: 416-321-6104 | Fax: 416-321-7557
www.ayyappan.com

## கொடியேற்ற மஹோற்சவ விஞ்ஞாபனம் (ஐயப்பன்)
## ஐயனார் அலங்கார உற்சவம்
## (அனலைதீவு ஐயனார் உற்சவ காலம்)

கொடியேற்றம் (ஐயப்பன்)
23-07-2023 ஞாயிறு
காலை 11:00 மணி

ஐயனார் உற்சவ ஆரம்பம்
28-07-2023 வெள்ளி

தேர்த்திருவிழா
(ஐயப்பன், ஐயனார்)
05-08-2023 சனி

அபிசேகம்: காலை 7:00 மணி
பூசை: காலை 8:00 மணி
வசந்தமண்டப பூசை: காலை 9:00 மணி
தேர் புறப்பாடு: 11:00 மணி
பச்சை சாத்தல்: 12:00 மணி



சப்பறம் (ஐயப்பன், ஐயனார்)
04-08-2023 வெள்ளி
மாலை 7:30 மணி

தீர்த்தம் (ஐயப்பன், ஐயனார்)
06-08-2023ஞாயிறு

அபிசேகம்
காலை 8:30 மணி
வசந்தமண்டப பூசை 10:30 மணி
தீர்த்த உற்சவம் 11:00 மணி

பூங்காவனம்:
ஐயனார் திருக்கல்யாணம்
07-08-2023 திங்கள் மாலை

வைரவர் மடை
08-08-2023 செவ்வாய் மாலை

### கிரியா கால நேர விபரங்கள்

| காலை | | மாலை | காலை | | மாலை |
|---|---|---|---|---|---|
| 7:00 | நடை திறத்தல் | 4:30 | 10:30 | யாகபூசை, ஸ்தம்பபூசை | 7:00 மணி |
| 8:00 | பூசை | 5:00 | 11:30 | வசந்த மண்டப பூசை | 7:45 மணி |
| 9:00 | ஸ்நபனாபிசேகம் | 5:30 | 12:00 | சுவாமி வீதி உலா | 8:30 மணி |
| 10:00 | பூசை | 6:30 | 1:45 | நடை சாத்தல் | 9:15 மணி |

விழா காலங்களில் அடியார்கள் தவறாது ஆலயத்திற்கு வருகை தந்து விழாக்களைச் சிறப்பித்து ஐயப்பனின் திருவருள் பெற்றுச் செல்லுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். உற்சவத்திற்குரிய அபிஷேக, பூசைத் திரவியங்கள் ஆகியவற்றை அடியார்கள் தந்துதவலாம்.

# MORTGAGE FINANCIAL SOLUTIONS




- RESIDENTIAL
- COMMERCIAL
- INDUSTRIAL
- CONSTRUCTION
- VACANT LAND



**NESAN** Subramaniam **416-908-5656**

## Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity line of Credit • Pre-approvals •Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

Powered By
MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Brokeerage #10330 / Licence # M15001465

Scotiabank · TD Canada Trust · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# கனேடிய நாடாளுமன்றத்தில் முதல் தமிழ் பேசும் இலங்கைத் தமிழர் ஹரி ஆனந்தசங்கரி அமைச்சராகப் பதவியேற்றார்



தமிழ் கனேடியர் இன்று வரலாறு படைத்த ஒரு நாள்.. கனேடிய நாடாளுமன்றத்தில் முதல் தமிழ் பேசும் இலங்கைத் தமிழர் அமைச்சராகப் பதவியேற்றார். கனடாபூர்வீகக் குடிகள் மற்றும் அவர்கள் உரிமைகள் மற்றும் உறவுகளுக்கு பொறுப்பான. அமைச்சராக எம்மவர் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் பதவியேற்றுள்ளார் என்பதை நாம் பெருமையுடன் அறியத்தருகின்றோம்.

Tamil Canadians made a History Today. First Tamil Speaking Sri Lanka Born Minister Gary Anandasangaree swore as Minister of Crown and Indigenous Relations. in Canadian New Cabinet and Parliament. Ceremony took place at Secretariat of the Governor General of Canada.

Scarborough-Rouge Park, Ont. MP Gary Anandasangaree was first elected in 2015 and now becomes a Minster in Canadian Minster as Minister of Crown and Indigenous relations.







# கனடாக் காக்கை

கண்டேன் காக்கை ஒன்றை கனடா நாட்டில்
கருவாட்டுத் தலையொன்று அதன் காலடியில்
உணவு கிடைத்தால் ஊர்கூட்டும் காக்கை
ஊமைபோல் உட்கார்ந்து உண்டது உணவை.
கத்தவில்லை கரையவில்லை கடைக்கண்ணாலும் பார்க்கவில்லை
கருவாட்டுத் தலையினிலே அதன்கவனம் இருந்தது
கனடாவில் நம்மவர் ஒற்றுமை போல்
கனடாக் காக்கைகளும் ஒற்றுமை மறந்தது ஏன்?.
அன்றொரு ஆடி அவமாசை நாளில்
அழைத்தேன் காக்கையரை விருந்து வைக்க
கடும் முயற்சியால் வந்தது ஒருகாக்கை
கண்ணெடுத்தும் பார்க்கவில்லை நான்வைத்த விருந்தை
சைவம் பிடிக்கலையா? என்சமையல் சரியில்லையா?.
கரைந்தழைக்க கனடாவில் காகம்தான் இல்லையா?
கரைந்து போய்விட்டதா கரைந்தழைக்கும் குணம்?
நாடுவிட்டு நாடு வந்தால் நாலும் போய்விடுமா?
நல்லதொரு பதில் இதற்கு நம்மவரே சொல்லும்.
ஒற்றுமைக்கு உதாரணமாய் உலகறிந்த காக்கையரே
உம்மினத்தில் உலுத்தன் குணம் வந்ததேன்?
எம்மினத்தை பார்த்து நீ கற்றுக்கொண்ட பாடமா?
இன்றுடனே விட்டுவிடு இந்த ரூடவ்னக் குணத்தையே!.

ஆக்கம்...
கவிஞர் மார்க்கம் சந்திரன்

# கடந்தவையும் கடப்பவையும் (64)



நுழைவதற்கு மனமின்றி நுழைந்ததாலோ என்னவோ
பிழையாகிப்போனது நுழைவும் எழுத்தில் அங்கு

சினமில்லா வேலை செய்யும் தம்பியவன்
சுலபமாய் காண்பானாம் அடையாளம்

கேட்ட காசைக் கொடுத்த பின்பு
கூட்டிப் போனான் ஒரு அறைக்கு

கொஞ்சம் இருட்டாக இருந்தாலும் குளிர்ச்சி அங்கு
நெஞ்சம் நிறைய சாத்வீக சிந்தனையோடும்

சாந்தமான முகத்தோடும் இந்தியாவில் இருந்து
என்றோ ஒருநாள் வந்தவர் வீற்றிருந்தார் இன்று

அவரில்லா ஓரிடமும் இல்லை என்பதுபோல் பாவம்
தெருவெல்லாம் அவர் சிலையை வைக்கிறார்கள் அவர்

இயல்பில் நல்லவர் என்றுதான் படித்தோம் சிலர்
செயலால் பொல்லாத பழியவர்க்கு அவ்வறையில்

அவரருகில் இருந்தன பல நூல்கள் அன்று
ஒரு நூலும் இருக்கவில்லை ஆங்கிலத்திலேனும்

தமிழ் என்ற சொல்லுக்கே இடமில்லை அன்று
தமிழ் மொழியில் நூலொன்றும் இருக்கவில்லை

அன்றொரு காலம் தட்டுப்பட்டும் தடக்குப்பட்டும்
அன்றாடம் ஆசையோடு பேசியது சிங்களம்

மொழியோடும் ஒருநாளும் கோபமில்லை ஆனால்
தெளிவாக அவருணர்வு தெரியும் போது? மேலும்

பெரிதாக மாட்டியுள்ள படங்களிலும் வரலாறு அதுவும்
சரியாக இருக்குமோ தெரியாது அன்று

முறையாக அம் மொழியதனைப் படித்திருந்தால் அவ்வரலாற்றில்
பிழையெது என்பதனைச் சொல்லிடலாம் அதனாலென்ன

யாழ்ப்பாணக் கோட்டை பற்றிய வரலாறு
கேள்விப்பட்டதோ பலவாறு அதில்

படித்து அறிந்ததும் எண்பதின் பின்
வெடித்ததை கேட்டு உணர்ந்ததும் என எத்தனையோ அதை

பகிர்ந்துகொள்வது இங்கு பொருந்தும் என்பதால்.....
யாழ்ப்பாணக் கோட்டை இது

ஆயிரம் கதைகளைத் தன்னகத்தே கொண்ட இடம்
தமிழரசன் சங்கிலியன் மடிந்தபின்பு எழுந்துவாம் கோட்டையிது

போரில் வெல்ல முடியாச் சங்கிலியனை வீண்
பழி போட்டே கொன்றனராம் போத்துக்கேயர்

கொன்றபின்பும் மீண்டும் வீரரொருவர் வந்திடுவார்
என்பதாலோ பாதுகாப்பாய் ஒரு கோட்டை

சதுர வடிவில் சகல வசதியும் கொண்டதுவாய் நல்லூர்
ஆலயத்தை இடித்தழித்த கல்லினாலும் கட்டியதாம்

அதனாலோ என்னவோ ஒல்லாந்தர் வரும்போதும் கட்டி
முடியாத கோட்டையது போத்துக்கேய ஒல்லாந்தப் போரிலே

ஒல்லாந்தரின் கைவசம் ஆனதாம் பின்
ஒல்லாந்தரும் இடித்துவிட்டு ஐங்கோண வடிவில் அமைத்தனராம்

அசையாத கோட்டையாக இருந்த கோட்டை
திசையாவும் ஆண்டரசாம் ஆங்கிலேயர் வசம் வீழ

அமைதியாய் திரும்பினராம் ஒல்லாந்தர் தம்நாடு நீண்டகாலம் தற்
பெருமையுடன் இருந்துகொண்ட ஆங்கிலேயர்

நாற்பத்தி எட்டில் நாடு திரும்ப
உள்நாட்டுக்காரரிடம் கோட்டை போச்சு

எண்பதுகளில் சிங்கத்திற்கும் புலிக்கும் சண்டை வர
மக்களின் மனதிலோ அச்சம் எழ

அன்றாடம் அடிபாட்டால் திண்டாடிய
அன்றைய மக்கள் (பலர் ) கொண்டாடினார்கள் ஒருநாள்

கோட்டையில் தமிழர் கொடி புலிக்கொடி பறக்க ஆனாலும்
நீண்ட காலம் நிலைக்கவில்லை மீண்டும் போர்

மறுபடியும் கொடி மாற இன்று
பெருமளவு மக்களின் சுற்றுலாத் தலமாக கோட்டை

ஆழமான ஆழிகள், பீரங்கித் தளங்கள்,
நீளமான சுரங்கப் பாதைகள் , ஆயுத அறைகள்

சிறைச்சாலைகள் கைதிகளைத் தூக்கிலிடும் இடம் என
கூரையில்லா இடிந்திருக்கும் இடங்களையும் ஓரிடத்தில்

நின்றபடி தம்பியவன் காட்டி நிற்க
ஓர் ஊகத்தில் போய்ப் பார்த்து வந்தோம்.

❒ உமா மோகன்

தொடரும்...

## அதிகாரப் பகிர்வு தொடர்பில் அனைத்து கட்சி கூட்டத்தில் நடந்தது என்ன?

# பேச்சை முறித்துக்கொண்டு வெளியேறினார் ஜனாதிபதி

சிறப்பு கட்டுரை

மாகாணத் தேர்தலை நடத்த வலியுறுத்தியதால் ஏற்பட்ட சர்ச்சையை அடுத்து அவருக்கு கோபம். வெளியக சுயநிர்ணய உரிமையைக் கோர வேண்டி வரும் என்றார் சம்பந்தன். அதிகார பகிர்வு அல்லது தேர்தல் இதில் ஏதாவது ஒன்று தான் ரணில் காட்டம்

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராய்வதற்காகக் கூட்டப்பட்ட சர்வகட்சிக் கூட்டத்தில் இருந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பேச்சை முறித்துக்கொண்டு திடீரென வெளியேறிச் சென்றார். இதனால் கூட்டம் எந்தவித உருப்படியான தீர்மானமோ முடிவோ இன்றி இடைநடுவில் முடிவடைந்தது.

கடந்த வாரம் இந்தியா சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு பிரதமர் நரேந்திர மோடியுடன் பேசும்போது, அதிகாரப் பகிர்வு தொடர்பில் நாடாளுமன்றத்தின் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசவுள்ளார் என்று தெரிவித்திருந்தார். அவர் நாடு திரும்பிய பின்னர் நேற்று அந்தக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதி செயலகத்தில் மாலை 5.30 மணிக்குத் தொடங்கிய கூட்டம் இரவு 8 மணி வரையும் தொடர்ந்தது. கூட்டத்தின் தொடக்கத்தில் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி உரையாற்றினார். மாகாண சபைகளைத் தொடர்ந்தும் செயற்படுத்துவதானால், அதில் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகளைச் சீர் செய்யவேண்டும் என்றார். அதற்காகவே புதிய சட்டங்கள் கொண்டுவரப்படவுள்ளன என்றார் ரணில்.

நாட்டின் கொள்கைசார் முடிவுகளை மத்திய அரசு எடுத்துக்கொண்டு ஏனைய அனைத்து விடயங்களையும் மாகாண சபைகள் மேற்கொள்ளும் வகையில் அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் என்றார் அவர். அதிகாரங்கள் பகிரப்படுவதற்கு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாடாளுமன்ற உறுப்பினர்களான லக்ஸ்மன் கிரியெல்ல, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், வாசுதேவ நாணயக்கார, வீர சுமன ஆகியோர் ஆதரவாகக் கருத்துத் தெரிவித்தனர். விமல் வீரவன்ஸ, உதய கம்பன்பில, சரத் வீரசேகர போன்றோர் வழக்கம்போல அதற்கு எதிராகக் கருத்துத் தெரிவித்தனர்.

தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவர் இரா.சம்பந்தன் தனது உரையில், "தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமை உள்ளவர்கள். அதனை உள்ளகமாகப் பயன்படுத்துவதற்குத் தயாராக இருக்கின்றோம், நீண்ட காலமாகக் காத்திருக்கின்றோம். ஆனால், எதுவும் நடைபெறவில்லை. காலத்தை இழுத்தடிப்பதும் ஏமாற்றுவதுமே தொடர்கின்றது. இப்படிச் சென்றால் நாம் வெளியக சுயநிர்ணய உரிமையைக் கோர வேண்டி வரும். பயன்படுத்துவதற்காக வெளிநாடுகளின் உதவிகளை நாடவேண்டியவர்களாக இருப்போம்'' என்று ஆணித்தரமாகத் தெரிவித்தார்.

இதுவரைக்கும் எதுவும் நடைபெறவில்லை. ஏற்கனவே ஆராயப்பட்டு இணங்கப்பட்ட விடயங்கள் இருக்கின்றன. அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு மீண்டும் மீண்டும் கூட்டங்கள் தேவையில்லை என்றும் சம்பந்தன் காட்டமாக தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்கள் உரையாற்றும்போது, மாகாண சபைத் தேர்தல்களை உடன் நடத்தவேண்டும் என்று வலியுறுத்தினார்கள். அதற்கு பதிலளித்த ரணில் விக்ரமசிங்க "அது பற்றிப் பின்னர் பேசலாம், அது பற்றி ஆராய்ந்து தேர்தலை நடத்தும் முறையைத் தீர்மானிக்க நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும்'' என்று பதிலளித்தார்.

அப்போது குறிக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், "இந்த நாடாளுமன்றம் தேர்தல் முறைமை தொடர்பில் ஆராய்வதற்காக ஏற்கனவே ஒரு தெரிவுக் குழுவை சபாநாயகர் தலைமையில் நியமித்தது. அதன் அறிக்கையும் இங்கே இருக்கின்றது (உயர்த்திக் காட்டினார்). அதில் பழைய தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று தெரிவித்திருக்கின்றது. அதற்காகவே என்னால் தனிநபர் சட்டவரைவு ஒன்றும் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு வர்த்தமானியிலும் வெளியிடப்பட்டது'' என்றார்.

உடனே ஆத்திரப்பட்டுக் குறுக்கிட்ட ஜனாதிபதி, நீங்கள் அதிகாரப் பகிர்வைத்தானே இதுவரை கேட்டு வந்தீர்கள், இப்போது எதற்குத் தேர்தலைக் கேட்கிறீர்கள் என்று எகிறினார்.

அதற்குப் பதிலளித்த சுமந்திரன் மற்றும் சித்தார்த்தன் ஆகியோர், நாம் நீண்ட காலமாகவே தேர்தலை வலியுறுத்தி வருகின்றோம், அதற்காகவே சட்டவரைவையும் நாடாளுமன்றத்தில் முன்வைத்திருக்கின்றோம் என்றனர். அதற்கு இப்போது இரண்டையும் செய்ய முடியாது இரண்டில் ஒன்றைத்தான் செய்ய முடியும் என்று ஆத்திரப்பட்டார் ஜனாதிபதி. அதிகாரப் பகிர்வு அல்லது தேர்தல் இரண்டில் ஒன்றைத்தான் செய்ய முடியும் என்றார் அவர்.

அப்படி அதிகாரதைப் பகிர்ந்து கொண்டாலும் யாருடன் பகிர்ந்து கொள்வீர்கள்? தேர்தலை நடத்தி மாகாண சபைகளில் மக்கள் பிரதிநிதிகள் இருந்தால்தானே அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ள முடியும்? எனவே இரண்டும் வெவ்வேறானவை இல்லையே. தேர்தலையும் நடத்திக்கொண்டு அதிகாரப் பகிர்வு விடயங்களையும் முன்கொண்டு செல்லலாம் என்று விளக்கமளித்தார் சுமந்திரன்.

அப்போது இடைமறித்த வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரன், மாகாண சபைகளைப் பலப்படுத்தும் வகையில் அதிகாரப் பகிர்வை முதலில் செய்து கொண்டு பின்னர் தேர்தலை நடத்தலாம் என்றார். ஆனால் அதனை முன்னாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சுமந்திரன் அறிவித்தார். ''இது வடக்கு மாகாணத்தின் ஒரு நாடாளுமன்றஉறுப்பினரின் (விக்கி) கருத்து மட்டுமே. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள தலைவர்கள் இங்கிருக்கிறார்கள், அவர்கள் சம்மதத்துடன் கூட்டமைப்பின் 10 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதனை எதிர்கின்றோம்'' என்றார்.

"அதிகாரப் பகிர்வைக் கேட்டு வந்த நீங்கள் திடீரென இப்போது எதற்கு தேர்தலை வலியுறுத்துகிறீர்கள்'' என்று ஆத்திரத்துடன் கேட்ட ஜனாதிபதி, சரி இத்துடன் கூட்டம் முடிகின்றது என்று கூறிக்கொண்டு கூட்டத்தைப் பாதியிலேயே முடித்துக்கொண்டு வெளியேறிவிட்டார். இதனால் கூட்டம் பாதியிலேயே எந்தவித உருப்படியான முடிவுகளும் எட்டப்படாமல் முடிவடைந்தது.

"சமஷ்டியைத்தான் கேட்டிருப்போம் 13ஐக் கேட்டிருக்கவே மாட்டோம்'' என்று அந்த கூட்டத்தில் விக்னேஸ்வரன் ரணிலுக்கு எடுத்துரைத்தார். தமிழ் மக்களுடன் ஒப்பந்தம் செய்திருந்தால் சமஷ்டியைத்தான் கேட்டிருப்போம் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தைக் கேட்டிருக்கமாட்டோம் என்று அந்த சர்வகட்சிக் கூட்டத்தில் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அந்தக் கூட்டத்தில் தான் முன்வைத்த கருத்துக்கள் தொடர்பாக அவர் தெரிவித்ததாவது: "அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நீங்கள் நினைத்து நினைத்த மாதிரியெல்லாம் மாற்ற முடியாது. இரண்டு இறைமையுள்ள நாடுகள் சேர்ந்து செய்துகொண்ட ஒப்பந்தம்தான் 13ஆவது திருத்தம். அது தமிழ் மக்களுக்காகத்தான் செய்யப்பட்டது. ஆனால் அதில் தமிழ் மக்கள் கையெழுத்து வைக்கவில்லை. அதனால் நீங்கள் நினைத்தபடி அதனை மாற்ற முடியும் என்று எண்ணவேண்டாம். அந்த ஒப்பந்தத்தில் தமிழ் மக்கள் கையெழுத்து வைக்கும் நிலைமை இருந்திருந்தால் நாங்கள் அப்போதே சமஷ்டியைத்தான் கேட்டிருப்போம். 13ஆவது திருத்தத்தைக் கேட்டிருக்கமாட்டோம்''.

கடந்தகால வரலாற்றை நினைவுபடுத்திய அவர் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன் ஆகிய மூவரும் 1987ஆம் ஆண்டே அப்போதைய பாரதப் பிரதமர் ரஜீவ் காந்திக்கு எழுதிய கடிதத்தில் 13ஐ நிராகரித்திருக்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்டினார். எனவே நீங்கள் 13ஐ நடைமுறைப்படுத்துவது ஏதோ தமிழர்களுக்கு எதையோ கொடுக்கப்போகிறீர்கள் என்று காட்ட முற்படவேண்டாம். இது சட்டத்தில் ஏற்கனவே இருக்கின்றது. இருப்பதை நடைமுறைப்படுத்தத்தான் பார்க்கிறோம் என்று விளக்கிய வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன்

"மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்தபோது அவர் முன்பாக 9 மாகாணங்களின் முதலமைச்சர்களும் நடத்திய கூட்டத்தில், எங்களுக்குச் சகல உரிமைகளும் வேண்டும் சமஷ்டி வேண்டாம் என்று சிங்கள முதலமைச்சர் ஒருவரே கூறினார். சகல உரிமைகளும் வேண்டும் என்று சிங்கள முதலமைச்சரே சொன்னதைக் கவனத்தில் எடுக்கவேண்டும். ஆகவே எல்லா உரிமைகளையும் மாகாணங்களுக்குத் தரவேண்டியதுதான் உங்கள் பொறுப்பு'' என்று வலியுறுத்தினார்.

கூட்டத்தில் பொலிஸ் அதிகாரங்கள் குறித்தும் பேசப்பட்டிருக்கின்றது. அதனை உடனடியாகச் செய்ய முடியாது என்றும் அதற்கான சட்டங்கள் இன்னும் இயற்றப்படவில்லை என்பதால், காலப்போக்கில் அதனை நிறைவேற்றலாம் என்றும் ரணில் தெரிவித்திருந்தார்.

இந்த சர்வகட்சி கூட்டத்தில் கந்துகொண்ட தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தனது முகநூல் பக்கத்தில் இந்த கூட்டம் குறித்த தனது கருத்தை பகிர்ந்துள்ளார். "13ம் திருத்தத்தை முழுமையாக பொலிஸ் அதிகாரத்துடன் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு ஷிலிறிறி பொது செயலாளர் சாகல காரியவாசம், விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, கெவிது குமாரதுங்க, சரத் வீரசேகர ஆகியோர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். SJB, TNA ஆகிய கட்சிகள் தேர்தல் நடத்தும்படி கோரினர்.

இந்நிலையில் "13ஐ முழுமையாக வைத்து தேர்தல் நடத்தினால், தெற்கின் ஏழு மாகாணங்களிலும், வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரத்தை ரணில் வழங்கி விட்டார் என்பதையே அடிப்படையாக கொண்டு தென்னிலங்கையில் இனவாத பிரசாரம் நடக்கும். ஆகவே தேர்தலை நடத்த முடியாது'' என ஜனாதிபதி ரணில் திட்டவட்டமாக கூறி விட்டார். ஆகவே, எக்காரணம் கொண்டும், ஜனாதிபதி தேர்தலை தவிர வேறு எந்த தேர்தலையும், ரணில் நடத்த விட மாட்டார் என்பது தெளிவாகிறது. இதுதான் அரசியல் யதார்த்தம். ஆகவே நாம் ஜனாதிபதி தேர்தலுக்கு தயாராவோம். புதிய ஜனாதிபதி, அதையடுத்து புதிய பாராளுமன்றம், என்ற நிலைமாறல்களுக்கு பிறகுதான் தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் எந்த மாற்றமும் ஏற்பட முடியும்''.

● நடராசா லோகதயாளன்




# கனடிய தமிழர் வர்த்தக சம்மேளம் அமைச்சராக நியமனம் செய்யப்பெற்றுள்ள ஹரி ஆனந்தசங்கரி அவர்களை வாழ்த்துகின்றது

Canadian Tamil Chamber of Commerce Congratulates Hon. Gary Anandasangaree

We are thrilled to share some incredible news that fills us with immense pride and joy. Yesterday, our admired past president and Member of Parliament for Scarborough Rough Park, Mr. Gary Anandasangaree, was appointed as the New Minister of Crown-Indigenous Relations by our honourable Prime Minister, Justin Trudeau.

This momentous achievement is not only a matter of great significance for our nation but also holds a special place in the hearts of all Tamil Canadians and our CTCC members. Hon. Gary Anandasangaree's appointment to this critical position is a testament to his dedication, vision, and unwavering commitment to serving our country and the Tamil community. His passion, compassion, and integrity have earned him respect and admiration from all corners of our diverse society.

As Minister of Crown-Indigenous Relations, Hon. Gary Anandasangaree now assumes a crucial role in shaping policies and fostering meaningful dialogue between the Crown and Indigenous peoples. We are confident that his invaluable expertise and dedication will play a pivotal role in advancing reconciliation, promoting understanding, and strengthening the fabric of our great nation.

This achievement is a moment of immense pride for all Tamil Canadians and serves as an inspiration to our community. It is also a testament to the collective efforts of our CTCC members who have supported and worked alongside Mr. Anandasangaree over the years.



Once again, please join us in congratulating Hon. Gary Anandasangaree on his well-deserved appointment. Together, let us continue to work towards building a stronger, and prosperous Canada.

With best regards,
Vina Devadas
President. CTCC

**கனடா செய்திகள்**

கனடிய தமிழர் வர்த்தக சம்மேளம் அமைச்சராக நியமனம் செய்யப்பெற்றுள்ள ஹரி ஆனந்தசங்கரி அவர்களை வாழ்த்துகின்றது.

கனடியப் பிரதமர் கௌரவ ஜஸ்ரின் ட்ரூடோ அவர்களால் கனடிய அரசின் அமைச்சரவையில் இணைக்கப் பெற்றுள்ள எமது பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அவர்களுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்து அறிக்கை யொன்றை வெளியிட்டுள்ளது கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனம்.

சம்மேளனத்தின் தலைவர் கையெழுத்திட்டு வெளியிடப்பெற்றுள்ள இந்த அறிக்கையில் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர்களில் ஒருவரான நீங்கள் கனடாவில் ஒரு உயர்ந்த பதவிக்கு நியமிக்கப்பெற்றுள்ளதை அறிந்து நாம் அனைவரும் பெருமையடைகின்றோம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ONTARIO'S EFFORTS TO REDUCE WAIT TIMES IN SMALL : EMERGENCY DEPARTMENTS

On July 20 th , 2023, an announcement was released by the Government of Ontario stating they are investing $44 million this year to 165 small emergency departments to reduce the wait time in emergency rooms and provide citizens with care faster and closer to home. This funding, which was placed as a solution to reduce wait times in the emergency departments can be utilized to: hire more healthcare staff, add new beds, and access to more transportation for patients in the emergency department.

Hospitals will have the freedom to use the funding for any solutions to help speed up the process of care and reduce the time patients spend. Ontario also plans to further invests $29 million in 75 high volume small emergency departments to enhance their capacity to treat more patients. An additional $15 million will also be used for the expansion of smaller hospitals.

The Ontario Government had previously granted a one-time fund of $93.4 million to reduce patients wait times in hospitals during the 2022-2023 pandemic recovery and to help support struggling hospitals with any funds necessary to deliver faster emergency care to patients.

An approximate of 90 hospitals across Ontario will be able to receive funding to hire more staff necessary in order to make hospital wait times faster and care more accessible. Currently 75 large hospitals receive annual funding for their emergency departments. With increased funding provided to smaller hospitals, citizens may be able to find hospitals closer to home and get the help they need as quick as possible.


**Athisayaa Prabagar, Intern**

# யுத்த காலத்தில் அழிந்த நிலையில் காணப்பட்ட கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தை மீண்டும் கட்டி எழுப்பி மகா கும்பாபிஷேகம் செய்த வெற்றியாளர் மறைந்த நகுலேஸ்வரக் குருக்கள்

"இலங்கையின் வடபகுதியில் நிலவிய யுத்த காலத்தில் முற்றாக அழிந்த நிலையில் காணப்பட்ட கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தை மீண்டும் கட்டி எழுப்பி மகா கும்பாபிஷேகம் செய்த வெற்றியாளர் மறைந்த நகுலேஸ்வரக் குருக்கள் ஆவார். அந்த ஆலயம் சிதைந்து போயிருந்ததை முதன் முதலாகக் கண்டு கண்ணீர் விட்டு அழுத பெருமகன் இன்று எம்மோடு இல்லை. அவரது மறைவு எமது சைவ உலகிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்"

இவ்வாறு கடந்த சனிக்கிழமையன்று கனடாவில் றிச்மண்ட்ஹில் இந்து ஆலய கலா மண்டபத்தில் நடைபெற்ற மறைந்த கீரிமலை நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களின் மறைவு குறித்த அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய சிவஸ்ரீ சோமஸ்க் கந்தக்குருக்கள் அவர்கள் புகழாரம் சூட்டினார்.

மேற்படி அஞ்சலிக் கூட்டம் றிச்மண்ட் இந்து ஆலய நிர்வாக சபை மற்றும் தொண்டர்கள், கனடா வாழ் இந்து குருமார்கள் மற்றும் மறைந்த நகுலேஸ்வரக் குருக்கள் அவர்கள் குடும்பம் சார்ந்த உறவினர் ஆகியோர் இணைந்து ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது.







மிகவும் உருக்கம் நிறைந்ததாகவும் பக்தி சார்ந்ததாகவும் இடம்பெற்ற மேற்படி அஞ்சலிக் கூட்டத்தில் சிவ ஸ்ரீ ஸ்ரீதரக்கு குருக்கள், சிவஸ்ரீ சிவசங்கரக் குருக்கள். சிவஸ்ரீ கேதீஸ்வரக் குருக்கள் ஆகியோர் உட்பட பலர் அஞ்சலி உரையாற்றினார்கள்.

தற்போதைய கனடா அரசின் அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி அவர்களின் அஞ்சலிச் செய்தியை திருமதி ஜனனி சிவலிங்கம் அவர்கள் அஞ்சலிக் கூட்டத்தை ஏற்பாடு செய்த குழுவினரிடம் வழங்கினார்.

தனது 98வது வயதில் அண்மையில் சிவபதம் அடைந்த சிவஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்களின் மறைவு தொடர்பாக உலகெங்கும் பல நாடுகளிலும் மற்றும் இலங்கையின் அனைத்து நகரங்களிலும் தொடர்ச்சியாக அஞ்சலிக் கூட்டங்கள் நடத்தப்பெற்றுவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

**செய்தி; சத்தியன் கனடா**

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம் - ரொறன்ரோ



3025 Kennedy Road, Unit #10, Scarborough, ON. M1V 1S3 (Kennedy & Finch )

## ஸ்ரீ வரசித்தி விநாயகர் பிரம்மோத்ஸவ விஞ்ஞாபனம்
## 16.07.2023 ஞாயிறு முதல் 30.07.2023 ஞாயிறு வரை

### விசேட உற்சவ நேரமாற்ற விபரம்

**நர்த்தன கணபதி உற்சவம் – நாட்டிய அஞ்சலி**
**22.07.2023 சனிக்கிழமை**
மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டபபூஜை சுவாமி வீதிவலம்

**கப்பல் திருவிழா**
**23.07.2023 ஞாயிற்றுக்கிழமை**
மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டபபூஜை சுவாமி வெளிவீதிவலம்

**சங்கீத கணபதி உற்சவம் – சங்கீத ஆராதனை**
**24.07.2023 திங்கட்கிழமை**
மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டபபூஜை சுவாமி வீதிவலம்

**மஞ்சத் திருவிழா**
**25.07.2023 செவ்வாய்க்கிழமை**
மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டபபூஜை சுவாமி வெளிவீதிவலம்

**நம்பியாண்டார் நம்பி உற்சவம் – திருமுறை சமர்ப்பணம்**
**26.07.2023 புதன்கிழமை**
மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டபபூஜை, நாடகம், வீதிவலம்

**மாம்பழத் திருவிழா – நாடகம்**
**27.07.2023 வியாழக்கிழமை**
மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டபபூஜை, நாடகம், வீதிவலம்

**சப்பறத் திருவிழா**
**28.07.2023 வெள்ளிக்கிழமை**
மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டபபூஜை சுவாமி வெளிவீதிவலம்

**தேர்த் திருவிழா**
**29.07.2023 சனிக்கிழமை**
காலை 7:00 மணிக்கு வசந்தமண்டபபூஜை, 9:00 மணிக்கு தேர்

**தீர்த்த உற்சவம்**
**30.07.2023 ஞாயிற்றுக்கிழமை**
காலை 7:00 மணிக்கு வசந்தமண்டபபூஜை, தீர்த்த உற்சவம்

**கொடியிறக்கம் – திருவூஞ்சல்**
**30.07.2023 ஞாயிற்றுக்கிழமை**
மாலை 6:00 மணிக்கு வசந்தமண்டபபூஜை, திருவூஞ்சல்


மஞ்சத் திருவிழா



தேர்த் திருவிழா



சப்பறத் திருவிழா




திருவிழாக் காலங்களில் 15 தினங்களும் அன்னதானம், தண்ணீர்ப் பந்தல் (தாகசாந்தி) வழங்க விரும்பும் அடியார்கள், மற்றும் 29.07.2023 தேர்த்திருவிழாவின்போது காவடி, கற்பூரச்சட்டி எடுக்க விரும்பும் அடியார்கள், வெளிவீதியில் தண்ணீர் பந்தல் அமைக்க விரும்பும் அடியார்கள் ஆலய காரியாலயத்தில் முற்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்.

LIVE ON
www.analaiexpress.ca

**மஹோற்சவப் பெருவிழா நேரடி ஒளிபரப்பு**
தினமும் மாலை 7:00 மணிமுதல் 9:30 மணிவரை
தேர்த்திருவிழா காலை 6:30 மணிமுதல் 2:00 மணிவரை, தீர்த்தத் திருவிழா காலை 6:30 மணிமுதல் 2:00 மணிவரை www.analaiexpress.ca இணையத்தளங்களில் காணலாம்.

சப்பறத் திருவிழா, தேர்த்திருவிழா வாகனத்தரிப்பிடம்




P1: 3200 Kennedy Rd. (School)
P2: 2000 McNicoll Ave. (Community Center)

அனைவரும் வருக! இறையருள் பெறுக!

இங்ஙனம்
சிவப்பணியில் நிற்கும்
"சிவாச்சார்ய குலபூஷணம்", "சிவாச்சார்ய கலாநிதி"
**சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்**
ஆலய பிரதமகுரு. ஆலயஸ்தாபகர், முதல்வர்
அறங்காவலர் சபை.

தீர்த்தத் திருவிழா



Tel: 416-291-8500 www.facebook.com/vinaayagar

இந்திய செய்திகள்

# மாமல்லபுரம் புராதன சின்னங்களை ஜி20 மாநாட்டு பிரதிநிதிகள் கண்டு ரசிப்பு

சென்னையில் நடைபெற்ற ஜி20 மாநாட்டில் பங்கேற்ற வெளிநாட்டு பிரதிநிதிகள் மாமல்லபுரம் கடற்கரை கோயிலை கண்டு ரசித்தனர்.மாமல்லபுரம்: சென்னையில் நடைபெற்ற ஜி20 மாநாட்டில் பங்கேற்ற வெளிநாட்டு பிரதி நிதிகள் அடங்கிய குழுவினர், மாமல்லபுரத்தில் கடற்கரைகோயில் உள்ளிட்ட சிற்பங்களை கண்டு ரசித்தனர்.

ஜி20 நாடுகளின் கூட்டமைப்பின் தலைமை பொறுப்பை இந்தியா ஏற்றதை தொடர்ந்து, பல்வேறு தலைப்புகளில் கருத்தரங்குகள் மற்றும் 200க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் நடத்தப்பட்டு வருகின்றன. இதில், சென்னையில் ஜி20 பேரிடர் அபாயத் தணிப்பு பணிக்குழு மாநாடு கடந்த 24 மற்றும் 25ம் தேதி என இரண்டு நாட்கள் நடைபெற்றது.இந்த மாநாட்டில், அமெரிக்கா, ரஷ்யா, பிரேசில், அர்ஜென்டினா, ஆஸ்திரேலிய உள்ளிட்ட ஜி20 நாடுகளை சேர்ந்த விருந்தினர்கள், பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்நிலையில், மேற்கண்ட மாநாட்டில்




பங்கேற்ற வெளிநாட்டு பிரதிநிதிகள் நேற்று மாலை 5 மணி முதல் 6 மணி வரை மாமல்லபுரத்தில் உள்ள பல்லவ மன்னர்களின் கலைச் சின்னங்களான கடற்கரை கோயில், ஐந்துரதம், அர்ச்சுனன் தபசு உள்ளிட்ட புராதன சின்னங்களை கண்டு ரசிக்க, சுற்றுலாத் துறை ஏற்பாடு செய்திருந்தது. இதன் பேரில், சென்னையில் இருந்து மாமல்லபுரத்துக்கு சொகுசுபேருந்துகளில் வந்த 120 பிரதிநிதிகள் கொண்ட குழுவினர் ஐந்து ரதம், அர்ஜுனன் தபசு பகுதியை சுற்றி பார்த்தனர்.

மேலும், நிறைவாக கடற்கரை கோயிலை நேரில்கண்டு ரசித்தனர். இதில், சுற்றுலாத் துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சுற்றுலா வழிகாட்டிகள் புராதன சின்னங்களின் வரலாற்று சிறப்புகளை வெளிநாட்டினருக்கு விரிவாக எடுத்துக் கூறினர். பின்னர், தனியார் நட்சத்திர விடுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்தில் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில், ஜி20 மாநாட்டு விருந்தினர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கான பாதுகாப்புபணியில் மோப்ப நாய்களும் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. மேலும், ட்ரோன் கேமராக்கள் பறக்கவும் தடை விதிக்கப்பட்டிருந்தன. மாவட்ட எஸ்பி சாய் பிரனீத் தலைமையில், 200க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

# இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு ரஜினிகாந்த் 7 நாட்கள் இமயமலை பயணம்: ஆகஸ்ட் 6ம் தேதி புறப்படுகிறார்



நடிகர் ரஜினிகாந்த் ஒரு வார பயணமாக ஆகஸ்ட் 6ம் தேதி இமயமலைக்கு புறப்பட்டுச் செல்கிறார்.

நெல்சன் இயக்கத்தில் நடிகர் ரஜினிகாந்த் நடித்துள்ள ஜெயிலர் படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்து, வரும் ஆக. 10ம் தேதி திரையரங்குகளில் வெளியாகிறது.இதற்கான இறுதிகட்டப் பணிகளில் படக் குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் படத்தின் 'காவாலா', 'ஹுக்கும்', 'ஜுஜுபி' ஆகிய 3 பாடல்கள் வெளியாகி, ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. படத்தின் ட்ரெய்லரும் ஓரிரு நாட்களில் வெளியாக உள்ளது.நடிகர் ரஜினிகாந்த் 2010ம் ஆண்டு வரை தனது ஒவ்வொரு படத்தின் படப்பிடிப்பு முடிந்ததும், இமயமலைக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

இந்நிலையில், உடல்நலக்குறைவு காரணமாக இடையில் சில ஆண்டுகளாக அவர் இமயமலை செல்வதை தவிர்த்துவந்தார். கடந்த 2018ல் 'காலா', '2.0' ஆகிய படங்களின் படப்பிடிப்பு முடிந்ததும், இமயமலைக்குச் சென்றார். அதன்பிறகு கரோனா தொற்று காரணமாக கடந்த 2 ஆண்டுகளாக இமயமலைக்குச் செல்லவில்லை. தற்போது மீண்டும் அடுத்த மாதம் இமயமலைக்கு செல்ல இருக்கிறார்.

அதன்படி, ஆக. 6ம் தேதி இமயமலை செல்லும் ரஜினிகாந்த், அங்கு ஒரு வாரம் முகாமிடுகிறார். பத்ரிநாத், கேதர்நாத், பாபாஜி குகை உள்ளிட்ட புனித தலங்களுக்கும் அவர் செல்கிறார். சில நேரங்களில் இமயமலை செல்லும்போது, அவரது மகள்களில் ஒருவரை உடன் அழைத்துச் செல்வது வழக்கம். ஆனால், இந்த முறை ரஜினிகாந்த் மட்டும் தனியாக இமயமலை செல்கிறார்.

ஆக. 6ம் தேதி இமயமலை புறப்பட உள்ளதால், அதற்கு முன்பாக படத்தின் முன்னோட்டக் காட்சியைப் பார்த்துவிட்டு, படக்குழுவினரிடம் தனது கருத்துகளைக் கூறிவிட்டு புறப்பட உள்ளதாகவும், ஜெயிலர் படம் திரையரங்குகளில் வெளியாகும் போது அவர் இமயமலையில் இருப்பார் என்றும் ரஜினிகாந்தின் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

# 8வது ஆண்டு நினைவு தினத்தையொட்டி அப்துல் கலாம் நினைவிடத்தில் பிரார்த்தனை



முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் 8வது ஆண்டு நினைவு தினத்தையொட்டி ராமேசுவரத்தில் உள்ள அவரது நினைவிடத்தில் ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினர்.முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் 8வது ஆண்டு நினைவு நாள் நாடு முழுவதும் நேற்று அனுசரிக்கப்பட்டது. ராமேசுவரத்தில் உள்ள பேக்கரும்பு அப்துல் கலாம் நினைவிடத்தில் அவரது அண்ணன் மகன் ஜெயினுலாபுதீன், மகள் நசிமா மரைக்காயர், மருமகன் நிஜாம், பேரன்கள் ஷேக் தாவூத், ஷேக் சலீம், ஆவுல் மீரா மற்றும் குடும்பத்தினர் சிறப்புப் பிரார்த்தனை செய்தனர். இதில் அனைத்து சமூகத்தைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.

அரசு சார்பில் ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் விஷ்ணு சந்திரன், ராமநாதபுரம் சரக டிஐஜி துரை, வட்டாட்சியர் அப்துல் ஜபார், ராமேசுவரம் நகராட்சித் தலைவர் நாசர்கான் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர். கலாமின் முன்னாள் உதவியாளர் பொன்ராஜ், விவேகானந்தா குடில் சுவாமி பிரம்மானந்தா, வேலூர் இப்ராஹிம் உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்கள், மாணவ, மாணவிகள், ராமேசுவரம் தீவு மக்கள், சுற்றுலாப் பயணிகள் ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் கலாமின் அண்ணன் பேரன் ஷேக் தாவூத் செய்தியாளர்களிடம் கூறியதாவது: அப்துல் கலாம் தேசிய நினைவிடத்தில் உள் கட்டமைப்புகளைத் தவிர மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட புதிய திட்டங்கள் எதுவும் செயல்படுத்தப்படவில்லை.

குறிப்பாக அறிவுசார் மையம், டிஜிட்டல் நூலகம், ஆராய்ச்சியாளர்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் அறிவிக்கப்பட்ட தொழில்நுட்ப கண்காட்சியகம், அறிவியல் ஆராய்ச்சி மையம் உள்ளிட்ட திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்.

புதிதாக கட்டப்படும் பாம்பன் ரயில் பாலத்துக்கு அப்துல் கலாம் பெயரைச் சூட்ட வேண்டும். ராமேசுவரத்திலிருந்து இயக்கப்படும் விரைவு ரயில் ஒன்றுக்கு அவரது பெயர் சூட்ட வேண்டும். கலாம் தேசிய நினைவிடம் தற்போது பொதுமக்கள் பார்வைக்கு காலை 9 முதல் மாலை 5 மணி வரை திறக்கப்படுகிறது. இதை காலை 8 முதல் மாலை 6 மணி வரை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# 'நடைபயணத்தால் அண்ணாமலை உடலுக்கு தான் நல்லது' சீமான் கருத்து

இளையான்குடி: ''நடைபயணத்தால் அண்ணாமலை உடலுக்கு தான் நல்லது'' என நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.சிவகங்கை மாவட்டம் இளையான்குடி மேல்நிலைப் பள்ளி பவள ஆண்டு விழா நடைபெற்றது. இதில், இப்பள்ளி முன்னாள் மாணவரான சீமான் பங்கேற்றார்.பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

"பாஜகவிடம் பெரும்பான்மை எம்பிக்கள் இருப்பதால், நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் நம்பிக்கை இல்லா தீர்மானத்தால் எதுவும் நடக்காது. வேடிக்கையாக தான் இருக்கும். அண்ணாமலையின் அரசியல் லாபத்துக்காக தான் ஆளுநரிடம் திமுக



ஊழல் பட்டியலை கொடுத்துள்ளார்.முன்னாள் அதிமுக அமைச்சர்கள் மீதும் ஊழல் புகார் உள்ளது. அதை ஏன் வெளியிடவில்லை. நடைபயணத்தால் அண்ணாமலை உடலுக்கு தான் நல்லது. உடற்பயிற்சி சென்றது போல் இருக்கும். இது மிகவும் பழைய மாடல். இதனால் ஒன்றும் ஆகாது. பாஜக எதிர்க்கட்சிகள் இருக்க கூடாது என நினைக்கிறது. ஒரு கட்சி ஆட்சியை கொண்டு வர முயற்சிக்கின்றனர். அதை தான் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளிப்படுத்தியுள்ளார். தீபாவளிக்கு வடை சுட, வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யும் நாடாக இந்தியா உள்ளது.

விவசாயத்தை விட்டு விவசாயிகள் வெளியேறி கொண்டிருக்கின்றனர். இந்த சூழ்நிலையில் வேளாண்மைக்கு செய்ததாக எதற்கு பிரதமர் பேச வேண்டும். வேளாண்மைக்கு என்ன செய்துள்ளார். திமுக ஆட்சியை பற்றி எதுவும் சொல்வதற்கில்லை. கொடுமையான ஆட்சி நடக்கிறது. அதை பற்றி பேசி பயனில்லை.

# இன்னொரு "83 ஜூலையை" நோக்கி இலங்கை நகர்த்தப்படுகிறதா?

சிறப்பு கட்டுரை

❍ வி.தேவராஜ், மூத்த ஊடகவியலாளர்



❖ தமிழ் மக்களுக்கு ஒரு திறந்த வெளி கொலைக் களமாகவே இலங்கை உள்ளது.

❖ சிங்கள ஆளும் வர்க்கத்தின் சூழ்ச்சிக்கு அப்பாவித் தமிழர் பலி.

சுதந்திர இலங்கையில் 1956, 1958, 1961, 1964, 1974, 1977 மற்றும் 1981, 1983 என தொடர்ச்சியாக அரங்கேற்றப்பட்ட கொலைக் களங்களை தமிழ் மக்கள் கண்டவர்கள். அந்த வகையில் தமிழ் மக்களுக்கு ஒரு திறந்தவெளி கொலைக்களமாகவே இலங்கை காட்சியளிக்கின்றது.

தமிழ் மக்களில்; ஒரு சாராருக்கு மாத்திரமன்றி சுதந்திர இலங்கையில் பிறந்த அடுத்தடுத்த ஒவ்வொரு சந்ததியும் கொலைக்கள அனுபவத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர்.

மொத்தத்தில் சுதந்திர இலங்கையின் 75 வருட கால வரலாறு என்பது தமிழ் சமூகம் கரடுமுரடான, இலகுவில் மறந்து விட முடியாத ,மிகவும் கசப்பான அனுபவப் பகிர்வுடனேயே பயணித்துக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறு கொலைக்கள அனுபவத்துடன் நடமாடி வரும் தமிழ் மக்கள் மாத்திரமல்ல பிற இனத்தவர்களும் கறுப்பு ஜூலை குறித்த நினைவுகளை தற்போது மீட்டிப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

❖ இடதுசாரிகளை ஆதரித்ததால் பிரஜா உரிமையை இழந்த மலையக மக்கள்.

சுதந்திர இலங்கையில் 1948 ஆம் ஆண்டு பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட இந்திய வம்சாவளி மக்களின் பிரஜா உரிமை பறிக்கப்பட்டது. இதன் தாக்கம் அந்தச் சமூகத்தில் பிறப்பெடுக்கும் இன்றைய பிள்ளைகளைக் கூட பாதித்து நிற்கின்றது. அந்தளவுக்கு பிரஜா உரிமைச் சட்டம் இந்திய வம்சாவளி மக்களை 'தேசிய நீரோட்டத்தில்' இருந்து தூக்கி வீசிவிட்டது. இந்திய வம்சாவளி மக்கள் தேர்தல்களில் இடதுசாரிகளை அதரித்தனர் என்பதற்காக அந்த மக்கள் கொடுத்த பெரும் விலை இதுவாகும்.

❖ சிங்கள ஆளும்வர்க்கத்தின் சூழ்ச்சி

இதேபோன்றே தொடர்ந்த கலவரங்களின் பின்னணியில் சிங்கள ஆளும் வர்க்கம் தமது இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காக மேற்கொண்ட சூழ்ச்சிகளே காரணமாக அமைந்தன.

ஜே.ஆர்.ஜெயவர்தன தலைமையிலான யூ.என்.பி. ஆட்சியானது வடக்கு மற்றும் கிழக்கில் புலிகளாலும் தெற்கில் ஜே.வி.பியாலும் அவரது எதேச்சதிகாரத்திற்கு முன்வைக்கப்பட்ட அரசியல் அச்சுறுத்தல்களை ஒரேநேரத்தில் அகற்றுவதற்கான மூலோபாய கட்டமைப்பை அமைத்தது.

இந்த மூலோபாயம் இறுதியில் பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிர்களைக் காவு கொண்டது.

பல்லாயிரக்கணக்கான மக்களை சொந்த நாட்டில் அகதி முகாம்களுக்குள் அடைத்தது. ஆயிரக்கணக்கானோர் வெளிநாடுகளில் அகதிகளாகத் தஞ்சமடைந்தனர்.

இந்த படுகொலையானது சிங்கள ஆளும் உயரடுக்கின் மேலாதிக்கத்தை வலுக்கட்டாயமாக நிலை நிறுத்த கட்டவிழ்த்துவிடப்பட்டது என சிங்கள புத்திஜீவிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதே பாணியிலான அரசியல் சூழ்ச்சியே நாடு மீளமுடியாத பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள இன்றைய நிலையிலும் சிங்கள ஆளும்வர்க்கம் தமது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காக காய்களை நகர்த்தி சூழ்ச்சி செய்து கொண்டிருக்கின்றது.

❖ தென்னிலங்கை மக்களை திசை திருப்ப இன முரண்பாடுகள்.

நாட்டில் புரையோடிப் போயுள்ள மீளமுடியாத நெருக்கடிகளில் இருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்ப வேண்டிய தேவை இன்றைய சிங்கள ஆளும்வர்க்கத்தின் முன்பெரும் சவாலாக உள்ளது. எனவே மக்களின் கவனத்தை திசை திருப்பும் நோக்கில் இன மற்றும் மத ரீதியிலான முரண்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

எனவே தான் 1983 கறுப்பு ஜூலை பாணியில் இன்னொரு படுகொலைக்கான களத்தை திறந்து விடுவதற்கான ஒரு உள்ளார்ந்த ஆபத்து இருப்பது குறித்த எச்சரிக்கையை சிங்கள புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர்.

1983 ஜூலைப் படுகொலையைத் தோற்றுவித்த தேசியப் பிரச்சினைக்கான அடிப்படைக் காரணங்களை, கடந்த நாற்பது வருடங்களாக ஆட்சிக்கு வந்த எந்த ஒரு அரசாங்கத்தினாலும் இன்னும் கவனிக்கப்படவில்லை.

அதேவேளையில் இனப்படுகொலை சிறுபான்மை இனங்களின் பொருளாதார தளங்களை அழித்தல் போன்றன சிங்கள ஆளும் உயரடுக்கின் இனவழிப்பு மற்றும் பொருளாதாரப் போரின் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி நிரலாகும்.

❖ சிங்கள பௌத்த மக்களுக்கானதே 'தேசிய நீரோட்டம்!';

'இலங்கையின் தேசிய நீரோட்டம்' என்பது சிங்கள பௌத்த மக்களுக்கானது என காலத்துக்குக் காலம் பிரகடனப்படுத்திய பேரினவாதச் சக்திகள் ஒட்டுமொத்த தமிழ்பேசும் மக்களையும் சிற்சில வேறுபாடுகளுடன் ஆனால் ஒரே தராசில் வைத்து நடத்தத் தொடங்கியது.

> **'ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 13 வது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவது குறித்து 'தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளி விடும் வேலையை' ஏற்கனவே தொடங்கிவிட்டார். இந்த ஆட்டத்தில் எது நடந்தாலும் அது ரணில் விக்ரமசிங்கவிற்கே இலாபமாக அமையும்'**

சிறுபான்மை இனமக்கள் தமக்குள் தமிழர்கள் என்றும் முஸ்லிம்கள் என்றும் பிரிந்து நிற்கின்றனர். தமிழர்கள் வடக்குக் கிழக்கென்றும் மலையகம் என்றும் பிரிந்து உள்ளனர். வடக்குக் கிழக்கிற்குள்ளும் பல்வேறு பிரிவுகள் உள்ளன. மொத்தத்தில் தமிழ் பேசும் மக்கள் பல்வேறு கூறுகளாகச் சிதறிக்கிடக்கின்றனர்.

❖ ஒப்பந்தங்கள் செல்லாக் காசாகின.

இதன் விளைவு சிறிலங்கா அரசாங்கத்திற்கும் தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் இடையில்கைச் சாத்திடப்பட்ட பண்டார நாயக்காசெல்வ நாயகம் மற்றும் டட்லி செல்வ நாயகம் உடன்படிக்கைகள் போன்ற பல உடன்படிக்கைகள் சிங்கள பௌத்த தேசியவாதிகளின் அழுத்தத்தின் காரணமாக அரசாங்கத்தால் ஒருதலைப்பட்சமாக இரத்துச் செய்யப்பட்டன.

❖ ஜனாதிபதியும் 13 வதுதிருத்தச்சட்டமும்.

இதுபோன்றதொரு நாடகம் தற்போது இலங்கை அரசியலில் அரங்கேற்றுவதற்கான முனைப்புகள் மேலெழுந்து வருகின்றன.

இலங்கையின் அரசியலமைப்பில் இடம்பெற்றுள்ள நிலையிலும் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக கிடப்பில் போடப்பட்டுக் கிடக்கின்ற 13 வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமல்படுத்துவது குறித்து பெரும்பாலான தமிழ்க்கட்சிகள் இந்தியப்பிரதமர் மோடி அவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ள நிலையில் இலங்கை அரசியலில் 13வது திருத்தச்சட்டம்; மீண்டும் பேசு பொருளாக உருவெடுத்துள்ளது.

❖ இந்தியப் பிரதமரின் நம்பிக்கை!

அதேவேளையில் இந்தியப் பிரதமர் மோடி அவர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்த போது இலங்கை ஜனாதிபதி 13ஐ இலங்கை முழுமையாக அமல்படுத்துவார் என நம்புவதாக நம்பிக்கையும் வெளியிட்டிருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 13 வது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவது குறித்து 'தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளி விடும் வேலையை' ஏற்கனவே தொடங்கிவிட்டார். இந்த ஆட்டத்தில் எது நடந்தாலும் அது ரணில் விக்ரமசிங்கவிற்கே இலாபமாக அமையும். அதற்கேற்ப வே ரணில் விக்ரமசிங்க காய்களை நகர்த்துகின்றார்.

அரசியலமைப்பில் இருப்பதை நடைமுறைப்படுத்த மீண்டும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் இணக்கம் அவசியம் எனக் கூறும் ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்ற கட்சிகளின் இணக்கப்பாடு கிட்டாது என்பதை தெரிந்து கொண்டே இந்த நகர்வுகளை மேற்கொள்கின்றார்.

❖ நெருக்கடிகளைத் தீர்க்கும் எண்ணமில்லை.

மொத்தத்தில் தேசியப் பிரச்சினை மற்றும் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கும் உண்மையான எண்ணம் அரசுக்கு இல்லை என்பதையே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் செயற்பாடுகள் நிரூபிக்கின்றன.

சிங்கள அளும் வர்க்கம் தமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காக தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியாகக் கட்டவிழ்த்துவிட்ட இனக் கலவரங்கள் கொலைகள் கொள்ளைகள் அனைத்துக்குமான மறைந்த கரம் குறித்து அனைவரும் அறிந்ததே. ஆனால் அவர்கள் அரசியல்வாதிகளின் செல்லப்பிள்ளைகள். சுதந்திரக் காற்றை அனுபவிக்கின்றனர்.

1. கடந்த 75 வருடங்களாக தொடரும் இன சங்காரத்துக்குப் பிறகும் தமிழினத்தின் விடுதலை வேட்கை மறைந்துவிட்டதா?

முள்ளிவாய்க்கால் படுகொலைக்குப் பிறகு அதாவது போர் மௌனிக்கப்பட்டதன் பின் நந்திக்கடல் பகுதிக்குச் சென்ற போது ஊனமான காலகளுடன்; ஸீஷல் துகள்கள் கிழித்துச் சென்ற ஆறாத காயங்களுடன் இழப்பின் வெறுமைக்குள் வீழ்ந்து எதிர்காலத்தையே தொலைத்து விட்ட தான பார்வையுடன் தகிக்கும் மணல் சூட்டையும் உணராது நந்திக்கடலை வெறித்துப் பார்த்திருந்த முதியவரைச் சந்தித்தேன்.

அவர் பேசியது ஒரு வசனம் தான். 'தலைவர் எனக் கூறி; எம் முன் ஒருவர் வந்தால் நாம் அனைவரும் அவர் பின்னால் அணிதிரண்டு போய்விடுவோம்'.

2. இதனைக் கூறியவர் புலி அல்ல இளைஞனும் அல்ல. ஒரு சாதாரண முதியவர். அப்பொழுது என்னுள் ஓடியது போரின் போது அரச தரப்பில் கூறப்பட்ட 'மனிதாபிமானத்துக்கான போர்'; என்ற வாசகம் தான்.

3. ஒட்டு மொத்த தமிழ்மக்களும் 2009 இல் போர் முற்றுப் பெற்று 14 வருடங்களுக்குப் பின்னரும் 'மனிதாபிமானத்துக்கான போர்'; விடுவித்ததற்கான உணர்வே இன்றி நடமாடுவதைக் காணலாம். இது தான்யதார்த்தம்.

4. ஏனெனில் 'மனிதாபிமானத்துக்கான போருக்குப் பின்'; கடந்த 14 வருடங்களாக 'தமிழினத்தை துடைத்தெறியும் போர்' தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது தான் காரணம்.

5. சிங்கள மக்கள் அல்ல சிங்கள ஆளும் வர்க்கம் தமது அரசியலுக்காக தமது அரசியல் இருப்புக்காக தமிழர்களை எவ்வாறு அழிப்பது என்று சதாகாலமும் சிந்தித்துச் செயலாற்றியதன் விளைவு இன்று நாடு நாசமாய்ப் போய்க் கிடக்கின்றது.

6. தமிழ்மக்களுடன் சமரசத்துடன் அதிகாரப் பரவலாக்களுக்கு இசைந்து போனால் நாடு முன்னேறும்.

7. 75 வருட கால வரலாற்றில் சிங்கள இளைஞர்களும் தமிழ் இளைஞர்களும் 'புதிய அரசியல் பயணத்தை' நோக்கிய இலக்கு குறித்து முயற்சித்த போதும் சிங்கள ஆளும்வர்க்கம் அதனை அடக்குவதில் காட்டிய அக்கறையை இளைஞர்களின் சிந்தனையை உணர்வை கணக்கில் எடுக்கத் தவறிவிட்டது.

8. இதன் விளைவு 'அரகலய' எழுச்சி ஏற்பட்டது. அரகலய எழுச்சியை ஜனநாயகத்தின் விரோத எழுச்சியாகவே பார்க்கின்றனர்.

சிங்கள ஆளும் வர்க்கத்தின் 75 வருட கால கொள்கை கோட்பாடுகளினால் இறுதியில் மிஞ்சியது தோற்றுப்போன அரசும் சீரழிந்து போன நாடும் தான். தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பு தமிழ்மக்களில் பெரும்பாலானவர்களை நாட்டை விட்டு வெளியேற்றியது. தோற்றுப் போன அரசும் சீரழிக்கப்பட்ட நாடும் சிங்கள இளைஞர்களையும் நாட்டை விட்டு வெளியேற்றிக் கொண்டிருக்கின்றது.

மக்கள் இல்லாத மண்ணையும் நாட்டையும் வைத்துக் கொண்டு சிங்கள ஆளும் வர்க்கம் செய்யப் போவது என்ன?.

சிங்கள ஆளும் வர்க்கம் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லையேல் புதிய தலைமுறைக்கு வழிவிட்டு ஒதுங்கிக் கொள்ள வேண்டும். இல்லையேல் ஒதுக்கப்பட்டு ஓரம் கட்டப்படுவீர்கள்.

# SJV Father of Tamil Nationalism

## Expansion of the speech by V. Thangavelu, President Canada TNA at the 125th birth anniversary of SJV held in Toronto

*Continued from last week…*

These submissions regarding the Treasury Circular depend on Counsel's other submission that the Official Language Act of 1956 was ultra vires on the ground that in enacting it Parliament transgressed the prohibitions against discrimination contained in Section 29 of the Constitution.

Indeed, the learned District Judge who heard the instant case has held the Act to be void on that ground. In considering whether this Court should now make any pronouncement as to the validity of the Act of 1956, I take note of the reluctance of the American and Indian Supreme Courts to make such pronouncements. The principle is thus expressed in Cooley, Constitutional Limitations (8th Ed. p. 332): — "It must be evident to anyone that the power to declare a Legislative Enactment void is one which the Judge, conscious of the fallibility of the human judgment, will shrink from exercising in any case where he can conscientiously and with due regard to duty and official oath decline the responsibility."

In Burton v. United States 2 it was observed that "It is not the habit of the Court to decide questions of a constitutional nature unless absolutely necessary to a decision of a case". Again, in silver v. Louis Ville N. R. Co .3 the Court stated that if a case could be decided on one of two grounds, one involving a constitutional question, and the other a question of statutory construction or general law, the Court will decide only the latter. (1 (1958) 60 N. L. R. 115. 3 196 V. S. Reports at p. 295. 3 213 U. S. Reports at p. 191).

In the instant case, it is not even clear whether the question of the compulsion of a statute does arise. I have already reached the conclusion that under our Law a public servant has no right to sue for his wages. Accordingly, the plaintiff is not entitled to a remedy in the Courts for any alleged default in the payment to him of the increment, even if the relevant minutes and regulations had not been altered or modified by the Treasury Circular No. 560.

The position of the Crown here is not that there was an alteration in the terms and conditions of service in consequence of which the plaintiff has become disentitled to the increment. The Crown's position is that the plaintiff cannot sue for the payment of the increment, even if the minutes and regulations provide for such a payment. Since such in my opinion is the correct position in law, this Court should not now venture to rule upon the submissions as to the invalidity of the Language Act. As a note of caution, I must say also that the ruling on that submission made by the learned District Judge in this case must not be regarded in any way as a binding decision.

We did not call upon the learned Acting Attorney-General to submit his arguments on the question of the validity of the Language Act. Instead, at the close of the hearing of this appeal, I indicated my intention that if our findings on the other issues arising in this case necessitate consideration of that question, I would in exercise of my powers under Section 51 of the Courts Ordinance refer the question for the decision of a Bench of five or more Judges. That course is not now necessary; but I should here express the firm opinion that a question of such extraordinary importance and great difficulty, if and when it properly arises for decision, must receive consideration by a Bench constituted under Section 51.

The judgment and decree of the District Court are set aside. I do not in the circumstances make any order as to the costs in the District Court, but the plaintiff must pay the costs of this appeal.
G. P. A. Silva, J.—I agree. Judgment and decree set aside.

The judgement of the Supreme Court came as no surprise. It was expected as told earlier; we filed the case to register our opposition to the Official Language Act (No.33 1956) popularly styled Sinhala Only Act) which turned Tamil public servants' illiterates overnight. Additionally, it made Ceylon Tamils second class citizens not equal before the law at least as far as Tamil language was concerned.

On the 10th of December 1947 the Ceylon Independence Bill was passed in the UK, marking the beginning of the 1947 Constitution. Ceylon officially became an independent country within the British Commonwealth of Nations on the 4th of February 1948. Simultaneously an Independence Bill was enacted in May 1946 by the State Council. Although it was one of several constitutional documents that governed Ceylon during its Dominion period, the 1946 Order in Council is widely referred to as the "Soulbury Constitution." The voting in the third reading (in March) of the "Free Lanka" bill of January 1945, was supported by all the Muslim members, and by T. G. Rajakulendran, S. P. Vytilingam, and V. Nalliah.

The voting far exceeded the 3/4 majority required by the Soulbury Commission, Senanayake had 51 votes in favour and only three votes against the adoption of the constitution. The vote was "in many ways a vote of confidence by all communities in ..." D.S. Senanayake claimed.

D.S. Senanayake went further to make a tongue in cheek pronouncement that " "no harm needs you [non-Sinhalese] from our hands [Sinhalese] in a free Lanka". He was speaking in the State Council in October 1945 when all the Tamil members had unanimously voted for the acceptance of the constitution in a White Paper. He went further and asked rhetorically "Do you want to be governed from London or do you want, as Ceylon, to help Ceylon? On behalf of the [Ceylon National} Congress [founded by Sir Ponnambalam Arunachalam in 1919] and on my behalf, I give the minority communities the sincere assurance that no harm needs you fear at our hands in a free Lanka".

This turned-out to be an empty rhetoric and a sugar-coated pill to entice the Tamil legislators to vote for the Soulbury constitution. Gullible Tamil legislators reposed trust in DS Senanayake not knowing his ulterior motive and subterfuges. Before the ink on the Independence Act could dry, D.S. Senanayake went for the kill. He brought in the Ceylon Citizenship Act 1948 which disfranchised more than 800,000 Tamils in 1948, the very year of Independence. D.S. Senanayake blatantly went back on his promise and bared his true colours as an unrepentant champion of Sinhala chauvinism. (To be continued)






**Are you or a loved one struggling with ADDICTIONS?**

Recovery is Possible

Vasantham Presents:

## Tamil Addiction Recovery Program

### போதையில் இருந்து விடுபட இலவச வகுப்புகள் தமிழில்

- **Cost:** Free!
- **When:** Every Saturday 10:00 AM to 12:00 PM
- **Where:** The Hub Mid-Scarborough 2660 Eglinton Ave East
- **How to register:** Call Vasantham Wellness Centre at தொடர்புகளுக்கு அழைக்கவும் - வசந்தம் 416-847-4172
- **Who can participate:** People 18+ who are facing addiction challenges

Funded by the SUAP/ HEALTH CANADA

மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

# கோடை கால ஒன்றுகூடல் ஒன்றுகூடல்

மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா நடாத்தும் கோடை கால ஒன்றுகூடல் **Aug** 12ம் திகதி சனிக்கிழமை காலை 10:00 மணி தொடக்கம் இரவு 08:00 மணி வரை **L'Amoreaux Kidstown Park** ல் **(3159 Birchmount Rd)** நடைபெறும்.

இவ்விழாவிற்கு பழைய மாணவர்கள் மாணவிகள் அவர்தம் வாழ்க்கை துணைவர்கள், பிள்ளைகள், நண்பர்கள், நலன்விரும்பிகள் யாவரும் சமூகமளித்து சிறப்பிக்குமாறு பழைய மாணவர் சங்க செயற்குழு அங்கத்தினர் அன்புடன் அழைக்கின்றனர்.

தொடர்புகளுக்கு

| | | |
|---|---|---|
| சிசி.கணேசலிங்கம் | ராஜு கனகறாஜ் | க.கமல்ராஜ் |
| (416-499-6248) | (416-858-6316) | (416 -8217870) |

# இணுவில் திருவூர் ஒன்றியம் - கனடா

**கடந்த 20 ஆண்டுகளாக எமது ஒன்றியத்தினால் தொடர்ந்து நடாத்தப்படும் தமிழ்மொழித் திறமைகாண் மற்றும் பண்ணிசைப்போட்டிகள் - 2023**

**காலம்:** 30-07-2023 (ஞாயிற்றுக்கிழமை)
**நேரம்:** காலை 9.00 மணி முதல்
**இடம்:** Delta Academy Inc.
1160 Tapscott Road, Unit-1 (At McNicoll Ave)
Scarborough, ON M1X-1E9

கனடா வாழ் இணுவில் பிள்ளைகள் மத்தியிலே தமிழ்மொழி அறிவையும் சைவசமயப் பற்றையும் வளர்க்குமுகமாகத் தமிழில் எழுத்துப்போட்டி, வாசிப்புப்போட்டி, பேச்சுப்போட்டி மற்றும் பண்ணிசைப்போட்டி என 17 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு வழமைபோல வயது அடிப்படையில் நடாத்தப்படவிருக்கிறது. மேற்படி போட்டிகளிலே பங்கு பற்றிச் சிறப்பிக்க விரும்பும் இணுவில் பிள்ளைகள் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு பணிவன்போடு அழைக்கிறோம்.

தொடர்புகளுக்கு: சாந்தி சர்வானந்தா: (647) 200-2177
மு. கிருபாகரன்: (416) 430-042,
ப. கஜஜெயன்: (416) 732-5898
ஜயசாஜினி சந்திரகுமார்: (647) 522-8821



# இவ்வார ராசிபலன்

**28-07-2023 வெள்ளி தொடக்கம் 03-08-2023 வியாழன் வரையும்**




**மேஷம்:** சாதனைகள் நிகழ்த்தும் வாரம். புண்ணியம் சேரும். பொருளாதாரம் உயரும். உதவிகள் கிடைக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உடல்நலம் திருப்தி தரும். மனஅமைதி குறையும். திருமண வாய்ப்புக் கூடும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். பொறியியல் துறை லாபம் தரும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. இடமாற்றம் நன்மை தரும். உத்தியோக வாய்ப்பு கிட்டும். விவாதம் தவிர்ப்பது நல்லது. பெற்றோர் நலம் கவனம் தேவை. சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. பயணம் லாபம் தரும். திறமைகள் அதிகமாகும். அரசியலில் பொறுமை கூடும். புதிய பொறுப்பு வரும். வீண் செலவுகள் அதிகரிக்கும். விருப்பங்கள் நிறைவேறும். தேவைகள் பூர்த்தியாகும். தடைகள் விலகும். தொழில் வாய்ப்பு கூடி வரும். நற்செய்தி நாடி வரும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். செல்வாக்கு அதிகமாகும். புதிய பொருள் சேரும். பொறாமைகள் விலகும். வருமானம் திருப்தி தரும். நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். வாகன யோகம் உண்டு. மாணவர் மதிப்பு உயரும். இனிய சம்பவம் அமையும். குதூகலம் அதிகரிக்கும். நிம்மதியான குடும்ப வாழ்க்கை அமையும். கமி'ன் தொழில் லாபம் தரும். தோல்வி நிலை மாறும். தொழில் வர்தகம் நடைபெறும். வெற்றிக்கான வழி பிறக்கும். விவசாய நிலம் சேரும். வேண்டிய உதவி கிட்டும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் நிறைவேறும். குதூகலப் பயணம் உண்டு. அலட்சியப் போக்கு தவிர்க்கவும். தொழில் திறமை பளிச்சிடும். ஒப்பற்ற பலன் சேர்க்கும். வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார். அதிஷ்ட எண்: 6, 4, 9, 3 அதிர்ஷ்ட நிறம்: ஊதா அதிர்ஷ்ட எழுத்துக்கள்: **B, Z**




**ரிஷபம்:** விரும்பிய பொருள் சேரும் வாரம். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. மருத்துவச் செலவு உண்டு. கால்நடையால் லாபம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. பயணத்தில் எச்சரிக்கை தேவை. ஆடம்பர சுகங்கள் கூடும். உத்தியோக மாற்றமுண்டு. புதிய தொழில் அமையும். அரசாங்க அனுகூலம் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும்.போதிய வரவு பெருகும். காரிய வெற்றி கிட்டும். வாழ்க்கை வசதி பெருகும். வீண் வம்பு ஓடி மறையும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். தேக ஆரோக்யம் திருப்தி தரும். மறைமுக தொல்லை நீங்கும். வழக்கு வெற்றி தரும். புதிய பொருள் சேர்க்கை உண்டு. வியாபார வாய்ப்பு உண்டு. மேலதிகாரியின் ஆதரவு உண்டு. குடும்பத்தில் சஞ்சலம் உண்டு. தனவரவில் தாமதம் உண்டு. தகுதியில் மேன்மை உண்டு. தொட்டது துலங்கும். காலணிகள் காணாமல் போகும். காதல் எண்ணம் உருவாகும். உடல் சோர்வு ஏற்படும். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். மனஅமைதி கூடும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். ஏற்றமான தருணம் அமையும். இனிப்பானச் செய்திகள் வரும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். அமைதியாக இருப்பது நல்லது. அதிருப்தி அதிகரிக்கும். உடல் உபாதைகள் ஏற்பட்டு விலகும். மனதெளிவு கிட்டும். மனைவியின் அன்பு கிட்டும். கலைத்தொழில் உயர்வு கிட்டும். காரிய அனுகூலம் கிட்டும். தீய எண்ணங்கள் விலகும். புதிய தொழில் வாய்ப்பு கூடும். பூர்வீகச் சொத்து வரும். தொல்லைகள் விலகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும். அரசு பணியில் மாற்றம் வரும். நிலையான வாய்ப்பு அதிகமாகும். உறவினரால் நன்மை உண்டு. வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்வர்ண தேவதை. அதிர்ஷ்ட எண்: 2, 4, 9, 1 அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: **K, F**




**மிதுனம்:** மகிழ்ச்சியான செய்தி வரும். நிர்வாக பொறுப்பு கூடும். வருமானம் சேரும். உடல் உபாதை தீரும். கொள்கையில் பிடிப்பு சேரும். கொடுக்கல், வாங்கலால் நன்மை சேரும். பிள்ளைகளால் பெருமை சேரும். வியாபார வளர்ச்சி உண்டு. ஆன்றோர்கள் வாழ்த்துக் கிட்டும். அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும். அதிகாரியின் ஆதரவு பெருகும். ஆரோக்கியம் அபிவிருத்தி அடையும். வெற்றி கிட்டும். விவசாயம் கை கொடுக்கும். கவலைகள் அடியோடு
விலகும். பணியில் உயர்வு கிட்டும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. குடும்ப அமைதி கூடும். சொந்த தொழில் அமையும். தொழிலில் மாற்றம் ஏற்படும். கடன் உதவி கிட்டும். வியாபார மந்த நிலை அகலும். பணிச்சுமைகள் குறையும். தொலைதூரப் பயணம் உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்பு கூடி வரும். பேச்சில் துணிவு தேவை. சொத்துக்கள் சேர்க்கையுண்டு. வியாபாரம் லாபம் உண்டு. விசே' பலன்கள் உண்டு. நிர்வாகச் செலவு கூடும். உடல்நலத்தில் அக்கறை வேண்டும். வாய் பேச்சில் கவனம் வேண்டும். வாழ்த்துக்கள் வந்து சேரும். வறுமை நிலை மாறும். பெருமைகள் கூடி வரும். திறமைகள் அதிகமாகும். திண்டாட்டங்கள் குறையும். மாற்று எண்ணம் உதயமாகும். வேற்று மதத்தினரால் உதவி சேரும். பொது பணிகளில் ஆர்வம் கூடும். சுபகாரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்பு தொல்லைத் தரும். பெண்களின் திறமை பளிச்சிடும். கற்பனை ஆற்றல் பெருகும். சகோதர உறவு பலப்படும். சந்தோ'ம் அதிகரிக்கும். பணியார்வம் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஈசப்பெருமாள். அதிர்ஷ்ட எண்: 8, 5, 7, 1 அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு அதிர்ஷ்ட எழுத்துக்கள்: **T, F**




**கடகம்:** கர்ம வினைகள் அகலும். பழையக் கடன் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பங்குச்சந்தை மாற்றம் தரும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். உடல் ஆரோக்கியம் குறையும். உறவால் பண விரயம் ஏற்படும். கணவன், மனைவி சலசலப்பு ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். மனவேதனை குறையும். வாழ்வு நிலை உயரும். கல்வியில் கவனம் குறையும். லாபம் திருப்தி தரும். போட்டிகள் மறையும். பொருளாதாரம் உயரும். முயற்சி பலன் தரும். பாராட்டுக்கள் தேடி வரும். பயணம் அனுகூலம் தரும். புதிய வாகனம் வாங்குவீர்கள். கடமையில் தடங்கல் ஏற்படும். காதலில் பிரிவு ஏற்படும். கல்வி கடன் ஏற்படும். குடும்ப மனநிறைவு தரும். புதிய முதல்களை தவிர்க்கவும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். சொத்துக்கள் சேரும். நல்லோர்கள் நட்பு கிட்டும். பிள்ளைகளால் தொல்லை உண்டு. திறமைகள் வெளிப்படும். பருப்பு தானம் பாவம் போக்கும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். வரவேற்பு கூடும். வரவுகள்
பெருகும். அலைச்சலால் அசதி ஏற்படும். தொழில் மாற்றம் ஏற்படும். வேலை பளு அதிகரிக்கும். தாய்நலனில் அக்கறை தேவை. சுபக்காரிய செய்தி உண்டு. ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. பொருளாதார வளர்ச்சி உண்டு. உடன் பிறந்தோரால் உதவி உண்டு. முக்கிய எண்ணம் நிறைவேறும். மனைவியால் அமைதி கெடும். ஏற்றமான தருணம் அமையும். உத்தியோக முன்னேற்றம் தடைப்படும். ஸ்திர சொத்துக்கள் சேரும். வருமானம் உயரும். குடும்ப நலம் மகிழ்ச்சி தரம். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். நட்புகள் பெருகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பகவதி அம்மன். அதிர்ஷ்ட எண்: 1, 7, 9, 8 அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: **O, G**


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 9940431377




**சிம்மம்:** புதுமைகள் நிறைந்த வாரம். இல்லம் தேடி வாய்ப்பு வரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பணி மாற்றம் ஏற்படும். உத்தியோகம் திருப்தி தரும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். சோதனைகள் குறையும். தொழில்போட்டி மறையும். எதிர்பாராத நன்மை கிட்டும். தொழில் வளர்ச்சி உண்டு. கல்விச்சலுகைகள் கிட்டும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். குடும்ப நிர்வாகம் சீராகும். சங்கடங்கள் நிவர்த்தியாகும். முன்கோபத்தை குறைக்க வேண்டும். சுபகாரியம் தடைப்படும். பழிச்சொல் தேடி வரும். மனவேதனை குறையும். இழுபறி நிலை நீங்கும். உறவினர்களால் பாதகம் உண்டு. உஷ்ண நோய் ஏற்படும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். கடன் வாங்க நேரிடும். அரசு வகை ஆதாயம் கிட்டும். வெற்றிகள் குவியும். பெருமைகள் தேடி வரும். புகழ் கூடும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். காதலில் கண்ணியம் கூடும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். நெருக்கடிகள் நீங்கும். பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். விளையாட்டுத் துறையில் வெற்றி கிட்டும். வியாபாரம் உயரும். வில்லங்கம் விலகும். பொன், பொருள் சேர்க்கை உண்டு. கமி'ன் தொழில் திருப்தி தரும். வம்பு தும்புக்கள் ஒழியும். புதிய சொத்து சேரும். மதி நுட்பத்தோடு செயல்பட வேண்டும். திடீர் பயணம் ஏற்படும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். உறவினர் வருகை தொல்லை தரும். நோய் நொடிகள் அகலும். விபரித எண்ணம் விலகும். தொழில்போட்டி மறையும். கனவுத்தொல்லை உண்டு. குளிர்பானத் தொழில் கவனம் தேவை. குதூகலம் அதிகமாகும். வாழ்வில் வசந்தம் உண்டு. விவாத முயற்சி வெற்றித் தரும். வழிபட வேண்டிய தெய்வம்: மஹாகணபதி. அதிர்ஷ்ட எண்: 4, 6, 9, 2 அதஷ்ட நிறம்: இந்திர நீலம் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: **V, R**




**கன்னி:** தடங்கல் இல்லாத தனவரவு சேரும் வாரம். குழப்பங்கள் நீங்கும். மாமூலான வளர்ச்சி பாதிக்கும். விரக்திகள் மறையும். வீடு, மனை வில்லங்கம் ஏற்படும். வேலை பளு அதிகரிக்கும். அரசியல் லாபம் தரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. பெண்களின் கௌரவம் உயரும். கூட்டுத்தொழில் ஏற்றம் தரும். பணவரவு திருப்தி தரும். பல்வலி வந்து போகும். எதிர்பார்ப்புக்கள் உருவாகும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். புதிய நட்பு உருவாகும். பழையக் கடன் வசூலாகும். பொருளாதார வளர்ச்சி ஏற்படும். பூமியால் லாபம் அடைவீர்கள். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். சந்தோஷமான சூழ்நிலை உருவாகும். சட்டம் சாதகமாகும். திட்டங்கள் நிறைவேறும். வீடு வாங்கும் யோகம் உண்டு. மின்சாரத்தில் கவனம் தேவை. ஆதாயம் பெருகும். காரியத்தடை அகலும். அலுவலக பணி அனுகூலம் தரும். எண்ணெய் நிறுவனம் ஏற்றம் தரும். தாய்வழி உறவு லாபம் தரும். குடும்ப அன்யோன்யம் பெருகும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிலும் எச்சரிக்கை தேவை. அரசாங்க அனுகூலம் கூடும். மனஅமைதி குறையும். பொருள் சேர்க்கையுண்டு. பொறாமைகள் விலகும். பொறுப்புக்கள் கூடும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வணிகத்தொழில் விரிவடையும். விவேகம் அதிகரிக்கும். நூதன முயற்சி தடைப்படும். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. பிரபல்ய ஆசை ஏற்படும். கலை ஆர்வம் பெருகும். உடல்சோர்வு உண்டாகும். வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ ரங்கநாதர். அதிர்ஷ்ட எண்: 7, 9, 3, 1 அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே அதிர்ஷ்ட எழுத்துக்கள்: **L, H**




**துலாம்:** மனதில் மகிழ்ச்சி பெருகும் வாரம். பாராட்டுக்கள் கூடும். வேலை பளு அதிகரிக்கும். புதிய முயற்சி பலன் அளிக்கும். குடும்ப சந்தோ'ம் கூடும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். அனுகூலமான போக்கு நிலவும். தந்தை நலன் கூடும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். மனகலக்கம் உருவாகும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். காரிய தாமதம் ஏற்படும். கடன் பிரச்சனை குறையும். கற்பனை ஆற்றல் பெருகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். அர்ச்சனையால் பிரச்சனை குறையும். பணிவு அவசியம். அலைபேசி செய்தி ஆனந்தம் தரும். உடல்நலனில் அக்கறை தேவை. வெகுமதிகள் சேரும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. கனவு பலிதமாகும். பெற்றோர்களின் ஆதரவு அதிகரிக்கும். எண்ணங்கள் ஏற்றம் தரும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. விரும்பிய பொருள் சேரும். உணவு விடுதி லாபம் தரும். மாணவர் பாராட்டு பெறுவர். சுபிட்ஷங்கள் பெருகும். வீண் விரயம் அதிகமாகும். புதிய தொழில் அமையும். பணவரவு தாமதமாகும். பகைவர் பணிந்து நிற்பர். குடும்ப பாசம் அதிகரிக்கும். உலோகத் தொழில் உயர்வு தரும். காரியம் இழுபறியாகும். பொருளாதார உயர்வு ஏற்படும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். தோல்விகள் விலகும். தொல்லைகள் குறையும். பிள்ளைகள் கல்வி மேம்படும். புதிய வாய்ப்புத் தேடி வரும். ஜவுளித்தொழில் உயர்வு தரும். மற்றவர் தொல்லைகள் குறையும். வீண் பழி அகலும். நிர்வாகத் திறமை கூடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. வாழ்க்கை வசதி பெருகும். அறிவாற்றல் பளிச்சிடும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். பணியில் உயர்வு உண்டு. வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன் அதிஷ்ட எண்: 3, 5, 9, 4 அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு அதிர்ஷ்ட எழுத்துக்கள்: **R, V**




**விருச்சிகம்:** போட்டிகளால் பொறுப்பு கிடைக்கும் வாரம். விவசாயம் பலன் தரும். பித்தளைத் தொழில் லாபம் தரும். பிரார்த்தனை நிறைவேறும். எதிர்ப்புக்கள் அடங்கும். சிறப்புக்கள் சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். வாய்ப்புக்கள் கூடி வரும். பொருள் வரவு திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். பணியில் உயர்வு உண்டு. புதிய பதவிகள் கிட்டும். நன்மதிப்பு கூடும். தொழில் வழித்தொல்லை குறையும். பயணம் ஆதாயம் தரும். இலக்கிய ஆர்வம் கூடும். ஏற்றமான தருணம் அமையும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். மனஅமைதி கூடும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். தெய்வீகப் பற்று கூடும். வியாபாரம் செழிக்கும். வீண் செலவு குறையும். அதிருப்தி அதிகரிக்கும். அமைதியாக இருப்பது நல்லது. புதிய முதலீடு தவிர்க்கவும். திக்கற்ற நிலை மாறும். ஒப்பற்ற பலன் சேரும். தொழில் திறமை பளிச்சிடும். அலட்சியப் போக்குத் தவிர்க்கவும். பொருள் ந'டம் ஏற்படும். நிதானம் தேவை. அரசியல் ஆதாயம் உண்டு. மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். பணியில் செல்வாக்கு சேரும். தொழில் மந்த நிலை காணும். சிக்கன நடவடிக்கை தேவை. தாயார் உடல்நலம் பாதிக்கும். தகுதிகள் மேம்படும். தனவரவு சீர்படும். சுயத்தொழில் லாபம் தரும். சோதனைகள் தீரும். பாதிப்புக்கள் ஒழியும். அன்னதானம் செய்வதால் அதிர்'டம் கூடும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். குதூகலப் பயணம் உண்டு. முயற்சிகள் நிறைவேறும். வேண்டாத நட்பு விலகும். வேண்டிய உதவி கிட்டும். வெற்றிக்கான வழி பிறக்கும். தொழில் வர்த்தகம் விரிவடையும். தோல்வி நிலை மாறும். வழிபட வேண்டிய தெய்வம்: குபேர பகவான். அதிர்ஷ்ட எண்: 2, 4, 9, 1 அதிர்ஷ்ட நிறம்: வைலட் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: **G, T**

(தொடர்ச்சி _26_ பக்கம்)



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் 1058

## திருமங்கலாய் சிவன் கோவில்
## திருக்கரைசையம்பதி, திருகோணமலை

*" வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவால வாய்ச
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. "*

திருகோணமலை, திராவிட மக்களாகிய தமிழர்களின் தொன்மையான வாழ்விடமாக விளங்குகின்றது. இப்பிரதேசத்திலுள்ள கோவில்களுள் பலவும் மன்னர்களால் கட்டப்பட்டு மானியங்கள் வழங்கப்பட்டு சிறப்போடு பேணப்பட்டது. திருகோணமலையைச் சார்ந்த பல கிராமங்கள், தமிழ் மக்கள் மட்டுமே வாழ்ந்த கிராமங்களாகக் காணப்பட்டு, பேரினவாதிகளால் திட்டம்போட்டு தமிழர்களுடைய வாழ்விடங்கள் அழிக்கப்பட்டும், குடியேற்றத்திட்டங்களாக மாற்றப்பட்டும் வருவது கண்கூடு. இவ்வாறான பல சைவத்தமிழ் கிராமங்கள் தமிழ்மக்கள் வாழ்ந்த சுவடே தெரியாமல் அழிக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசங்களில் காணப்பட்ட சைவக் கோவில்களும் குண்டுவீச்சுகளுக்கு இலக்காகி அழிந்துள்ளன.

தற்காலத்தில் நிகழும் இன அழிப்புப் போரின் காரணமாக சம்பூர், மூதூர், கொட்டியாரப்பற்று போன்ற கிராமங்களிலிருந்த தமிழ்மக்கள் வெளியேறியும், வெளியேற்றப்பட்டும் காணப்படுகின்றார்கள். இப்பிரதேசங்களிலுள்ள ஆலயங்கள் தீபமேற்றுவாரின்றி அழிவைநோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. குண்டு வீச்சுக்களின் காரணமாக திருகோணமலைக்கிராமங்களிலுள்ள ஆலயங்கள் அழிந்துள்ளன. எஞ்சிய ஆலயங்களிலும் தீபமேற்றும் சந்தர்ப்பம் இல்லாது மக்கள் வெளியேறியுள்ளனர். ஆலயங்களில் தீபமேற்றச் சந்தர்ப்பம் கிடைக்காத நாடு, நாளடைவில் துன்பத்தைநோக்கிச் சென்று, காலகதியில் அழிந்து சின்னாபின்னமாவிடும் என ஆன்றோர் கூறியுள்ளனர். இவ்வாறான ஒரு நிலையை இன்று ஈழம் எதிர்நோக்கியுள்ளது..

திருகோணமலையைச் சார்ந்துள்ள கிராமங்களின் பெயர்களை நோக்கும்போது அரிய தமிழ்ப்பெயர்களைக் கொண்டனவாகக் காணப்படுகின்றன. திருமங்கலாய் என்பதிலுள்ள திருமங்கலம் என்பது, அரசர்களோடு தொடர்புடைய சொற்பதமாகவும், மங்கலம் என்பது சிவனைக் குறிப்பதாகவும் காணப்படுகின்றது. அரசர்களால் அமைக்கப்பட்ட சிவன்கோவில் இருந்த இடத்திற்கு திருமங்கலாய் என்ற காரணப் பெயர் ஏற்பட்டிருக்கலாமோவென்ற எண்ணமும், அதன் பெயர் அமைவும் வியப்பளிப்பதாகக் காணப்படுகின்றது.

திருமங்கலாய் சிவன்கோவில் அமைந்துள்ள கொட்டியாரப்பற்றிலுள்ள கிராமங்களின் சரித்திரப்பின்னணிகளையும், அங்கேயிருந்து அழிந்துபோன ஆலயங்களின வரலாறுகளை ஆராயும்போது, திருக்கரைசையம்பதியை மத்திய ஸ்தானமாகக் கொண்ட ஒரு சைவசாம்ராச்சியமே இங்கிருந்து கோலோச்சி மறைந்துவிட்டதைக் காணமுடியும்.

திருமங்கலாய் சிவன்கோவிலின் அமைவு இதற்கொரு சான்றாகக் காணப்படுகின்றது. கிளிவெட்டியிலிருந்து திருமங்கலாய்க்குப் போகும் மார்க்கத்தில் நாலு கிலோமீற்றர் தூரத்தில் காட்டுப்பாதையினூடாக இக்கோவில் காணப்படுகின்றது. தற்போது இந்த ஆலயம் பெரும்பாலும் அழிந்த நிலையிலேயே காணப்படுகின்றது. இவ்வாலயத்தின் கர்ப்பக்கிரகம் சிதைந்துள்ளது. அர்த்தமண்டபம் சிதைந்தநிலையில் பாதுகாக்கப் பட்டுள்ளது. மகாமண்டபமும் மற்றும் ஆலயக் கட்டிடங்களும் அத்திவாரமட்டத்தில் சிதைந்து மண்ணில் மறைந்து கிடக்கின்றன. இவ்வாலயத்தின் அத்திவாரத்தை நோக்கும்போது, பெரும் கருங்கற்களால் அமைக்கப்பட்டுக் காணப்படுகின்றது. இக்கோவிலின் கட்டிட அமைப்பு முறையை ஆராயுமிடத்த, இவ்விடத்திலே மிகப் பெருங்கோவிலொன்று காணப்பட்டு அழிந்தமைக்கான சுவடுகள் காணப்படுகின்றன.

இக்கோவில் மூர்த்தி, தலம், தீர்த்தம் அனைத்தும் கொண்டு அமைந்திருந்ததோடு, இவ்வாலயம் சிறப்பான நிலையில் இருந்தமைக்கான சான்றாக, இவ்வாலயத்திற்கான தலபுராணம் காணப்படுகின்றது. தலபுராணம் பாடப்பட்ட ஆலயங்கள் பிரசித்தியும், மகத்துவமும் பெற்ற ஆலயங்களாகவே காணப்பட்டுள்ளன. இவ்வாறான சிறப்புக்களைக் கொண்ட இவ்வாலயம், எவ்வாறு அழிந்ததென்பது இன்றுவரை கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது.

மிகப்பெரும் ஆலயங்கள் செல்வச் செழிப்போடு இருந்துள்ளன. இவ்வாறான ஆலயங்களைத் தேடிப்பிடித்த அந்நியர், அச்வாலயங்களைக் கொள்ளையடித்தும், அழித்ததுமான செயல்களை வரலாறுகளிலே காணலாம். இரு இனங்களுக்கிடையே காலங்காலமாக நடைபெறும் உள்நாட்டு யுத்தங்களும், இவ்வாறான பெருங்கோவில்களை இடித்தழிப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு விளங்கியுள்ளன.

தற்கால அரசியல் சூழ்நிலையும் இவ்வாறான இடங்களுக்குச் செல்வதை தடை செய்துள்ளன. இப்பிரதேசங்களிலே வாழ்ந்த மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு வேறிடங்களுக்குச் செல்லும் சூழ்நிலை நிலவுகின்றது. ஐதீகக் கதைகளையும், வாய்மொழி வரலாறுகளையும் தம்முள் தேக்கிவைத்திருக்கும் பெரியவர்கள், காலவோட்டத்தில் மறைந்தும், மறந்தும் காணப்படுகின்றார்கள். இவ்வாறான சூழ்நிலையில் திருமங்கலாய் சிவன் கோவிலின் அழிவு, எவ்வாறு நிகழ்ந்தது என்பது இன்றுவரை கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது.


- வளரும்...

## இவ்வார ராசிபலன்

(25 பக்கத் தொடர்ச்சி)





**தனுசு:** நீண்ட நாள் ஆசை நிறைவேறும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். ஒத்துழைப்பு கிடைக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியால் மகிழ்ச்சி உண்டு. சகோதரியால் லாபம் உண்டு. தொழில் நிம்மதி கொடுக்கும். விவசாய விளைச்சல் அதிகரிக்கும். இனிக்கும் சம்பவம் அமையும். மாணவர் மதிப்பு உயரும். வாகன யோகம் உண்டு. தொழில் உற்பத்தி அதிகரிக்கும். நிதி நிறுவனம் லாபம் தரும். வீடு தேடி வெற்றி வரும். நற்செய்தி நாடி வரும். தடைகள் விலகும். தேவைகள் பூர்த்தியாகும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. சகோதர விசுவாசம் கூடும். பெற்றோர் நலம் கவனம் தேவை. விவாதம் தவிர்ப்பது நல்லது. உளுந்து தானம் சிறந்த பலன் சேர்க்கும். செயலில் விவேகம் கூடும். தனவரவு உற்சாகம் தரும். பணிமாற்றம் நன்மை தரும். இறுகிய நிலை மாறும். போட்டிகள் வெற்றி தரும். படிப்பில் கவனம் தேவை. கடன் கொடுப்பதை தவிர்க்கவும். பெரிய திருப்பம் ஏற்படும். பரபரப்பான சூழ்நிலை மாறும். பாராட்டு கூடும். நன்மதிப்பு உருவாகும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். வேற்று மதத்தினர் உதவி சேரும். தோற்றப் பொலிவு கூடும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். சுப காரியம் கூடி வரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். புதிய உத்தியோகம் அமையும். இடமாற்றம் நன்மை தரும். ஆரோக்கியம் அபிவிருத்தி ஏற்படும். கவலைகள் அடியோடு விலகும். சொந்த தொழில் அமையும். குடும்ப அமைதி கூடும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பெருமைகள் கூடி வரும். வறுமை நிலை மாறும். வாழ்த்துக்கள் வந்து சேரும். வாய்பேச்சில் கவனம் தேவை. வழிபட வேண்டிய தெய்வம்: இந்திரர். அதிர்ஷ்ட எண்: 3, 5, 9, 1 அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு அதிர்ஷ்ட எழுத்துக்கள்: **L, J**




**மகரம்:** வருத்தம் இல்லா வாழ்க்கையை சந்திக்கும் வாரம். ஏஜென்சி தொழில் ஏற்றம் தரும். எண்ணங்கள் ஏற்றம் தரும். உழைப்பு உயர்வு தரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். விவசாயம் விளைச்சல் தரும். கடனால் பிரச்சனை வரும். காரிய அனுகூலம் தரும். அனுகூலமான போக்கு நிலவி வரும். பூர்வீகச் சொத்து சேரும். புத்தாடை ஆபரணம் சேரும். புதிய தொழில் வாய்ப்புக்கள் கூடும். மருத்துவச் செலவுகள் கூடும். மன சந்தோஷம் கூடும். மற்றோரின் வாழ்த்து கிட்டும். விவசாயம் மேன்மை பெறும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. அந்தஸ்து கூடும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். செயல்திறமை வெளிப்படும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. ஆடம்பர அகங்கம் கூடும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். அரசியலில் புகழ் கூடும். திடீர் வரவு உண்டு. கல்வியில் மேன்மை கிட்டும். நெருக்கடிகள் நீங்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். கணவன், மனைவியின் கௌரவம் அதிகரிக்கும். காதலில் கண்ணியம் கூடும். அலைச்சல் அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். ஏற்றுமதி தொழில் கவனம் தேவை. இனிய செய்தியால் மனம் மகிழும். தொழில் சிக்கல் மறையும். இல்லத்தில் அமைதி கூடும். கற்பனை ஆற்றல் பெருகும். கடன் பிரச்சனை குறையும். நினைத்ததை சாதிக்கும் காலம். உற்சாகம் அலைமோதும். விவேகம் அதிகரிக்கும். சோதனைகள் நீங்கும். உத்தியோக ஈடுபாடு அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். ஞாபக மறதி ஏற்படும். பேச்சில் நிதானம் தேவை. திருமண வாய்ப்பு கூடி வரும். திடீர் லாபம் உண்டு. வழிபட வேண்டிய தெய்வம்: அய்யனார் சுவாமி. அதிர்ஷ்ட எண்: 4, 5, 1, 9 அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: **A, C**




**கும்பம்:** தர்ம சிந்தனைகள் அதிகரிக்கும் வாரம். மெத்தனப்போக்கு விலகும். பயணம் அனுகூலம் தரும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். விருந்தினர் வருகை உண்டு. தொழில் லாபம் தரும். நீண்ட நாள் ஆசை நிறைவேறும். மனோ தைரியம் அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை ஏற்படும். பிள்ளை வழிச்செலவு அதிகரிக்கும். உடல்நலம் கவனம் தேவை. பாதகமான சூழ்நிலை விலகும். உளுந்து சிறந்த பலன் சேர்க்கும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர். வறுமைகள் ஒழியும். தனலாபம் கூடும். தகுதிகள் உயரும். கவலைகள் ஒழியும். புதிய எண்ணங்கள் உருவாகும். கடன் பிரச்சனை அகலும். சுபச்செலவு கூடும். நண்பர்களால் உதவி உண்டு. அரசு வழி ஆதாயம் உண்டு. விவசாயம் பலன் அளிக்கும். புதிய நட்பு ஏற்படும். திறமைகள் வெளிப்படும். வெகுமதி கூடும். தனவரவுகள் உண்டாகும். மறைமுக எதிர்ப்பு விலகும். ஆபரணச்சேர்க்கை உண்டு. சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். எதிரிகள் தொல்லை உண்டாகும். காரியத்தடை ஏற்படும். கடன்சுமை குறையும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. திடீர் திருப்பம் ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. பொருள் இழப்பு ஏற்படும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. மனை வாங்கும் யோகம் உண்டு. அந்தஸ்து உயரும். உடல்நலம் சீராகும். விளையாட்டுத்துறையில் வெற்றிக் கிட்டும். சான்றோர்களின் சந்திப்புக் கிட்டும். கலைத்தொழிலில் நிலை உயரும். பேச்சில் இனிமை கூடும். திறமையால் பெருமை சேரும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். பயணம் அனுகூலம் தரும். வாகனச் செலவு ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். குழந்தைகளால் பெருமை சேரும். வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி. அதிர்ஷ்ட எண்: 3, 9, 6, 1 அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம் அதிரஷ்ட எழுத்துக்கள்: **I, Z**




**மீனம்:** உதவிகள் கிடைக்கும் வாரம். வெளிநாட்டுப் பயணம் உண்டு. புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். சொத்துச் சேர்க்கையுண்டு. குடும்ப ஒற்றுமை மேலோங்கும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. உறவினர்கள் வருகை ஏற்படும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். வழக்கு வெற்றி தரும். வீடு, மனை யோகம் உண்டு. எதிரிகள் பலம் குறையும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். பிரச்சனை முடிவுக்கு வரும். பதவி உயர்வு தடைப்படும். வர்த்தக தொழில் லாபம்தரும். மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். புதிய முயற்சியில் கவனம் தேவை. முன்கோபம் தவிர்க்கவும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவி கிட்டும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தொழில் இலாபம் கூடும். புதிய எண்ணங்கள் உருவாகும். செயல் திறமை அதிகரிக்கும். அரசு வாய்ப்பு தடைப்படும். தாய்வழி உறவில் கவனம் தேவை. நல்லவர் நட்பு கிட்டும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். பயணம் அனுகூலம் தரும். திருமண வாய்ப்பு கூடி வரும். பொறியியல் துறை லாபம் தரும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஆடை, அணிகலன்கள் சேரும். புகழும், பொருளும் பெருகும். புது முயற்சிகளை தள்ளி வைக்கவும். களவுப்போனப் பொருள் திரும்ப கிடைக்கும். வங்கி சேமிப்பு உயரும். பிள்ளைகளால் பெருமை சேரும். தொல்லை தந்தவர் விலகிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். பெண்களின் ஆலோசனை பூர்த்தியாகும். நன்மைகள் பெருகும். கடல் கடந்த பயணம் உண்டாகும். இடமாற்றம் நன்மை தரும். புத்துணர்ச்சியோடு செயல்படுவீர்கள். ஆன்மீக சிந்தனை மேலோங்கும். பிள்ளைகள் வழி செலவுகள் குறையும். வழிபட வேண்டிய தெய்வம்: அம்மன் அதிர்ஷ்ட எண்: 8, 2, 9, 5 அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு அதிர்ஷ்ட எழுத்துக்கள்: **N, C**

# அன்பின் தொனி - 699

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

ஆன்மீக எழுப்புதலின் முக்கியத்துவம்

ஆதலால், தூங்குகிறநீ விழித்து, மரித்தோரைவிட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார். - எபேசியர் 5: 14

எமது சபை களெல்லாம் விழித்து எழும்பி ஒரு எழுப்புதலுக்கு, ஒரு ஆன்மீக எறுர்ச்சிக்காக செயற்பட வேண்டியகால மாய்யிருக்கிறது. பரிசுத்த ஆவியா-னவரின் எழுந்து செயற்படு என்னும் சத்தத்திற்கு செவிசாய்க்கும் காலமும், நேரமுமாய் இருக்கிறது. முதலாவது பரிபூரணமான எழுர்ச்சியடைந்த சபையாகசெயற்பட்ட 120 அங்கத்தவர்கள் அடங்கிய ஆரம்ப சபை, பரிசுத்தஆவியானவரால் நிரப்பப்பட்டு செயற்பட்டதை அப்போஸ்தலர் நடபடிக்கை முதலாம், இரண்டாம் அதிகாரத்தில் பார்க்கிறோம். அவர்கள் 10 நாட்களாக ஒருமனப்பட்டவர்களாக தொடர்ந்து ஜெபித்த ஜெபத்திற்கு தேவன் பதில் கொடு த்தார். அந்த அபி‘ேகத்தோடு செயற்பட்டார்கள் 3000, 5000 என்று அறுவடையைக் கண்டார்கள். ஆதி சபை பத்து நாட்களாக காத்திருந்து ஜெபித்தது போல் அல்லாமல், இன்று தேவகிருபையினால் நாம் ஒவ் வொருவரும் இரட்சிப்படை ந்து பரிசுத்தஆவியைப் பெற்றவர்களாக இருக்கின்றோம்.

நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசே‘மாகிய சத்தியவசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்.- எபேசியர் 1: 13

இன்றய கேள்விஎன்ன வென்றால் - பரிசுத்த ஆவியானவர் எம்மை பயன்னடுத்துகிறாரா? நாம் எம்மை பூரணமாக அவருடைய வழி நடத்துதலுக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறோமா? அப்படிக் கொடுத்திருப்போமாயின், இன்று சபை களெல்லாம் விசுவாசிகளால் நிறைந்து வழிந்நிருக்குமே. எங்களுக்குள் வாசஞ் செய்யும் தேவ ஆவியானவர் எங்களை விழித்து எழும்பி செயற்பட அழைக்கிறார். நாங்கள் உடனடியாக பதில் கொடுக்க ஆயத்தமா??? எழுப்புதல் நடைபெற ஐந்து முக்கிய அம்சங்களைக் கடைப்பிடிக்க சபை விழித்து எழும்பவேண்டும், வல்லமையாக ஜெபிக்க எழும்பவேண்டும்.

நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும், நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத் தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும்,அதிகாரமுள்ளயாவருக் காகவும் அப்படியே செய்யவேண்டும். நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயி ருக்கிறது. எல்லாமனு‘ரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயி ருக்கிறார்.- 1 தீமோத்தேயு 2: 1-4

இந்த எழுப்புதலின் பலனைக்காண உண்மையோடும், உருக்கத்தோடும், கண்ணீரோடும், விசுவாசத்தோடும் அழிந்து போகின்ற ஆத்துமாக்களுக்காக, ஒருவர் ஒருவருக்காக, தேசத்திற்காக, தேவன்தாமே இடைப்பட்டு கல்லான இருதயங் களை தசையாக மாற்ற வேண்டுமென்று ஜெபிப்போம். மேலும் நற்செய்தியை கொண்டுசெல்ல ஆட்களை அனுப்ப வேண்டும் என்பதற்காகவும் ஜெபிக்கவேண்டும். அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனி ல்லாத ஆடுகளைப் போலத் தொய்ந்து போனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மன துருகி, தம்முடைய சீ‘ர்களை நோக்கி: அறுப்புமிகுதி, வேலையாட்களோ கொஞ்சம், ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார்.- மத்தேயு : 36-38

எனவே, முதலாவதாகவும், முக்கியமாகவும் ஆவிக்குள்ளாக நிறைந்து வல்லமையோடு நாம் இடைவிடா மல் ஒருமனப் பட்டு ஜெபிப்போம்.

2. வேண்டிய பரிசுத்தத்தோடு எழும்பவேண்டும் ஆகிலும் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது, கர்த்தர் தம்முடையவர்களை அறிவாரென ்பதும், கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தை விட்டு விலகக் கடவனென்பதும், அதற்கு முத்திரையா யிருக்கிறது. ஒரு பெரிய வீட்டிலே பொன்னும் வெள்ளியுமான பாத்திரங்களுமல்லாமல், மரமும் மண்ணுமான பாத்திர ங்களுமுண்டு, அவைகளில் சில கனத்திற்கும் சில கனவீனத்திற்குமானவைகள். ஆகையால் ஒருவன் இவைகளை விட்டு, தன்னைச் சுத்திகரித்துக் கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்தநற் கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்.-2 தீமோத்தேயு 2: 19-21

தொடரும் ...



மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளுர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

Lanka Salon & Spa லங்கா சலூன்
Haircut | Hair Styling | Shaving
- Men's Hair Cut
- Beard Lineup
- Kid's Hair Cut
- Hair Oil Massage
- Baby Shave
- Hair Colouring
- Facial
BARBER SHOP
• 905-808-9930
5 MCMURCHY AVE N. UNIT 12 BRAMPTON, ON L6X 2R6
• 905-783-1895
3470 PLATINUM DRIVE, UNIT 35 MISSISSAUGA, ON L5M 2S4

உதயம் 1425 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 28, 2023

# யுத்த காலத்தில் அழிந்த நிலையில் காணப்பட்ட கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தை மீண்டும் கட்டி எழுப்பி மகா கும்பாபிசேகம் செய்த வெற்றியாளர் மறைந்த நகுலேஸ்வரக் குருக்கள் ஆவார்

***— கனடாவில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் புகழாரம்***

"இலங்கையின் வடபகுதியில் நிலவிய யுத்த காலத்தில் முற்றாக அழிந்த நிலையில் காணப்பட்ட கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தை மீண்டும் கட்டி எழுப்பி மகா கும்பாபிஷேகம் செய்த வெற்றியாளர் மறைந்த நகுலேஸ்வரக் குருக்கள் ஆவார். அந்த ஆலயம் சிதைந்து போயிருந்ததை முதன் முதலாகக் கண்டு கண்ணீர் விட்டு அழுத பெருமகன் இன்று எம்மோடு இல்லை. அவரது மறைவு எமது சைவ உலகிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்""

இவ்வாறு கடந்த சனிக்கிழமையன்று கனடாவில் றிச்மண்ட்ஹில் இந்து ஆலய கலா மண்டபத்தில் நடைபெற்ற மறைந்த கீரிமலை நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களின் மறைவு குறித்த அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய சிவஸ்ரீ சோமஸ்க் கந்தக்குருக்கள் அவர்கள் புகழாரம் சூட்டினார்.





# Canadian Tamil Chamber of Commerce Congratulates Hon. Gary Anandasangaree

# அமைச்சராக நியமனம் செய்யப்பெற்றுள்ள ஹரி ஆனந்தசங்கரி அவர்களை கனடிய தமிழர் வர்த்தக சம்மேளம் வாழ்த்துகின்றது

கனடியப் பிரதமர் கௌரவ ஜஸ்ரின் ட்ரூடோ அவர்களால் கனடிய அரசின்அமைச்சரவையில் இணைக்கப்பெற்றுள்ள எமது பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அவர்களுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனம்.

சம்மேளனத்தின் தலைவர் கையெழுத்திட்டு வெளியிடப்பெற்றுள்ள இந்த அறிக்கையில் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர்களில் ஒருவரான நீங்கள் கனடாவில் ஒரு உயர்ந்த பதவிக்கு நியமிக்கப்பெற்றுள்ளதை அறிந்து நாம் அனைவரும் பெருமையடைகின்றோம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது (உள்ளே விபரமான செய்தி 19ம் பக்கத்தில்)

# றொறன்ரோவின் Strikers உதைப்பந்தாட்ட அணி பிரேசில் நாட்டின் Dani Cup Tournament இல் கலந்து கொண்டு நாடு திரும்புகின்றது





சில நாட்களுக்கு முன்னர் பிரேசில் நாட்டில் நடைபெற்ற புகழ்பெற்ற னுநனெ ஊரி வுழரசயெஅநவெ போட்டிகளில் பங்கெடுப்பதற்காக அங்கு சென்ற றொறன்ரோவின் ளுவசமைநசள உதைப்பந்தாட்ட அணி தற்போது நாடு திரும்புகின்றது. அங்கு மூன்று போட்டிகளில் பங்கெடுத்த றொறன்ரோ அணிக்கு பாராட்டுக் கேடயம் வழங்கப்பெற்றது.

பிரேசில் நாட்டில் உள்ள பலம் நிறைந்த உதைப்பந்தாட்ட அணிகளோடு நேரடியாக மோதி நல்ல அனுபவத்தைப் பெற்றுக் கொண்டு நாடு திரும்புகின்றார்கள் என றொறன்ரோவின் **Strikers** உதைப்பந்தாட்ட அணியின் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார் என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி றொறன்ரோ **Strikers** அணியில் ஒரேயொரு தமிழ் பேசும் இளம் வீரர் ஜஸ்வின் இந்துநாதன் பங்கெடுத்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த அணி பிரேசில் உதைப்பந்தாட்டப் போட்டிகளின் போது 1994ம் ஆண்டு பிரேசில் நாட்டின் தேசிய உதைப்பந்தாட்டப் போட்டியில் வெற்றி வீரராகத் திகழ்ந்த பிராங்கோ அவர்களையும் சந்தித்து அவரது வாழ்த்துக்களையும் பெற்றனர்.

# எதிர்வரும் ஆகஸ்ட் 6ம் திகதி பாரிஸ் மாநகரில் நடைபெறவுள்ள 'வெண்மேரி' விருதுகள் வழங்கும் மாபெரும் விழா

எதிர்வரும் ஆகஸ்ட் 6ம் திகதி பாரிஸ் மாநகரில் நடைபெறவுள்ள 'வெண்மேரி' விருதுகள் வழங்கும் மாபெரும் விழாவில் புலம் பெயர் நாடுகள் பலவற்றில் பல்வேறு துறைகளில் சாதனைகளை நிலைநாட்டியுள்ள 21 வெற்றியாளர்களுக்கும் ஒரு அமைப்பும் கௌரவிக்கப்படவுள்ளனர். பாரிஸ் மாநகரில் உள்ள **Les salons du Grand Paris. 94500 Champigny- sur-Marne. France** என்னும் மண்டபத்தில் இந்த விருதுகள் வழங்கும் விழா நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.




# அவுஸ்த்திரேலியா வாழ் ஈழத்து எழுத்தாளர் பேராசிரியர் ஆசி. கந்தராஜாவின் கனடா வந்துள்ளார்




அவுஸ்த்திரேலியா வாழ் ஈழத்து எழுத்தாளரும் தனது படைப்புக்களுக்காக பல விருதுகளைப் பெற்றவருமான எழுத்தாளர் பேராசிரியர் ஆசி கந்தராஜாவின் 'அகதியின் பேர்ளின் வாசல்' நாவல் வெளியீட்டு விழா கனடாவில் 29 யூலை 2023 அன்று நடைபெறுகின்றது.

நேற்று முன் தினம் கனடா வந்துள்ள அவர் நேற்று ஸ்காபுறோவில் உள்ள உதயன் பத்திரிகை அலுவலகத்திற்கு சென்று உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்களைச் சந்தித்தார். அப்போது பேராசிரியர் ஆசி கந்தராஜாவின் 'அகதயின் பேர்ளின் வாசல்' நாவல் வெளியீட்டு விழா தொடர்பாகவும் கலந்துரையாடப்பெற்றது. இங்கு காணப்படும் படங்கள் அப்போது எடுக்கப்பெற்றவையாகும் .மேலதிக விபரங்களுக்கு இத்துடன் உள்ள அழைப்பைப் பார்வையிடவும்.

